கிராம வியவஹாரிணி

O-1.6x
M99
67649

Vol. I. No. 1.

June 1899.

# GRAMA VYAVAHARINI.

கிராமவியவஹாரிணி.

A QUARTERLY TAMIL MAGAZINE

— BY —

T. VIJAYARAGAVA PILLAY,

*Secretary, Grama Vyavaharini Office, Chittoor, North Arcot District.*

Printed by T. S. Basuvappa Chetty at the Vaijayanti Press, Gay Home, Mount Road, Madras; for the Secretary.

## தினசஞ்சரிகை.

| 1899-ஆம் | ஜூன் | ஜூலை | ஆகஸ்டு |
|---|---|---|---|
| ஞாயிறு ... | ... 4 11 18 25 | ... 2 9 16 23 30 | ... 6 13 20 27 |
| திங்கள் ... | ... 5 12 19 26 | ... 3 10 17 24 31 | ... 7 14 21 28 |
| செவ்வாய் ... | ... 6 13 20 27 | ... 4 11 18 25 ... | 1 8 15 22 29 |
| புதன் ... | ... 7 14 21 28 | ... 5 12 19 26 ... | 2 9 16 23 30 |
| வியாழம் ... | 1 8 15 22 29 | ... 6 13 20 27 ... | 3 10 17 24 31 |
| வெள்ளி ... | 2 9 16 23 30 | ... 7 14 21 28 ... | 4 11 18 25 ... |
| சனி ... | 3 10 17 24 ... | 1 8 15 22 29 ... | 5 12 19 26 ... |

## சர்வஜயகாலபோதினி.

| | பகல். | | இரா. | | | பகல். | | இரா. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வாரம். கிழமை. | எது முதல். | எது வரையில். | எது முதல். | எது வரையில். | வாரம். கிழமை. | எது முதல். | எது வரையில். | எது முதல். | எது வரையில். |
| ஞா. | 7½<br>11<br>3 | 9<br>12<br>4 | 1½<br>...<br>... | 2<br>...<br>... | வி. | 10½<br>மாலை 6 | 12<br>... | 10½<br>12<br>... | 11<br>1½<br>7 |
| தி. | காலை 6<br>...<br>3 | 7<br>...<br>4 | 7½<br>10½<br>1½ | 9<br>11<br>3 | வெ. | 1<br>5 | 1½<br>மாலை 6 | 12<br>3 | 1<br>4 |
| செ. | 12<br>5½ | 1<br>மாலை 6 | ...<br>10½ | ...<br>12 | சனி. | 7½<br>5 | 8<br>மாலை 6 | 9<br>4 | 10<br>4½ |
| பு. | 9<br>1½<br>4<br>4½ | 10<br>3<br>4½<br>5 | 2<br>3<br>...<br>... | 3<br>4½<br>...<br>... | | | | | |

நோட்.—பஞ்சாங்கத்தில் ஸ்பஷ்டமாய் கண்டிருப்பதாம் ...பட்டுப்போயிருப்பதுமாகிய, அமங்கள யோக காலங்களிலாவது, தியாச்சியகாலத்திலாவது, ஜனிக்கின்ற பிள்ளைகள் ...தமுள்ளதாகமாட்டாது.

67649

# SCRAP NOTES & REVIEW.

ON THE FIRST ISSUE (JUNE 1899) OF

## "GRAMA VYAVAHARINI,"

*(a Popular Tamil Magazine, Published Quarterly.)*

The aims and objects of this magazine are to make it a source of instruction and recreation and a medium of wholesome reading for native homes and to offer to the village officers and the agriculturists, a treatise on such of the portions of the Acts and orders &c., &c., as are absolutely necessary in their daily life. This is evidently the first of its kind in design and arrangement.

II. The Journal is comprised of two parts. **Part I** deals with the varied and interesting subjects of home life among the masses. This is commenced and concluded with **Benedictions** in prose with courteous and loyal lines of *Poetry, as without* **Divine** aid, no progress in the undertaking can be expected.

### Nos. 1 and 14.—The Prayers.

In this, it is prayed that the Providence will continue the perpetual prosperity of the British Government and of its allied powers, Zemindars, Mittadars and other subjects and the advancement of loyalty and devotion of its subjects who have so long participated in the incalculable blessings of justice, of security, of liberty of thought, speech and action; that the hand of God which placed the crown of the Empress of India on the head of our much beloved **Gracious Queen of Great Britain** may remain unchanged for ever; and that she may live long to rule over us in peace and everlasting happiness with renewed health and strength.

That our **Streemath Hiranya Garbhayaji Ravikula Rajah Muthu Vijayah Raghunatha Baskara Swami Sethupathi** Avargal, the Zemindar of Ramnad in whom the S...

## தினசந்சரிகை.

| 1899-வரு | ஜூன் | | | | | ஜூலை | | | | | | ஆகஸ்டு | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 6 | 13 | 20 | 27 |
| திங்கள் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 3 | 10 | 17 | 24 | 31 | ... | 7 | 14 | 21 | 28 |
| செவ்வாய் . | ... | 6 | 13 | 20 | 27 | ... | 4 | 11 | 18 | 25 | ... | 1 | 8 | 15 | 22 | 29 |
| புதன் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 5 | 12 | 19 | 26 | ... | 2 | 9 | 16 | 23 | 30 |
| வியாழம் ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 6 | 13 | 20 | 27 | ... | 3 | 10 | 17 | 24 | 31 |
| வெள்ளி ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 7 | 14 | 21 | 28 | ... | 4 | 11 | 18 | 25 | ... |
| சனி ... | 3 | 10 | 17 | 24 | ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 5 | 12 | 19 | 26 | ... |

## சர்வஜயகாலபோதினி.

| | பகல். | | இரா. | | | பகல். | | இரா. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வாரம். இருப்பு. | எது முதல். | எது வரையில். | எது முதல். | எது வரையில். | வாரம். இருப்பு. | எது முதல். | எது வரையில். | எது முதல். | எது வரையில். |
| ஞா. | 7½<br>11<br>3 | 9<br>12<br>4 | 1½<br>...<br> | 2<br>...<br>... | வி. | 10½<br>மாலை 6 | 12<br>... | 10½<br>12<br>... | 11<br>1½<br>7 |
| தி. | காலை 6<br>...<br>3 | 7<br>...<br>4 | 7½<br>10½<br>1½ | 9<br>11<br>3 | வெ. | 1<br>5 | 1½<br>மாலை 6 | 12<br>3 | 1<br>4 |
| செ. | 12<br>5½ | 1<br>மாலை 6 | ...<br>10½ | ...<br>12 | சனி. | 7½<br>5 | 8<br>மாலை 6 | 9<br>4 | 10<br>4½ |
| பு. | 9<br>1½<br>4<br>4½ | 10<br>3<br>4½<br>5 | 2<br>3<br>...<br>... | 3<br>4½<br>...<br>... | | | | | |

நோட்.—பஞ்சாங்கத்தில் ஸ்பஷ்டமாய்க் கண்டிருப்பதும் [illegible] பட்டுப்போயிருப்பதுமாகிய, அம்சகள் யோகங்களிலும் [illegible] இயாச்சியகாலத்திலாவது, ஜனிக்கின்ற பிரஜைகள் [illegible] [illegible]முள்ளனாகமாட்டார்.

67649

# SCRAP NOTES & REVIEW.

### ON THE FIRST ISSUE (JUNE 1899) OF

## "GRAMA VYAVAHARINI,"

*(a Popular Tamil Magazine, Published Quarterly.)*

The aims and objects of this magazine are to make it a source of instruction and recreation and a medium of wholesome reading for native homes and to offer to the village officers and the agriculturists, a treatise on such of the portions of the Acts and orders &c., &c., as are absolutely necessary in their daily life. This is evidently the first of its kind in design and arrangement.

II. The Journal is comprised of two parts. **Part I** deals with the varied and interesting subjects of home life among the masses. This is commenced and concluded with **Benedictions** in prose *with courteous and loyal lines of Poetry, as without* **Divine** aid, no *progress in the undertaking can be expected.*

### Nos. 1 and 14.—The Prayers.

In this, it is prayed that the Providence will continue the perpetual prosperity of the British Government and of its allied powers, Zemindars, Mittadars and other subjects and the advancement of loyalty and devotion of its subjects who have so long participated in the incalculable blessings of justice, of security, of liberty of thought, speech and action; that the hand of God which placed the crown of the Empress of India on the head of our much *beloved* **Gracious Queen of Great Britain** *may* remain unchanged for ever; and that *she may live long to rule over us in* peace and everlasting happiness with renewed health and strength.

That our **Streemath Hiranya Garbhayaji Ravikula Rajah Muthu Vijayah Raghunatha Baskara Swami Sethupathi** Avargal, the Zemindar of Ramnad, in whom the S[illegible]

India has already recognised a Champion of Tamil literature and appreciator of its glory, in the same way as it recognised in Sera Sola and Pandia kings in times of old, may live long and exercise sway over his wide domains diffusing happiness and prosperity that the rural public may be blessed, guarded and preserved with success in their standard of life and that the endeavours of this undertaking may be crowned with success.

## No. 2. A Humorous Dialogue, between a village officer and a ryot.

This conversation is about the common utility and importance of the magazine with a good number of proverbs and old sayings interspersed throughout. This is rendered interesting in good sense, breadth of view and logical power.

## No. 3. A Comical Dialogue, between a Noble, his Servant and a Poet.

This conversation is rendered interesting and runs in piling words on words, collating facts, assailing premises or conclusions advancing arguments, using the simplest forms of expressions in a plain style with rhymes throughout, thus commanding a thorough appreciation of the Indian hearers.

### Nos. 4 and 5. Abridged history of the twelve Devotees or Disciples of Vishnu, for the use of Vishnavites, as well as the history of the sixty four sacred sports of Siva for the use of Sivavites.

These narrations in prose are rendered in a simple, plain and readable style, without a mass of theological technicalities which otherwise are hardly to be understood by ordinary rural population

## No. 6. A Gleaning of the celebrated Prince Nala.

This story is a house-hold topic in every village and town since the times of yore. It is rendered in a lucid, unpretentious and ornate style with sprinklings of standard quotations to serve pleasantly as a pass-time in native homes during their leisure hours in the fields. This narration in prose and dra[ma] adds to the interest and usefulness of the Jour[nal].

## Nos. 7 and 8. Riddles, with solutions; and S[ayings] exciting laughter.

## Nos. 9 and 10. Home and Agricultural Proverbs.

These house-hold words and maxims are the property of the country women for, among Indians, the women of the family retain a larger number of such house-hold words in their memories, than any other class of the community. These beautiful, national, pithy sayings are classified under different heads or subjects alphabetically, so that those relating to particular subjects go together, facilitating one to lay his hand on what he wants.

## No. 11. Medical Notes.

This is designed for the instruction of non-professional persons and will, it is hoped, be found serviceable to the exigencies of the rural public in particular, and prove of no little service in the hour of need to those who are out of the reach of medical aid.

## No. 12. Hints on the disease of cattle.

The Agriculturists are beginning to understand that something more is required than the simple act of piety which they have hitherto depended upon for the prevention of cattle disease. They earnestly take remarkable interest in the matter concerning the health of live stock. Hence this treatise is rendered in plain language for the material advantage of the villagers.

## No. 13. A Brief Essay on Loyalty.

In this, it is impressed on the minds of the masses, the enjoyment of security of person and property; the conferring of precious gift of British literature and western science; the inestimable boon of freedom of speech and the liberty of the Press: the generosity which prompted the British rulers to raise Indians from a state of ignorance and moral stagnation; their watchfulness which is ever solicitous for the welfare of the people and ever ready to listen to their grievances and lastly that spirit of voluntary effusion of loyalty and devotion to the paramount power.

...es without saying, that the functions of the Village ...m the foundation or backbone of all the proceedings of the ...nt.

...II offers a treatise for Village officers acquiring useful ... practical knowledge which are absolutely necessary and suitable to their taste, habits and standard of life. It embraces the following subjects:

**No. 1. The contents of the Journal, the responsibility of the Journalist and an appeal to the public for its patronage.**

**No. 2. The duties, responsibilities and powers of the Village officers, their position in the village as considered by Government and the special qualifications required of them.**

**No. 3. Notification regarding the Village Officers' Special Test Examinations.**

**No. 4. Orders of the High Court, relating to Village Munsiffs.**

**No. 5. An Epitome of Cattle Trespass Act, with notes and Commentaries.**

**No. 6. An Analysis of Stamp and Registration Law.**

**No. 7. Standing orders of the Board of Revenue.**

**No. 8. A Collection of important Village orders by Collectors of Tamil Districts.**

**Nos. 3 to 8.**—The Acts and Law and orders have been abridged with the substance well and fully given. The precise, curt, or formal language of Acts and the several orders of the Board and Collectors are popularised without any violent departure from the original text and laid down in oracular sentences just quoting the authority for each dictum.

**No. 8.**—Village orders by Collectors of several Districts are given **in one view**. This deserves the important attention of the Village officers for guidance in their daily life.

These Acts and orders comprise such portions as are necessary to Village officers and ryots, instead of, being a reproduction of the above codes as found in the translations now in existence. The style adopted in this is simple, plain, and readable, easily to be understood even by Villagers of ordinary learning. Introduction of familiar and practical English words will be very sparing except where they are indispensably nec...ssary for more easy understanding.

**No. 9.—Village Sanit...on.** In this, it is dealt with the commonest causes of disea... in villages and their remedy. It deserves the gravest ...ation ... of the rural public.

**No. 10.—News and Notes.**

IV. India is purely an agricultural country and its welfare depends upon the status of the agricultural population. In southern India, the want of a useful Tamil Magazine of a standard suited to the taste of the rural public has been keenly felt, for a long time. To meet this want and to stir up the rural population from the state of social and political stagnation, the Quarterly Magazine under the title of "Grama Vyvaharinee" has been started.

**V.** We would now leave the Journal in the hands of our readers, in the full assurance that this specimen of the first issue will meet with their approval. The success or failure of this undertaking is surely at the mercy of the public who appreciate the glory of the Tamil Literature.

**VI.** It is hoped that philanthrophic gentlemen will do the favour of making known the usefulness of this cheap Magazine and patronizing it amongst their friends and correspondents in the city or village. Further, it is hoped, that the Zemindars, Jaghiredars, Mittadars and other Gentlemen, who have generous and philanthrophic interest and concern in the diffusion of knowledge and development of Tamil literature among the agriculturists will oblige us by encouraging the distribution of a good number of copies of the Journal throughout the Zemindari, Jaghire, Mitta &c.

**VII.** For the stability of this Journal, the establishment of a Printing press of our own is the first requisite. To secure this, much of pecuniary aid is indispensably necessary. Nothing really useful or creditable can be achieved in the world without earnest application, perseverance and material help.

**VIII.** The sympathy of the patriotic and philanthrophic gentlemen will, therefore, it is hoped, be enlisted on behalf of this undertaking, to secure a permanent support to the Journal by becoming a friend and supporter and by contributing a donation

of Rs. 10 **in advance.** This payment gives the donor, the privilege of having a copy free in all the t[illegible]es till the Journal is in existence, *i. e.*, without any furthe[illegible] [illegible]ment of subscription.

**IX.** In order to place th[illegible] [illegible]rnal within the reach of the masses, the price has been fixed [illegible] as Rupees 2-2-0 per copy inclusive of postage per year a[illegible] Rupees 2-5-0 by V. P. P., **payable in advance.**

**X.** Intending subscribers can [illegible]er the Journal by V. P. P. or by money order, by sending their address to the undersigned.

**T. VIJAYARAGAVA PILLAY,**
*Secretary*, **Grama Vyvaharinee Office,**
*Chittoor, North Arcot District.*

ஸ்ரீ

# கீர்த்தனை.

இராகம் - காபி - தாளம் - சாபு.

## பல்லவி.

இன்றே சுதினம் அம்மா! மங்கையர்களே,
இன்றே சுதினம் அம்மா!

## அநுபல்லவி.

நன்றே பெருகும் வடஆர்க்காடுசீமை மாது பெற்ற [இன்றே.
நயகுண "கிராம வியவஹாரிணி"யை நாமெல்லாம் காணவுற்ற

## சரணங்கள்.

இந்த தென் தேச குடிகளெலாம்—ஒன்றுகூடி
இனிதாத் தந்தனரே வந்தனம்
இந்த மாதைக் காண்ப தெந்த நாளென்று நொந்த
சிந்தா குலம் தீரத் தரிசனம் இவள்தந்த இன்றே.

நித்திய தரித்திரத்தாலே—வருந்துவோர்க்கு
நிதி கிடைத்தாப்போலே,
உத்தம "கிராம வியவஹாரிணி" உகந்தருள் ஞானதீபம்
உயர் சேவை தந்ததாலே ஒழிந்தோமே மனஸ்தாபம் இ..

மங்கையரே வாரீர் "கிராம வியவஹாரிணி" வினோதை
மகத்துவத்தைப்பாரீர்
பங்கயமலர் தூவிப் பல்லாண்டு மிகப்பாடும்
பாக்கிய மிவளென்று பரிந்து நீர் கொண்டாடும் இன்றே.

# கிராம வியவஹாரிணி.

1899ஞு ஜுன்மீ

## விஷயங்கள்.

### முதல்பிரிவு.

பக்கம்.

1. பக்த விஜயம், அல்லது தெய்வவணக்கம் ... 1
2. கிராமஸ்தருக்கும், கிராமகுடிக்கும்விவேக சம்பாஷணை, ... 3
3. கவிஸ்ரேஷ்டர், பிரபு, பிரபு சேவகன், இவர்களிடை விநோதசம்பாஷணை ... 9
4. ஆழ்வாராதிகள் வைபவம்... 13
5. திருவிளையாடல் புராணம்... 17
6. நள-தமயந்தி சரித்திர சார சங்கிரஹம் ... 21
7. விகட விநோதங்கள் ... 29
8. விகதைகள் ... 31
9. குடி வாழ்க்கை பழமொழிக் கோர்வை ... 33
10. பயிர்வகை பழமொழிக் கோர்வை. ... 35
11. வைத்தியகுறிப்புகள் ... 37
12. கால்நடை வியாதி சிகிச்சை குறிப்புகள் ... 39
13. உபன்னியாசம், இராஜபக்தி. 41
14. மங்களவாழ்த்து ... 42

### இரண்டாம்பிரிவு.

பக்கம்.

1. சந்திரிகையின் விஷயங்கள், பத்திராதிபர் பொறுப்பு, பத்திரிகையை அபிமானிக்கவேண்டுகோள் ... 43
2. கிராமசிப்பந்திகளின் தொழில், பொறுப்பு, அதிகாரம், அவர்களிடத்தில்சம் கவர்ன்மெண்டாருக்குஉள்ள, கௌரவம், மதிப்பு, அவர்கள் தேறுதாவுக்கு உரிய முக்கிய யோக்கியதாம்சம் ... 47
3. கிராமஉத்தியோகஸ்தர்களின் ஸ்பெஷல் டெஸ்டு, என்கிற, சட்ட பரீக்ஷை விளம்பரம் ... 55
4. கிராம முன்சீபுக்கு, சம்பந்தித்த ஜெடி கோர்ட்டு உத்தரவுகள் ... 59
5,6. கால்நடை, ஸ்டாம்பு, ரெஜிஸ்டிரேஷன், சட்டசங்கிரஹம் ... 63, 71
7. ரெவினியூபோர்டு ஸ்டாண்டிங் ஆர்டர்கள் ... 75
8. தமிழ்ஜில்லா கலெக்டர்களின் கிராம உத்தரவு கோர்வை ... 79
9. கிராம சுகாதாரம் ... 83
10. வர்த்தமான குறிப்புகள் ... 87

## ரெவினியூ கிரிமினல் (மேஜிஸ்திரேட்டு) கேசுகளில்,

## அப்பீல் வாய்தா அட்டவணை.

| விவரம். | கலெக்டருக்கு (a) அல்லது டிவிஷன் ஆபீஸருக்கு (b). | போர்டுக்கு. |
|---|---|---|
| 1. பர்தர்பு (தள்ளுபடி) ஸஸ்பென்ஷன், முதலியடிபார்டுமெண்டு உத்தரவுகளின்பேரில். | 30 நாள். | 40 நாள். |
| 2. 1895-ம்-ஞு 3-ம் ஆக்டின் விஷயமாக ஜாரீ செய்த உத்தரவுகளின் பேரில். | 1 மாதம். | 3 மாதம். |
| 1864-ம்-ஞு, 2-ம் ஆக்டின் கீழ், டீறு ஏலம் போட்டவகையில், ஜாரிசெய்த டிவிஷனல் ஆபீஸர் உத்தரவுகளின் பேரில். | (a) 30 நாள். | ... |
| தர்க்காஸ்து உத்தரவுகளின், பேரில். | (b) 30 நாள். | 40 நாள். |
| 1822-ம்-ஞுத்து 9 - வது சட்டவகையில் ஜாரி செய்த உத்தரவுகளின் பேரில். | கலெக்டர்துரை அதை (ரிவைஸ்) புனர் ஆலோசனை செய்யலாம். | 3 மாதம் |
| (a) 1865-ம்-ஞு 8-ம் ஆக்டின் கீழ் செய்த ஜப்தி விஷயத்தைப்பற்றி. | (b) 30 நாள். | ... |
| (b) „ சில ஏல சோதனைப்பற்றி. | (b) 1 மாதம். | ... |
| (c) „ இஜக்மெண்டு வாரண்டின்பேரில் | (b) 15 நாள். | ... |
| (d) „ வெறுட்டுகளில் ஜாரியான தீர்மானங்களின் பேரில். | ஜில்லா கோர்ட்டாருக்கு 30 நாள். | ... |
| (a) 1886-ம்-ஞு 2-ம் (வருமானவரி) ஆக்டை அனுசரித்து ஆக்ஷேபனை மனு (பிடீஷன்). | வரிபோடும் ஆபீஸருக்கு, 30 நாள். | ... |
| (b) „ ரிவிஷன் பிடீஷன் கேசுகளில். | (b) (தீர்மான தேதி முதல்) 30 நாள (ஸெ. 28). | ... |
| இதர விஷயங்களில் அல்லது பாபுகளில். மேஜிஸ்திரேட்டு கேசுகளில். | (a) 3-மாதம். அப்பீல் கோர்ட்டு, 30 நாள். | ... |

THE GRAMA VYAVAHARI...

# கிராமவியவஹாரிணி.

புஸ்தகம் 1. சித்தூர், 1899 ஞ் ஜூன்மீ நெ. 1.

## PART I.

## COMMENCING PRAYER.

## பக்தவிஜயம் என்கிற கடவுள் துதிக்ருதி.

உயிர்களின் உசித நேஸா
உலகமெங்கும் உறைகின்ற விஸா
உலாவும் உயிரைப்படைத்த சத்தியா
எங்கும்நிறைந்த விசித்ர பரமதயாளா !!!

1. நம் தேசத்தாருக்கு, உதாரத்துவமாய் ஸர்வசுதந்தரம் கொடுத்து, கருணையேவடிவமாககொண்ட, பிரிடிஷ்ராஜ்யம் தழைதது, ஓங்கிவளர, நம் ஆளுகையாரிடத்தில், இத் தேசத்தாருக்கு உண்டாயிருக்கும் உண்மையான இராஜபக்தி, குறையாமல் விளங்க, ஒவ்வொரு உள்ளத்திலும், தேவரீர் குடிகொள்வீராக.

2. இந் நாட்டில், மாராது மழை பொழிந்து, செந்நெல் விளைந்து, வித்தையும், புத்தியும், இராஜ்ய தந்திரமும், செல்வமும், அபிவிருத்தியாகவும், சிறந்த தான தருமமெல்லாம், செழிப்பாய் பெருகவும், தேசா தேச மன்னர், செல்வாக்குடன் மகிழவும், ஞானோபதேசஞ் செய்யும் மடாதிபதிகள், பாவலர் போற்றும் காவலர்கள், சபாரஞ்சித நேயர்கள், சர்வ குணாலங்கிர்த பூஷணர்களான ஜமீந்தார்கள், மிட்டாதார்கள் முதலியோர் செல்வம் செழித்து ஓங்கவும், மற்று முள்ள, மேலோர் கீழோர், சுகமுடன் வாழவும், தேவரீர் கிருபா விலாஸம் புரிவீராக.

3. இத்தேசதுரைத்தன சம்பந்தமான சகலவித வியவஹாரங்களுக்கும், மூலாதாரமாய் விளங்கும், கிராமகுடிகளையும், கிராம நவுகர்களையும், தேவரீர் ஸர்வவியாபக சித்விலாசத்தில் லயமாக்கி, தேவரீர் தெய்விகத்தையும், பரிசுத்தத்தையும் அறியவும், பிரதி அராசை ஒழியவும், ராஜபக்தியை உணரவும், தேவரீர் பாதாரவிந்தங்களை தயைபுரிவீராக.

4. நம் கிராமகுடிகள், கிராம நவுகர்கள், இவர்களின் வியவஹாரஞானத்தை விருத்திசெய்ய, "கிராமவியவஹாரிணி" எனும் பெயர் கொண்ட இச் சஞ்சிகையை, பிரஸுரஞ்செய்ய உடன் பட்ட எங்கள் முயற்சி, கோடாது வளரும்படி, தேவரீர் பரிபூரண கிருபைபுரிவீராக.

5. தேவரீர் சந்நிதானத்தில், நம் கிராமஸ்தர்கள் அடையும் ஆனந்தம் க்ஷணமாத்திரை உடையதாகாமல், அவர்கள் வாழ்நாள் முழுமையும் இனிய

தாக்கி, தேவரீர் ரட்சணைஸான்யயில் இருத்தி, உகை வழியில் அவர்களைத் திமை அணுகாது அருள் புரிவீராக.

6. தேவரீர் திருநாமமிர்தம், எங்களில் ஒவ்வொருநாவும் தெவிட்டாது நுகர, கிருபை செய்வீராக.

7. தேவரீர் திருட்கமலங்களை அடைந்த எங்களுக்கு, அப்யங்கொடுத்து அருள்வீராக.

8. தேவரீரை விட எங்களுக்கு வேறுகதியில்லை. இது உண்மையாத லின், நயாக்கியாகிய தேவரீர் எங்களை கிரஹிப்பீராக.

9. ஸர்வஸாம்ராச்சிய நித்திய பிரபுத்துவம் தேவரீருடைய தாவதாக
[illegible]

# A DIALOGUE BETWEEN A VILLAGE OFFICER AND A RYOT REGARDING THE JOURNAL.

## விவேக சம்பாஷணை.

### கிராமஸ்தருக்கும், கிராமகுடிக்கும் சம்பாஷணை.

கிராமஸ்தர்.—கிராமவாசியாகிய, ஓர் குடியைப்பார்த்து, அப்பா! சித்தூரில் 'கிராம வியவஹாரிணி' என்னும் பெயரையுடைய ஓர் சஞ்சிகை பிரசீரம் ஆவதாக விளம்பரம் ஒன்றுல் தெரிய வந்தது. அதற்கு எழுதிவரவழைப்போமா?

கிராமகுடி.—அதை ஏன் வரவழைக்கவேண்டும்?

கிராமஸ்தர்.—கற்பக விருக்ஷத்தின் கீழ் இருப்பவன், போஜனம் உண்ணுமல் பட்டினி இருப்பது போலும், காவிரி யாற்றின் கரையில் இருந்தும் தாகத்தை தணித்துக் கொள்ளாத கசடனைப் போலும், 'கிராமவியவஹாரிணி' என்னும் சஞ்சிகை வெளிப்பட நல்ல சமயம் வாய்த்தும் அதை உபயோகிக்காமல் இருந்து விடலாமா? கண்டதைக் கற்கப்பண்டிதனுவான் என்றும் இருக்கிறதே. ஆகையால், அதை வரவழைத்து வாசித்து அதில் உள்ள ருசியை அறிந்து பிரயோஜனமுள்ள பொருள்களை உள் கொள்ளவேண்டும்.

கிராமகுடி.—அந்த சஞ்சிகையை வாசித்துப்பார்த்தால் ருசி நாவுக்கு தெரியுமா? பொருள் வயிற்றிற்குள்ளே வந்து விடுமா?

கிராமஸ்தர்.—அதை வாசித்தால் ருசி அறிவுக்குத் தெரியும். பொருள் மனதில் வரும்; அதனுல், இராஜ்ய தந்திர ஞானம் மேவிடும். அறிய அறிய கெடுவார் உண்டா? அறிவு ஆர் அறிவார்? ஆயந்தவர் அறிவார், எனவும் இருக்கிறதே.

கிராமகுடி.—இதற்குத் தானு பணம் கொடுத்து வாங்குவது? ஆடிப்பழஞ் சோறும், ஆகன்ப் —ாய் வற்றலும் தேடித்தின்றவனுக்கு தெய்வலோகம் கிடைக்கும் —பதுபோல, அந்தபணத்திற்கு இனிப்பான பண்டங்களை வாங்கி —லுல் வாய்க்கு இனிப்பாய் இருக்கும். வயிறு நிறையுமே. அ— —து, தீபாவளிக்கு பட்டாசு கட்டுகள் வாங்கினுலும் படீர் என்னும் சத்தம் கேழ்க்கலாமே?

கிராமஸ்தர்.—அப்பா! நீ தின்டிபோத்தனும், மூளையில்லாத மண்டையனுமாக இருக்கிருய். கொட்டிக் கிழங்கு பறிக்கச் சொன்னுல், சோம்பிக் கொள்வார் பண்டாரம், அவித்து உரித்து முன்னே வைத்தால், அமுது கொள்வார் பண்டாரம், என்பது

போல், நீ இனிப்பு பண்டத்தை தின்றால் இனிப்பு தொண்டை வரைக்குமா! வயிற்றில் நிறைந்தது சற்று நேரந்தானே! எப்போதும் இருக்குமா? நிர்வாணிகளுக்கு வஸ்திரப் பரீக்ஷை தெரியுமோ! மூடர்களுக்கு படிப்பின் அருமை துலங்குமோ! முரடர்களுக்கு பொறுமையின் பெருமை விளங்குமோ! நாஸ்திகர்களுக்கு கடவுளின் மகிமை தெரியுமோ! கலஸத்துக்கு தெரியுமோ கர்ப்பூரவாசனை! என்னுமாப்போல இருக்கிறதே உன் சங்கதி.

கிராமகுடி.—ஐயா! தின்பதினாலேதான் உடம்பு பருத்து பலப்படும்.

கிராமஸ்தர்.—அப்பா! நீ சொல்வது நீக்கு போக்கு கெட்டவனுக்கு தொண்டை மட்டும் வாயும் வயிறும் என்பதைப்போல இருக்கிறதே! சுடுகாட்டு நெருப்புக்கு விறகும் இடுகாட்டு மண்ணுக்கு எருவுமாகிய, உடம்பு பருத்து பலத்திருந்தால் என்ன? அப்படி அல்லாதிருந்தால் என்ன? உடம்பை இடமாகக் கொண்டிருக்கிற அறிவாகிய உடம்பு பருத்திருந்தால் அல்லவோ இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் நல்லசுகம் உண்டாகும். ஜெகத்தைக் கொடுத்து சுகத்தை வாங்கிக் கொள் என்கிறார்களே!

கிராமகுடி.—அறிவுடம்பு எதனால் பருத்துப் பலக்கும்?

கிராமஸ்தர்.—அப்பா! இஞ்சி என்றால் தெரியாதா? எலுமிச்சம் பழம்போல் இருக்கும். நாக சுரம் தெரியாதா? மத்தளம் போல் கலகல என்னும். பாண்டவாள் தெரியாதா? கட்டில் காலுபோல் மூன்றுபேர் என்று வாயால் சொல்லி, இரண்டுவிரலைக் காட்டி, நிலத்தில் ஒருகோடு எழுதினனாம், என்பவைபோல், நிரக்ஷர குக்ஷியாய் இருக்கிறாயோ? உடம்பு பருத்திருப்பதற்காக இன்னும் தின் பண்டத்தை பலவித ருசியோடு பல ரூபமாக சமைக்கிறவர்கள் சமைத்து வைப்பது போல், பல்வகை நற்பொருள்களை எல்லாம், நவரஸங்களாக அமையும்படி, பல ரூபங்களாக அமைந்திருக்கிற சஞ்சிகையை, வாசித்து, சுவைகளை அறிந்து பொருள்களை மனதில் கொண்டால், அறிவாகிய உடம்பு பருத்து பலத்திருக்கும். தன்னை அறிந்தவன், தலைவனை அறிவான் என்று இருக்கிறதே.

கிராமகுடி.—அப்பப்பா! நான் எட்டும் இரண்டும் தெரியாத பேதை? எனக்கு படிக்கத்தெரியாதே, நான் என்ன செய்வேன்

கிராமஸ்தர்.—அப்பா! உன் சங்கதி, எழுத்து அறியாதவன் ஏடு சுமந்தது போல், கண்ணில்லாதவன் கண்ணாடி சுமந்தது போல், வாசனை யறியாதவன் மலர் சுமந்ததுபோல், இருக்கின்றதே. உனக்கு வாசிக்கத் தெரியாவிட்டால் சஞ்சிகையை படிக்கத் தெரிந்தவர்களை பொருள் சொல்லச்சொல்லி கேட்டுத் தெரிந்து கொள். கடைக்காரனுக்கு தெரியுமோ? கெந்தபொடி வாசனை



கிராமகுடி.—ஆனால், உம்மிடத்திலேயே சஞ்சிகையின் சந்தாவை கொடுத்துவிடுகிறேன். நீயேவாங்கிவாசித்து பொருள் சொல்லவேண்டும். பின்னும் ஒருசங்கதி, அதாவது, சஞ்சிகையை வாசித்தால் என்னென்ன விஷயங்கள் தெரியவரும்.

கிராமஸ்தர்.—கவர்ன்மெண்டாரால் பிரசுரஞ் செய்யப்பட்டு வரும் சட்டதிட்டங்கள், ஸ்டாம்பு, ரெஜிஸ்டிரேஷன்சாரஸங்கிரஹங்கள், நில அளவைப்பற்றிய ஸர்வேவிதிகள், போர்ட்டு ஸ்டாண்டிங்கு ஆர்டர்கள், தமிழ் ஜில்லா கலெக்டர்துரைகளின் உத்தரவுகள், கிராமசுக ஆதாரவிதிகள், வைத்திய குறிப்புகள், கால்நடை வியாதி சிகிச்சை குறிப்புகள், இவைபோலொத்த வகைளான கிராமகுடிகளைப் பற்றியும், கிராமஸ்தர்களைப் பற்றியுமான, முக்கிய வியவஹாரங்களை மாத்திரம் உருட்டி, திரட்டி, சுருக்கமாயும், சுலபமாயும், தெளிவாயும், தெரிந்து கொள்ளும்படியாக எழுதப்பட்டிருப்பதை வாசித்து, அறிவு உண்டாகி, விவேகம் விசாலித்து, சகல வியவஹார நுட்பங்களை லேசாய் அடையலாம்.

கிராமகுடி.—இவ்வளவு தானா தெரியவரும். இதில் சாமானிய குடிகளுக்கு என்ன இனிப்பைத்தரும்?

கிராமஸ்தர்.—மேலேகண்ட லௌகிக விஷயங்கள் தவிர, பின்னும் அறம், பொருள், இன்பம், வீடு, என்கிற நால்வகை புருஷார்த்தங்களை அடைய கிராமாந்தரங்களில் நெடுநாளாய் வழங்கிவரும் புண்ணிய சரித்திரங்கள், ஆழ்வாராதிகள், சிவ அடியார்கள், இவர்களிட சரித்திர விபவங்கள், க்ஷேத்திரமகிமைகள், விரதாதி மகிமைகள், உலகவாழ்க்கையைப்பற்றியும், பயிர்த்தொழிலைப்பற்றியுமான பழமொழிகள், நகைப்பை உண்டாக்கும் சாதுரியமும், அபூர்வமும், நீதியுமான விகடவினோதங்கள், விடுகதைகள், முதலியவைகளையும் வாசிக்க இனிப்பைத் தரும்.

இத்தகைய பத்திரிகைகளில், அந்தந்த விஷயங்களின் உண்மைகள், அரிசியைச் சாவிப், புடைத்து எடுப்பதுபோல எடுக்கப்பட்டு, பெரியோர் கொள்கையும், உயர்ந்தகேள்வியும், மேன்மக்கள் இயல்பும், லௌகிக நடை நொடி பாவனைகளும், வேடிக்கை வினோதங்களும், உலக இயற்கையில், செய்கையில், என்னென்ன உண்டோ அவ்வளவும், உள்ளது உள்ளபடி உலகத்தாருக்கு இப்பத்திரிகை மூலமாகத் தோன்றி, அவைகளில் உண்மையும், உத்தமமும் தெரிந்து எடுக்கப்பட்டு, அதனால் அறிவும் விர்த்தியாகி, விசாலித்து, தமிழ் பாஷையும் செழித்து ஓங்குகிறது. இவ்வித நன்மைகளை யெல்லாம் அடைய முக்கிய கருவியான தமிழ் பத்திரிகையைத் தருவித்து ஜனங்களை வாசிக்கத் தூண்டுவது மிகவும் அவசியமான காரிய மென்பது யாவரும் ஒத்துக் கொள்ளபாலதே. மேலுமோ, ஆரியத்தின் மடியிலே வளர்ந்து, சங்கப் புலவர்கள்

நாவிலே சஞ்சரித்து, வித்துவான்கள் வாக்கிலே விளையாடி, திராவிட தேசம் முழுமையும் வியாபித்து வந்த அரசியை, நாம் கைவிடலாமோ? நம்மை பெற்றதுந் தமிழ்; நம் மதலைச் சொல்லால் நம் தாய் தந்தையரைச் சந்தோஷிப்பித்ததுந் தமிழ்; நாம் குழந்தை பருவத்தில் பேச ஆரம்பித்தபோது முந்தி உச்சரித்ததுந் தமிழ்; நம்மிட தாயும் தந்தையும் நமக்குப்பாலோடு புகட்டினதுந் தமிழ்; நமக்கு ஆதியில் குரு உபதேசித்ததுந் தமிழ்; நம்மிட முன்னோர்கள் பேசின பாஷையும் எழுதிவைத்த பாஷையுந் தமிழ்; நம் வீட்டு பாஷையுந் தமிழ்; நாட்டு பாஷையுந் தமிழ்.

கிராமகுடி.—பின்னும், இந்த சஞ்சிகையால் கிராமஸ்தர்களுக்கும், கிராம குடிகளுக்கு உண்டாகும் விசேஷ பிரயோசனமென்ன?

கிராமஸ்தர்.—மேலுமோ, மேற்படியார்களுடைய க்ஷேமாதி சயவிஷயங்களில் நேரிடுங் குறைகளை, தக்க சமயம்வாய்த்தபோது இந்த சஞ்சிகையில் வாதித்து எழுதி, அதற்கு இங்கிலீஷ் தர்ஜுமா செய்து, அதை இங்கிலீஷ் பத்திரிகைகள் மூலமாய், கலெக்டர் துரைகள், கவர்ன்மெண்டார், இவர்கள் நோடீசுக்கு வரச்செய்து, கிராமஸ்தர்களும், குடிகளும் சம்ரக்ஷணை அடைய இது ஓர் ஆதரவு உள்ளதாய் இருக்கும்.

கிராமகுடி.—பகவானைச் சுற்றி பக்தர்கள் மொய்க்கின்றவை போலும், ஆசாரியர்களைச் சுற்றி சிஷ்யர்கள் மொய்க்கின்றவை போலும், வேசிகளைச் சுற்றி காமிகள் மொய்க்கின்றவைபோலும், தேன் கூட்டைச் சுற்றி ஈக்கள் மொய்க்கின்றவைபோலும், பணத்தைச் சுற்றி பிரபஞ்சம் எல்லாம் மொய்க்கின்றவை போலும், இந்த பத்திரிகையை வரவழைப்பதில் ஏழைகளான என் போலிய சந்தாதார்களுக்கு விபத்து காலத்தில் ஏதேனும் பொருள் உதவி கிடைக்குமோ?

கிராமஸ்தர்.—ஒருவர் எவ்வளவு காலம் ஜீவித்திருப்பார் என்பது எவர்க்கும் நிச்சயமாகத் தெரியாத விஷயம் அல்லவா? அவர் தன் வருமானத்தில் ஏதேனும் மீதிசெய்து தான் தெய்விகமானதின் பின் குடும்ப சவரக்ஷணை செய்ய ஏற்பட்டிருக்கிற Life Insurance என்னும் கம்பெனிகளில் செலுத்தவேண்டிய பிரிமியா அதிக தொகையாய் இருப்பதால் சுவல்ப வரும்படியுள்ள கிராமகுடிகளுக்கு அல்லது கிராமஸ்தர்களுக்கு சாத்தியமானது அல்ல. இவைகளை யோசித்து, இப்பத்திரிகா, காரியஸ்தர்கள் இப்பத்திரிகைக்கு, 2,500 சந்தாதார்களுக்கு குறையாமல் சேர்ந்து முன்பணம் அனுப்பி இப்பத்திரிகையை அபிமானிக்கும்பக்ஷத்தில், அந்தப்படி வசூல் ஆகும் தொகையில், 1000 ரூபாய் வருஷப்பிரதி எடுத்து வைத்து, இது முதல் நாளது௵ ஜூன்மீ





30உ க்குள் சேர்ந்தவர்களில், யாராயினும், கிராமகுடி அல்லது கிராமஸ்தராய் யிருந்து, மீ 1-க்கு, 15 ரூபாய்க்கு மேல்படாத வருமானம் இல்லாதவர்களாயும் வேறே ஆதரவுகள் இல்லாதவர்களாயும் இருந்து தெய்வீகமாகி அது உண்மை என்பதாய பத்திரிகா காரியஸ்தர்களுக்கு ஏற்பட்ட விஷயத்தில், அவர்கள் குடும்ப சம்ரக்ஷணைக்கு, பரோபகாரமாக அவ்வவ் வருஷத்தில, அவரவர் அதிருஷ்டானுசாரம் கொஞ்சம் பொருள் கொடுத்து ஆதரிக்க எண்ணங்கொண்டிருக்கிறார்கள். இது சேத்தி கரும்பு தின்னக் கூலி கொடுப்பது போலவாம்.

கிராமகுடி.—ஐயா! இவ்வளவு பிரயோசனத்தை இதனால் அடைவோமானால் வேறு என்ன பார்க்கவேண்டும். இதுவே சகல வியவஹாரரத்நாகரம். விவேக உணர்ச்சி எனக்கு இப்போதே வந்து விட்டது. கார் அறுக்கட்டும், கத்தரி பூக்கட்டும், என இருக்கலாமா? தலை இடித்த பிறகு தாழக்குனிகிறதா? ஆலசியம் அமிர்தம் விஷம் என்னுமாப்போல் இந்த க்ஷணமே இந்த சஞ்சிகைக்கு எழுதிவரவழையும்!!! வரவழையும்!!! தாமதித்தால் என் மனம் ஏங்கும்!!! ஏங்கும்!!! ஆனால் இந்த மாதத்தில் என் வரும்படியை என் பெண்சாதி கையில கொடுத்து விட்டேன். நான் மாலை இட்ட பெண்சாதி எனக்கு எமன்போல் வந்தாள். ஆகையால், எனக்காக சந்தாவை அனுப்பினால் வருகிறமாதம் கட்டாயமாய் உங்களுக்கு கொடுத்து விடுகிறேன்.

கிராமஸ்தர்.—வேண்டுமென்றால் ஏது தான் செய்யக்கூடாது, வேண்டுமென்று நூற்றால் வெண்ணெய் மொத்தைபோல் நூற்கலாம், என்பவைபோல சமுசாரத்தினிடத்தில் கொடுத்த பணத்திலிருந்து பத்திரிகைக்கு சந்தா வாங்கி கொடுக்கக் கூடாதா? பெண்சாதி சொந்தம் போக்கு வரத்து புறம்பே', என்பது போல், உமக்கு வைக்கவுந் தெரியாது, வைத்து படைக்கவுந் தெரியாது.

கிராமகுடி.—ஐயையோ! சரியா போச்சு! நான் சம்பாதிக்கிறேன் என்று பெயர் தான். என் சமுசாரம், கேவலம் கட்டுப்போட்டாலும் எழுத்துப் பழக்கமில்லாத வளாயும், வயிற்றைக் கீறிப் பிளந்தாலும் ஓர் எழுத்தும் அகப்படாத நிரக்ஷர குக்ஷியாக இருந்தாலும் என் வரும்படியை மாத்திரம் இவ்வளவு என்று செலவையாய் கணக்கு அறிவாள். ஆகையால், ஒரு பைசா குறைந்தாலும், "ஐயத்தேரிகையே ஆண்டியோட வைவே" என்னைத் துலைத்து தலையை முழுகி விடுவாள். அவளோ கட்டுக்கு அடங்காப் பிடாரி, தடிக்கு மஞ்சின பிடா.

கிராமஸ்தர்.—கருடனைக் கண்ட பாம்புபோலவும், இடியோசைகேட்ட பாம்புபோலவும், மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்போலவும், பெண்சாதிக்கு புருஷன் பயப்படாவது, கலிகாலமோ?

கிராமகுடி.—எடாகூடம் பேசினல், அகப்பை சூனியம் வைப்பேன், சொன்னபடி கேட்டால் மாவு படைப்பேன், கேளாவிட்டால் மண்ணை வெட்டிப் படைப்பேன், என்னுமாப்போல் பயப்படாவிட்டால் பருக்கை அகப்படாது. என்ன செய்வேன். கொண்ட பெண்சாதி கூர் அறிவாளாய் இருக்கிறாள். அவளை அடக்கிப்பார்த்து கூடாமல் தான், நானே அடங்கி யிருக்கிறேன்.

கிராமஸ்தர்.—என்ன அப்பா! ஆளைக் கண்டு ஏமாற்றுமாம் ஆலங்காட்டுப் பேய்! ஏனவாயனைக் கண்டாளாம் எணிப்புக்கம் பிடித்தவளாம்; ஓடுகிறவனைக்கண்டால் துரத்துகிறவனுக்கு இளக்காரம், என்னுமாப்போல் இருக்கின்றனவே. ஆரிய நாட்டில் அடங்காப் பிடாரியை அடக்கும் விதம் வாசித்ததில்லையா? சரியாபோச்சுது. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போல், குருட்டு கோழி தவிட்டுக்கு விக்கினதுபோல், நம்பி உழுவான் மேழி எட்டாது, நம்பி கவர்னர் ஆவான் இளைப்பு ஓட்ட இல்லை, ஆசை இருக்கிறது தாசில் பண்ண அமிசை இருக்கிறது கழுதை மேய்க்க, என்பவைபோல் நீர் தானோ சஞ்சிகை வாசிக்க அபேக்ஷித்தீர். போதும் போதும் நீர் வாங்கவேண்டாம். அஸ்தமிக்குமுன் வீட்டுக்குப்போய் சேரும்.

கிராமகுடி.—இந்த சஞ்சிகையை வாங்காத நான் ஒரு மனிதனோ? இதை வாசியாத என்நா ஒரு நாவா? இதைப்பார்க்காத என் கண்களும் கண்களா? இதில் இருக்கும் பல விஷயங்களை அறியாத என் புத்தியும் ஒரு புத்தியா? என்ன வந்தாலும் வரட்டும். என் சாக்கில் பணம் இருக்கிறது இதில் ஆவது தருகிறேன். இந்தாரும் ஐயா! இதைக்கொண்டு இச்சஞ்சிகையை வரவழைக்க தயவு செய்யவேண்டும்.

கிராமஸ்தர்.—கொண்டவளுக்கு பயந்து பேடிபோல் இருக்கும் நீர் இந்த சஞ்சிகையை விடாது வாங்கி ஒரு வருஷம் வாசித்துவாரும். பிறகு உமது புத்திக்கு எவ்வளவு வியவஹாரநுட்பமும் திடமும் உண்டாகிறது என்று பார்.

கிராமகுடி.—அப்படியே, இந்த சஞ்சிகையை என் செல்வத்தாயைப்போல அன்பு பாராட்டி, காத்து, பின்னும் கிராம க்ஷேம அபிமானிகளான கிராமவாசிகளைச் சேர்த்து, இதற்கு முந்தி, பிறந்து, வளர்ந்து, கிடந்து, தவழ்ந்து, சிலநாள் இருந்து மறைந்ததுபோல் ஆகாமல், தழைத்து, செழித்து, ஓங்கி, விருத்தியடைந்து, நீடூழிகாலம் நிலை பெற்றுவாழ, இதன் அபிவிருத்தியை எந்நாளும் நானும் என்னைப் போன்ற கிராமகுடிகளும் நாட, மஹா வல்லபரான பரந்தாமனைப் பிரார்த்திக்கின்றேன்.



## A COMICAL DIALOGUE BETWEEN A POET, A NOBLEMAN AND HIS SERVANT.

## கவிஸ்ரேஷ்டருக்கும், பிரபுசேவகனுக்கும், பிரபுவுக்கும், நடந்த விநோத சம்பாஷணை.

கவிஸ்ரேஷ்டர்.—ஐயா, யாரய்யா, அது, சொரகா, புருகா, கறுக்கா, போரவர்?

சேவகன் சந்தாஜிராவு.—என்னுங்கோசாமி, நீங்கோ யாருங்கோ?

கவிஸ்ரேஷ்டர்.—கோயில் இருப்பது சாமி, நம்மை தரிப்பது பூமி, பெண்ணைக் கொடுத்தவள் மாமி, லீலை விரும்புவன் காமி, தேடிய பொருளை சேமி, பல்கால் பட்டவன் பழைய ஆசாமி, எங்கள் தமையன் வீராசாமி, பொருள் பெருத்தவன் பெரிய ஆசாமி.

சந்தாஜிராவு.—ஐயா, நீங்கோ யாரோதெரியாது, மன்னிக்கவேணும்.

கவிஸ்ரேஷ்டர்.—நான் பேசுவதை மன்னி, நீ பேசுவது பன்னி, கூந்தல் முடிப்பது பின்னி, உடலிற் பெரியது சென்னி, மானம் குமுருதல் மின்னி, என் பெண்ணின் பெயர் கன்னி.

சந்தாஜிராவு.—மெத்த பேசறு அய்யா, திட்டுவாங்கோ போல இருக்குதே.

கவிஸ்ரேஷ்டர்.—வம்பன் பேசுதல் திட்டு, வெற்றிலை விளைவது பட்டு; தாலிக்கட்டுதல் தொட்டு, இடிகவர் தாங்குதல் முட்டு, மடையன் பேசுதல் கெட்டு, கிழங்கு தின்பது சட்டு, காலில் அணிவது மெட்டு, நெற்றியில் இடுவது பொட்டு, குதிரையில் இளைத்தது தட்டு, இட்டலி தின்பது புட்டு, பிள்ளை விரும்புதல் லட்டு, நாம் வேண்டுதல் துட்டு.

சந்தாஜிராவு.—ஐயா, கோபித்துக் கொள்ளாதிங்கோ, துரையே.

கவிஸ்ரேஷ்டர்.—வண்ணான் தப்புவது துறை, உன் துணியில் இருப்பது கறை, துலுக்கன் இடுவது திரை, திருடர் இருப்பது சிறை, மூன்றாம் சந்திரன் பிறை, வயலில் விரைப்பது விரை, பறையர் அடிப்பது பறை, நான் பேசுவது முறை.

சந்தாஜிராவு.—மஹா, பிரபூ! யாரோ ஒரு அய்யா, அவர் கவிராயரோ, கபிராயரோ, என் கேழ்விக்கு ஜவாபு தரவும் இல்லை, தான் இன்னான் என்று சொல்லவும் இல்லை, கவிக் கட்டையை நாக்கோடாலியால் பிளந்து கொண்டு இருக்கிறார். பிரபுக்கள் உத்தரவு ஆனால் உள்ளேவரச் சொல்லுகிறேன்.

பிரபு.—பாயாப் புலிபோல், ஓயாக் கவிபாடும் வல்லனை, உள்ளே வரச்சொல்.

சந்தாஜிராவு.—ஓ கபி, அய்யா, உத்திர வாச்சி, உள்ளேபோங்கோ.

கவிஸ்ரேஷ்டர்.—வனத்தை மதிப்பது கபி, ஏட்டில் இருப்பது லபி, கோபங்கொண்டால் செபி.

சந்தாஜிராவு.—அட யாருவோய் ஊளையாய், உள்ளேபோ உளறுவாய், இங்கே கவ் லவ் என்று குலைக்காதேயும், போம் உள்ளே. மஹாபிரபூ, இதோ கவி அய்யா, காது சொறிந்து கொண்டு சீலைப்பேன் தேடுகிறார்.

பிரபு.—ஏ கவிராயரே, உமது பெயர் என்ன?

கவிஸ்ரேஷ்டர்.—பெயர் பெத்தவன் பாண்டியன், ஊர்திரிந்தவன் நான், பார் சுமந்தவன் சேடன், தேர் ஊர்ந்தவன் தேவன்; மீசைமுளைத்தது மானுக்கு, ஈர் முளைத்தது பேனுக்கு, வேர் முளைத்தது மரத்திற்கு, என் பெயர் சொல்லுகிறேன் கேளுங்கள்; கார்க்கொண்ட சிங்கம், கர்ணவதாரன் கனகசிங்கம், போர்கொண்ட சிங்கம், பெரியோர் வயிற்றில் பிறந்தசிங்கம், சீர் கொண்ட சிங்கம், சிறந்த இடத்தில் யான் சென்றசிங்கம், தோற்றசிங்கம், நானே கவிச்சிங்கம்.

பிரபு.—நீர் வம்பும் விம்பும் பேசாதேயும், உமது எந்த ஊரோ சொல்லும்?

கவிஸ்ரேஷ்டர்.—யார் பேசுவது வம்பு? நீர் சொல்லுவது விம்பு, கன்னான் விற்பது பித்தளைசொம்பு, கொல்லையில் விளைவது கம்பு, தண்ணீர் மொள்வது தாம்பு, கல்லில் சிவந்தது செம்பு, பலகை இணைப்பது கெம்பு, பிள்ளை விரும்புவது கரும்பு, விஷத்தைத் தருவது பாம்பு, பெண்டுகள் நோற்பது நோன்பு.

பிரபு.—உம்முட ஊர் ஏதோ சொல்லும்? இல்லாவிட்டால் சமுகத்தை விட்டு விமுகனாகும்.

கவிஸ்ரேஷ்டர்.—நாம் இருப்பது ஆர்காடு, மாங்காடு, ஈக்காடு, சித்துக்காடு, சேக்காடு, பழவேற்காடு, நோக்காடு, சாக்காடு, மூதுகாடு, வேக்காடு?

பிரபு.—ஏ கவிராயரே, ஆர்காடு, மாங்காடு, ஈக்காடு, சித்துக் காடு, சேக்காடு, பழவேற்காடு, என்கிற ஆறு ஊர்களிலுமா, நீர் இருப்பது? கவி தொடர்ச்சிக்கு சொல்லுகிறீரோ?





கவிஸ்ரேஷ்டர்.—கவி தொடர்ச்சிக்கு அல்ல 'வித்வான் ஸர்வத்ரபூஜித்' என்று பெரியோர் சொல்லுகின்றனர். கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று ஔவையும் சொன்னாள். ஆகையால் நாம் ஓர் இடத்தில் இருந்தால் பூஜிதை கிடையாது.

பிரபு.—நோக்காடு, சேக்காடு, மூதுகாடு, வேக்காடு, என்கிற ஊர்கள் சீமையில் இருக்கிறதா?

கவிஸ்ரேஷ்டர்.—நாம் இருக்கிற இடத்திலேயே இருக்கிறது. எப்படியெனில், மனிதர்களுக்கு முடிவு நேரிடுங் காலத்தில், முன்னே நோக்காடுநேரிடும், அதாவது, நோய்வரும்; பின்பு, சாக்காடு, அதாவது, சாவு நேரிடும்; அதன் பின்பு மூதுகாடு, அதாவது, சுடுகாட்டுக்கு கொண்டு போவார்கள்; பின்பு, வேக்காடு, அதாவது, கடைசியில் கட்டை வேகவேண்டியது தான்.

பிரபு.—கவிராயரே? ஏதோ வேடிக்கையாக ஓர் கவிபாடும்?

1.

வேடிக்கை விளைவது பட்டணம்
காணும்மை கேட்பது கட்டணம்
பிள்ளைகள் செய்வது சேட்டணம்
நூற்சரடு நூற்பது ராட்டிணம்.

2.

மரத்தி லுண்டாவது சொத்தை
தந்தையுடன் பிறந்த வளத்தை
காக்கைகள் தின்பது நத்தை
காற்றிற் பறப்பது செத்தை.

3.

முப்புர மெரித்தவன் புராரி
மூன்றடி வைத்தவன் முராரி
நாட்டை இழந்தவன் பாரி
நான் சொல்லுவது நிஜமே விசாரி.

4.

இலவம் தருவது பஞ்சு
அரவம் தருவது நஞ்சு
பூக்கள் முதிர்ந்தால் பிஞ்சு
ஐயம் புகுந்தா லஞ்சு.

5.

மரத்தி லுரிப்பது பட்டை
அடுப்பு எரிப்பது கட்டை
கோழிக விடுவது முட்டை
பாப்பாத்தி யடிப்பது மொட்டை.

6.

உண்பது எல்லாம் பிண்டம்
உடுப்பது எல்லாம் துண்டம்
வந்தது எல்லாம் கண்டம்
விளைவது எல்லாம் பண்டம்.

7.

விலங்கிற் பெரியது சிங்கம்
சாவடியில் செலுத்துதல் சுங்கம்
மாற்றில் மிகுந்தது தங்கம்
கலைஞர் கூடுதல் சங்கம்.

8.

தண்ணீர் கொள்வது தொட்டி
சீர்மை யில்லாதவன் மட்டி
வாணிபஞ் செய்வது செட்டி
பூனைகள் போடுவது குட்டி.

9.

விலைக்கு வருபவள் வேசி
தலத்திற் பெரியது காசி
பேரொளி யுடையவள் ராசி
காலில் மாட்டுவது பாபாசி.

10.

மத்தர்கள் சொல்வது பித்து
முத்தர்க ளாடுவது சித்து
கள்ளன் பேசுவது எத்து
நான் சொன்னது பத்து.

பிரபு.—கவிராயரே, போஜன ஸமஸ்தான பண்டிதரான காளி தாஸனை கவிஸ்ரேஷ்டன் என்று பதினாலுலோகம் பறை அடிக்கிறது. நீர் அவனிலும் சிறந்தவனோ தடை என்ன இருக்கு?

கவிஸ்ரேஷ்டர்.—போஜகவி காளிதாஸன், என் தம்பி போளிதாசன், கோபன்ன ராமதாஸன், பரமனைக் கண்டவன் பராங்குசதாஸன்.

பிரபு.—கவிஸ்ரேஷ்டரே, நீர் இன்று முதல் சாயமாக நம்மிட ஆஸ்தான பண்டிதராயிருக்க, இதோ இந்த பரிசு பெற்றுக்கொண்டு நாளை முதல் நம்மிட ஆஸ்தானத்தில் ஹாஜராய் இரும்.

கவிஸ்ரேஷ்டர்.—தேவர், ஆயுள் பெருகக்கடவது; தேவர், கீர்த்தி பரவக் கடவது; எமக்கு பெருமை கிடைக்கக்கடவது; தேவர், ஆஸ்தான பொக்கஸம் நிறையக்கடவது; கவியின் வாக்கு களிக்கக் கடவது; இப்பத்திரிகைத் தலைவர் முயற்சி ஓங்கக் கடவது; தேவரீர்க்கு சகல சம்பத்தும், 'வர்த்ததா மபிவர்த்த தாம்', என்று மாப்போலும், மூன்றாம் பிறைச் சந்திரனைப்போலும், தினே தினே விருத்தி யடையக்கடவது.

வாழி.

நம்மையுந் தமைப்போ லெண்ணும் நல்ல வாங்கிலேயர் வாழி;
செம்மையின் ராஜபக்தி சேருங் கிராமகுடிகள் வாழி;
அம்மை விக்டோரியாவி னரசினி லுரிமையாவும்;
நன்மையி னளிக்குங் கிராம வியவஹாரிணி நன்றாக வாழி.





ஸ்ரீ

வைஷ்ணவம்.

THE HISTORY OF TWELVE DEVOTEES, OR DISCIPLES OF VISHNU.

# ஆழ்வாராதிகள் வைபவம்.

நேரிசை வெண்பா.

ஐப்பசியி லோணை மவிட்டஞ் சதய மிவை
ஒப்பில்லா நாட்க ளுலகத்தீர் எப்புவியும்
பேசு புகழ்ப் பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார்
தேசுடனே தோன்று சிறப்பால்.

1. பொய்கையாழ்வார்.
2. பூதத்தாழ்வார்.
3. பேயாழ்வார்.

துவாபரயுகத்தில், அ, கூஉ, கூ0உ-வ தான சித்தார்த்தி வருஷ, ஐப்பசிமீ, சுக்கிலபட்சம், அஷ்டமி திதி கூடிய மங்களவாரம், திருவோண நட்சத்திரத்தில், கச்சி நகரில், யதோக்தகாரி சந்நிதிக்கடுத்த புஷ்கரணி தீரத்தில், பொற்றாமரைப் பூவினிடமாக, ஸ்ரீமந் நாராயணருடைய பாஞ்ச ஜந்யாம்ஸரான பொய்கையாழ்வார், திரு அவதாரஞ் செய்தனர்.

மறுதினம், அவிட்ட நட்சத்திரத்தில், திருக்கடன் மல்லை யென்னுந் திருப்பதியில், ஸ்ரீகதாம்ஸரான பூததாழ்வார், அவதரித்தனர்.

அதற்கு மறுநாள், சதைய நட்சத்திரத்தில், திருமயிலை மாதவப் பெருமாள் சந்நிதிக் கடுத்த திருக்கிணற்றில், மலர்ந் திருந்த செவ்வல்லிப்பூவினிடமாக, ஸ்ரீநந்த காம்ஸரான பேயாழ்வார், உதயமாயினர்.

இம்முதலாழ்வார்கள் மூவரும், ஜனனமரண துன்பங்களை நீக்கி பரமபதத்தை அடைவிப்பதற்கு, ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்விய சரணாரவிந்தங்களும், பாகவத சேவைகளுமே தவிர வேறு கதியில்லை யென்னும் உண்மையை உணர்ந்தவர்களாய், அவ்வித துக்கசாகரத்துள் ஆழ்ந்து உழலுகின்ற ஆத்துமாக்களை, ஸ்ரீமந் நாராயணனது திருவடிகளில் பக்திவைத்து, பரமபதம் அடைவிக்கத்தக்க முயற்சி செய்யவேண்டும் என திருவுள்ளங்கொண்டு, அந்த அந்த அவதார ஸ்தலங்களிலே எழுந்தருளியிருந்து, பின்பு, சதா

காலமும் பகவத் நாமஸ்மரணை செய்துக் கொண்டு இருக்கின்ற பாகவதர்களையும், திவ்விய க்ஷேத்திரங்கள் தோறும், அர்ச்சாவதாரங் கொண்டு எழுந்தருளி இருக்கின்ற எம்பெருமானையும், சேவிக்க வேண்டும் என்னும திருவுள்ளம் உள்ளவர்களாய், தனித் தனியாகப் புறப்பட்டு, திவ்விய தேசங்கள் தோறும் எழுந்தருளி, பகவத் சேவை செய்து, பாகவதர்களைத் தேடிக்கொண்டு, ஒருவரை ஒருவர் அறியாமலே, தட்சணை பினாகி என்கிற பெண்ணை நதியின தென்கரையில், ஸ்ரீயப்பதியான ஆயனார் எழுந்தருளிய திருக்கோவலூரைச் சேர்ந்து, எம்பெருமான் சந்நிதிக்கு எழுந்தருளி, மங்களா ஸாஸனஞ் செய்து, வெகு வித தோத்திரங்கள் பண்ணி ஆனந்த பரவஸர்களாய், திருமந்திரங்களை சபித்து, ஒருவரை ஒருவர் அறியாதவர்களாகத், தனித்தனி, வெவ்வேறு இடங்களில் எழுந்தருளி இருந்தாகள்.

சூரியன் அஸ்தமித்த பின்பு, முதலில் பொய்கை ஆழ்வார், ஒரு பாகவதருடைய திருமாளிகையில எழுந்தருளி, அங்கே இடைகழியில் சயனித்துக் கொண்டிருந்தார். பின்பு பூதத்தாழ்வாரும், சயனித்துக் கொள்ள இடந்தேடிக்கொண்டு, பொய்கை ஆழ்வார் சயனித்துக் கொண்டிருக்கிற திருமாளிகையின் வாசலில வந்து நின்று, அடியேன் படுத்துக கொள்வதற்கு இத்திருமாளிகையில் இடங் கிடைக்குமா என்று கேட்க, சயனிததிருந்த பொய்கை ஆழ்வார் கதவைத் திறந்து, சுவாமி! அடியேன்படுத்திருந்த இடம் ஒருவர் படுக்கவும் இருவர் இருக்கவும் தக்கதாக இருக்கின்றது. தேவரீரும் எழுநதருளினால் இருக்கலாம் என்று சொலல, உள்ளே எழுந்தருளி இருவருமாக இருநதார்கள். அதன் பின்பு, பேயாழ்வாரும் அப்படியே இடம் தேடிக்கொண்டு அத் திருமாளிகையின் வாசலில் வந்து நின்று, இத் திருமாளிகையில் எழுந்தருளி இருக்கின்ற சுவாமிகள் யாரோ உள்ளே படுக்க இடங்கிடைக்குமோ என்றனர். அதைக் கேட்ட இரண்டு திருநாமங்களும் எழுந்து, கதவைத் திறந்து, இந்தத் திண்ணை ஒருவர் படுக்கவும் இருவர் இருக்கவும், மூவர் நிற்கவுமே இடம் உளளது, தேவரும் எழுந்தருளினால் நிறகலாம் என்று சொல்ல, இவரும் உட்புகுந்து, மூவருமாய் நின்றுகொண்டு இருந்தார்கள். அப்போது, பக்தவத்ஸலரான பகவான், நிற்பதற்கும் கூடாத நெருக்கம் உண்டாகும்படி செய்தருள, ஆழ்வார்கள் மூவரும் அது சகியாதவர்களாகி, இது பரியந்தம் இல்லாத நெருககம் இப்போது என் சமபவித்தது என்று ஒருவருக்கு ஒருவர் சந்தேகித்து, ஞான திருஷ்டியால் பார்க்கும்போது, ஸ்ரீமந் நாராயணன் லக்ஷ்மி சமேதராய் சேவை சாதித்து அருளக் கண்டு, கண்களில் இருந்து, ஆனந்த பாஷ்பம் ஆறாகப்பெருகி ஓட, ஆனந்தசயனா! ஆபதபாந்தவா! இஹபரதேவா! என்று பலவிதமாகத் தோததிரஞ் செய்து, ஆனந்த பரவஸராய், கைகளைக் குவி





த்து நின்று கொண்டு, நின் திருவயிற்றில் அகிலாண்டங்களையுந் தோற்றுவித்து, அவ் வண்டங்களில் பிரம்மனாக இருந்து, நால் வகையோனி, எழுவகைத் தோற்றம், எண்பத்து நான்கு நூறு யிரம் யோனி பேதமான ஜீவகோடிகளை, உண்டு பண்ணும் விஷ்ணுவாக இருந்து, அவைகளை ரட்சிக்கும் உருத்திரனாக இருந்து, அவைகளை சங்கரிக்கும்சத்வ கிருத்தியத்தை மேற்கொண்ட லோகாராட்டியனே! சதா உமது திருவடிகளில் பக்திவைத்திருக்கவும், பரமபாகவதர்களைக் கூடியிருக்கவும், தேவரீரது திவ்விய மங்கள குணங்களைச் சேர்த்து, இனிய சொற்களாகிய மலர்களைக் கொண்டு, பாமாலை தொடுத்து, திருவடிகளுக்கு அன்புடன் சமர்ப்பிக்கவும், கிருபை செய்து அருளவேண்டும், என்று பிரார்த்திக்க, சங்கு, சக்கர, கதாகட்க, கோதண்டம் தரித்து, லக்ஷ்மி சமேதராகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தி, தன் முன் கண்ணீர் பெருகி, கைகுவித்து நிற்கின்ற, ஆழ்வார்கள் மூவரையும், கிருபையோடு கடாட்சித்து அருளி, நம்மிடத்தில் சதாகாலமும், பக்தி வைத்துஇருக்கிற பாகவத சிரேஷ்டர்களே, நாம் உங்கள் இருதயத்தை விட்டு, எவ்விடத்திலும், எக்காலத்திலும், பிரிந்திருப்பது இல்லை. இனி நீங்கள் லோகத்தில் அஞ்ஞானாந்த காரத்திலே அழுந்தி, ஐயோ! நம்மை அடையத்தகக உபாயங்களை அறியாத ஆத்துமாக்கள், அவ் அந்த காரத்தினின்று நீங்கி, பரமபதம், அடையும்உபாயத்தை அறியும்நிமித்தம், வேதார்த்தங்களை வெளியிட்டு, பின்பு நமது இடம் வந்து சேருங்கள் என்று, திருவாய் மலர்ந்தருளி, அந்தர்த்தானம் ஆயினார்.

அப்போது, இம்மூன்று திருநாமங்களும், எம்பெருமான், தங்களிடத்தில், நிரவதிகமான கிருபைவைதது திருவாய் மலர்ந்தருளிய வைகரியை, நினைத்து நினைத்து, அத்யந்த ஆனந்த பரவஸர்களாய், ஸ்வாமி சேவை சாதித்து அருளி, ஸ்வல்பகாலத்திலேயே மறைந்து விட்டதைக் குறித்து, மனம் உருகி, கண்கள் நீர் சொரிய நின்று, சதா உனது சேவை கிடைக்கும்படி கிருபை செய்து அருளவேண்டும் என்று பிரார்த்தித்தனர். பின்பு, பொய்கை ஆழ்வார், தாம் சேவித்த அனுபவம் தோன்ற, ஜனன மரணங்களை ஒழிக்க, ஒப்பற்ற ஔஷதமும், சம்சார சாகரத்தைக் கடக்க அழிவில்லாத கப்பலுமாகிய, தேஹளீசன் என்னும் திருநாமத்தை உடைய ஸ்ரீமந் நாராயணனுடைய குணாநுபவங்களை அமைத்து, தேவாமிருதம் போன்ற மதுர மொழிகளால் மெய்யன்போடு,

"வையந் தகளி யாவார் கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் செய்ய
சுடராழியா னடிக்கே சூட்டினன் சொன்மாலை
இடராழி நீங்கவே யென்று."

ஆதியாக, நூறு திருவெண்பாக்கள் அடங்கிய திருவந்தாதி என்னும் ஒரு திவ்ய பிரபந்தம் செந்தமிழினால் பாடி அருளினார்.

பூதத்தாழ்வார், ஸ்ரீமந்நாராயணனை தாம் அன்பினால் சேவித்த அனுபவம் தோன்ற,

"அன்பே தகளியா வார்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினே னாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்."

முதலாகத், திரு வெண்பாக்கள் நூறு கொண்ட திருவந்தாதி யெனுந் திவ்வியப் பிரபந்தம் ஒன்று, செய்தருளினர்.

பேயாழ்வார், லட்சுமி சமேதரான ஸ்ரீமந் நாராயணனைப் பக்தி பூர்வமாகத் தாம் சேவித்த அனுபவந் தோன்ற,

"திருக் கண்டேன் பொன் மேனி கண்டேன்
திகழும் அருக்கன் அணி நிறமுங் கண்டேன் செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங் கங்கை கண்டேன்
என்னாழி வண்ணன்பா லின்று."

என்பது தொடுத்து, நூறு திருவெண்பாக்களாகிய திருவந்தாதி என்னுந் திவ்வியப் பிரபந்தம் ஒன்று, திருவாய் மலர்ந்தருளினர்.

## திருமழிசை ஆழ்வார்.

நேரிசை வெண்பா.

தையின் மகமென்று தாரணியி லேத்து மந்தத்
தையின் மகத்துக்குச் சாற்றுகின்றேன்—துய்யமதி
பெற்ற மழிசைப் பிரான் பிறந்த நாளென்று
கற்றவர்கள் கொண்டாடு நாள்.

ஸ்ரீமந் நாராயணனிடத்தில், அத்யந்த பிரீதியுள்ள பாகவத சிரேஷ்டர்களாகிய, பார்க்கவர் முதலிய மஹரிஷிகள், இவ்வுலகத்தில் உள்ள சகல ஜீவாத்மாக்களும் சேவித்து, ஜனனமரணாதி துன்பங்களை நீக்கி உய்யும் பொருட்டாக, ஸ்ரீமந்நாராயணமூர்த்தி, அர்ச்சாவதாரங்கொண்டு, லட்சுமிசமேதராய், எந்த திவ்விய தேசத்தில், கிருபையோடு, சதாகாலமும் எழுந்தருளி இருக்கின்றனரோ அந்த க்ஷேத்திரத்திலேயே, தாங்கள் எப்போதும் வாசஞ் செயயவேண்டும் என்னும் அபிப்பிராயங்கொண்டு, அவ்வித திவ்ய ஸ்தலம் இன்ன தென்று தெரிந்துகொள்ளும்படிச் சத்தியலோகம் போய்ப் பிரம்மனைக்கண்டு வணங்கி நின்று பூலோகத்தில்





உ

சைவம்.

திருச்சிற்றம்பலம்.

THE HISTORY ON THE SIXTY-FOUR SACRED SPORTS OF SIVA AT MADURA.

# திருவிளையாடற் புராணம்.

என்று வழங்கும் திருவாலவாய் என்கிற மதுரையில் எழுந்தருளி யிருக்கும் கடவுளது மகிமைச் சுருக்கம்.

காப்பு.

சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெயச்
சுத்தியாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்ய பொற்பாதமே.

வாழ்த்து.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மல்குக வேத வேள்வி
வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும்
பரவுக அறங்க ளின்ப
நல்குக வுயிர்கட் கெல்லா
நான் மறைச் சைவமோங்கிப்
புல்குக உலக மெல்லாம்
புரவலன் செங்கோல் வாழ்க.

நூற்பயன்.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

இக்கணி திருவாலவா யெம்மண்ணல் திரு
விளையாட்டி னையன்பு செய்து கேட்போர்,
சக்கநிதி பதுமநிதிச் செல்வ மோங்கித் தகை
மைதரு மகப்பெறுவர், பகையை வெல்வர்,
மங்கல நன்மணம் பெறுவர் பிணிவந் தெய்தார்
வாழ் நாளு நனிபெறுவர் வானுடைத்திப்,
புங்கவராய்க் கின்ன போக முய்த்துப் புண்ணியராய்ச்
சிவனடிக் கீழ் மன்னி வாழ்வார்.

முதலாவது

# இந்திரன் பழிதீர்த்த படலம்.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

மின்பயில் குலிசப் புத்தேள்
  விருத்திராசுரனை க்கொன்ற
வன்பழி விடாது பற்றக்
  கடம்பமா வனத்தி லெய்தி
என்பர வாரம் பூண்ட
  விறைவனை யருச்சித் தேத்திப்
பின்பது கழிந்து பெற்ற
  பேற்றினை எடுத்துச் சொல்வாம்.

திரேதாயுகத்தில், இந்திராணி கணவனுகிய இந்திரன், பஞ்சதாருவி விழுவிலே, சிங்காசனத்திலிருந்து, அரம்பாஸ்திரீகளின் ஆடல் பாடல்களில் ஆசையுற்று, சந்தோஷமாயிருக்கும்போது, அங்கே, ஆசாரியனுகிய வியாழபகவான் எழுந்தருளினர். அவரைக்கண்டு வணங்காமல், அவ்வரம்பை முதலானவர்கள் மோகத்தில், மூழ்கியிருப்பதைக் கண்டு, வியாழபகவான் போய்விட்டனர். அதனுல், இந்திரனுடைய செல்வம் சிறிது குறைய, அது தெரிந்த இந்திரன், நமது ஆசாரியனைக்கண்டும் வணங்காத காரணத்தினுலே, இவ்விதக் கேடு வந்ததென்று துக்கித்து, அவர் இருப்பிடத்திற்குப் போய் பார்த்துங் காணுமல், திரிலோகங்களிலுந் தேடிப்பிரம்மலோகம் போய், அங்குங்காணுமல், பிரமாவை வணங்கித் துதித்து, நடந்த செய்திகளைச் சொன்னுர். பிரம்மதேவன், ஆசாரியனை இகழ்ந்த பாவம் வளர்வதை, உன்னை அறிந்து, ஆசாரியனைக் காணுமளவும், நீ துவட்டா புத்திரனுகிய மூன்று தலைகளையுடைய விச்சுவவுருவனென்பவன், அசுரனு யிருந்த போதினும், செய்கையினுலும், அறிவினுலும், சிறந்தவனுயிருத்தலால், அவனைக்குருவாகக் கொண்டு, உன் காரியங்களை நடத்திக்கொள்ளென, அந்தப் பிரம்மாவின் வஞ்சனையை அறியாமல், அவரை வணங்கித் திரும்பிவந்து, மிகுந்த பக்தியோடு, அந்த விச்சுவவுருவனைக் குருவாகக்கொண்டு, அவன் செய்யுங் கபடத்தை அறியாமல், சுவாமி! ஒரு யாகஞ் செய்யவேண்டுமென்று, அவனைக் கொண்டு யாகஞ்செய்வித்தார். அவன், தேவர்களுக்கு நன்மை யுண்டாகுமென்று, வெளியிற் சொல்லி உள்ளே வஞ்சகமாய், அசுரர்களுக்கு நன்மை வரும்படி, தனக்கு வருங் கேட்டை அறியாதவனுக, யாகஞ்செய்தான். அவன் மனத்திலொன்றும் வாக்கிலொன்றுமாகச் செய்வதை, அவன் சொல்லும் மந்திரங்களாலே தெரி





ந்து, கோபங்கொண்டு, தன் வச்சிராயுதத்தினுலே, அவன் மூன்று தலைகளையும் உடைத்து, தனித்தனி, கழுகும், பருந்தும், காகமுமாகப் பறந்துபோகச்செய்து, அவன் இரத்தத்தைப் பைசாசங்கள் குடிக்கும்படிச் செய்தான். அப்போது, உடனே, இந்திரனைப் பிரம்மஹத்தி பிடிக்க, தேவர்கள் அதைப் பெண்கள் மேலும், நீரின் மேலும், மரத்தின் மேலும், மண்ணின் மேலும், சாரும்படிச் செய்தார்கள். அந்த பிரம்மஹத்தியை, ஏற்றுக்கொண்ட நால்வரும், எங்களுக்கு இது விமோசனமாவது எப்படி என்று கேட்க, பெண்களுக்கு மாதவிடாயாயும், நீருக்கு நுரையாயும், மரத்துக்கு பிசினும், மண்ணுக்கு உவர்ப்பாயும், கழியக்கடவதென்ன, அந்நால்வரும் இப்படி கழிந்துக்கொண்டிருப்பதினுலே, எங்களுக்கு என்ன நன்மை யுண்டாகுமென்ன, பெண்கள் கர்ப்ப முண்டாகிப் பெறுமளவுங் கணவரைக் கூடி வாழவும், நீர் இறைக்க இறைக்க ஊறிப் பெருகவும், மரம் வெட்ட வெட்ட தழைக்கவும், மண்தோண்டின் குழி, தானே மூடிபடவும், ஆகிய இவ்வித நன்மைகளைக் கொடுத்தனர்.

பின்பு, இந்திரன், தனக்குச் சம்பவித்த பழிதீர்ந்து, விளங்குகிறதைத் தெரிந்து, துவட்டாவானவன், தன் புத்திரனை, இந்திரன் வச்சிராயுதத்தால் எறிந்து கொன்றனே என்று, கோபத்தோடு பெருமூச்சுவிட்டு, நானிங் கொண்டவனைப் பழிவாங்க நினைத்து, ஒரு கொடிய வேள்வியைச் செய்ய, அதில் அக்கினிச் சுவாலை போன்ற, செம்மயிர், அண்ட முகட்டை பொருந்த, புகை தோன்ற, பெரு மூச்செறிந்து, கொடிய விஷத்தைப்போல, விருத்திராசுரன் தோன்றியதைக்கண்டு, அவனை நீ போய் இந்திரனுடனே சண்டை செய்து, அவனைக்கொன்று வாவென்று அனுப்பினுன். அந்த விருத்திராசுரன், வடவாக்கினிபோலக் கொதித்துவர, இந்திரனும், ஐராவதத்திலேறி, பாவமும் புண்ணியமும், எதிர்த்தாற்போல, இருவரும் எதிர்த்துப் போர் செய்யும்போது, விருத்திராசுரன் மேல், இந்திரன், தன் வச்சிராயுதத்தை, ஓங்கி யெறிய, அவன் கோபங் கொண்டு, ஒரு இருப்புலக்கையால் ஓங்கி, தோளில் அடிக்க, இந்திரன் மூர்ச்சையாயினுன். மூர்ச்சை தெளிந்தபின், இவனோடு போர் செய்ய, சக்தியில்லோம் என்றெண்ணி, பிரம்மனிடத்திற் போய், தான் பட்ட துக்கத்தைச் சொல்ல, அவர், அவனை அழைத்துக் கொண்டுபோய், மகாவிஷ்ணு இடத்தில் சொல்ல, அவர் ஆலோசித்து, இந்திரனை நோக்கி, உன்னுடைய வச்சிராயுதம் மிகவும் பழயதாய் போனதினுல், பகைவரைக் கொல்லமாட்டாது. வேறே புதிதாக வேண்டும். அது கிடைத்தற்கு ஓர் உபாயம் உண்டு, என்னெனில், முற்காலத்தில், திருப்பாற்கடல் கடையும் போது, தேவர்களும், அசுரர்களும், ஆயுதங்களோடு வருதல் தகாதென்று, ததீசி முனிவனிடத்தில் வைத்து வரச்செய்தேன். பின்பு, நெடுங்காலங் கடந்து கொண்டிருந்ததனுலே, ஒருவரும் வந்து, அந்த ஆயுதங்களை கேட்க இல்லை யென்று, அந்தத்

ததீசி முனிவன் விழுங்கினதினாலே, அந்த ஆயுதங்கள் எல்லாம் ஒன்றாகி, திரண்டு, அவர் முதுகந்தண்டாயிருக்கிறது; அது, இப்போது, வச்சிராயுதமாகும். நீ போய்க் கேட்கு முன்னே அவர் கொடுப்பார்; போய்க் கேள் என, இந்திரன், தேவர்களுடனே, விரைவில், அம்முனிவனிடம் போக, முனிவன் கண்டு, அன்புடனே முகமலர்ந்து, உபசரித்து, நீங்கள், மிகவும் இளைத்து வந்தீர்கள்; நடந்ததென்ன, ஒளியாமற் சொல்லுங்கள் என்ன, இந்திரன், சுவாமி! அசுரர்களை அழித்து, எங்கள் குடிகளை ரட்சிப்பது, தேவரீரிடத்து ஒன்றுளது, அதை, இல்லை என்னாது அருள்வேண்டும். அஃது, தமது சரீரத்தில் இருக்கின்றதென்ன, எல்லாம் உணர்ந்த அம்முனிவர், சூரியனைக்கண்ட தாமரைபோல, முகமலர்ந்து, இந்தத் தேகத்தை, *நாய், நரி, தாய், தந்தை, யமன், வியாதி, பேய், முதலியவை, நமது நமது என்று மனதில் எண்ணுவது போல், நாமும் நமது என்று எண்ணப்படுகிற இந்த சரீரம், யார்க்குத் தான் சொந்தமாகும். பாம்புத்தோலும், பறவைக்கூடும், தானென்று சொல்லத்தக்கதோ? அது போல், கூத்தாடிகள் போல பஞ்சேந்திரியங்களை வாழும் உடம்பை நான் என்று எண்ணத்தக்கதோ? நடுவு நிலைமையும், அருள் உடைமையும் இல்லாத அசுரர் கெடவும், அவர்களாலே துன்பத்தை அடைந்த நீங்கள் எல்லோரும் சுகம் அடையவும், எனது உடம்பைக் கொடுத்து, இந்திரனே, அறத்தையும், புகழையும், யான் பெறுவேனே யானால், இதைவிடயான் உடம்பால் அடையும் பயன் வேறே யாது என்று சொல்லி, அந்தக்கரணங்கள் ஒருமித்து உண்டான கருத்து அறிவை யிர்க்க நின்று, பிரமநாடியாக வழியைக் கொண்டு கபாலம் உடைத்துக்கொண்டு விமானம் ஏறி, மோட்சலோகத்துக்கு போயினார்.

பின்பு, அம்முனிவனால் கொடுத்த, ஆயுதக் கூட்டமாகிய முதுகந்தண்டை, ஒரு பலமான வச்சிராயுதமாக, விசுவகர்மன் ஆசீர்வதித்து கொடுக்க, அதை இந்திரன் பெற்றுக்கொண்டு, சதுரங்க சேனைகளோடு வந்து, வஞ்சனையால் வென்று போன விருத்திராசுரனை வளைக்க, அவன், அதிக கோபாவேசத்துடன், தனது சேனைகள் சூழ, யுத்தஞ்செய்யத் தொடங்கினான்.

அப்போது, தேவசேனை வீரர்களும், அசுரசேனைவீரர்களும், நெருங்கி, வில்லை வளைத்து, பாண வருஷங்களைப் பொழிந்து, சக்கரம் முதலிய பல ஆயுதங்களை எறிந்து, பிணங்கள் மலைபோல் குவியவும், இரத்தம் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடவும், பயங்கரமான போர்செய்து அளவிறந்தவர், மாள்வதைக் கண்டு, இந்திரனும், விருத்திரனும், கோபித்து, ஒன்றுக்கொன்று, மாறுபாடான அனேக தெய்வ அஸ்திரங்களைப் பிரயோகித்து, யுத்தஞ்செய்து, அதிலும், விருத்திரன் தோல்வி அடையாததினால், இந்திரன், வச்சிராயுதத்தை எடுத்தான். உடனே, விருத்திரன், பயந்து, முற்காலத்தில், மைநாகபர்வதம் முழுகி மறைந்தது போல், கடலில் விழுந்து மறைந்தான். கூடவே, இந்திர



## AN EPITOME OF THE HISTORY OF NALA—DHAMAYANTI.

# நள-தமயந்தி சரித்திர சாரசங்கிரஹம்.

### INTRODUCTION.

### * சரித்திர ஆரம்பம்.

1. இத்தேச புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும், சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும், எச்சமையத்தாருக்கும், காணாமிர்தமாய், மேலும் மேலும் மகிழ்ச்சி அடைவதாய், நீதி, நல்லொழுக்கம், முதலியவைகளை உண்டாக்குவதாய் இருக்கின்ற நள—தமயந்தி புகழ் சரித்திரத்தை கேட்போர் செவிக்கு அருவருப்பும், காலதாமதமும், வீண் வார்த்தையும் இல்லாமல், உல்லாசமாய் ஓய்வு காலத்தைக் கழிக்க, மனோரஞ்சிதமாக இதை இயற்றப்பட்டது.

### THE CELEBRITY OF THE COUNTRY OF NIDATHA.

### *நிடத நாட்டின் சிறப்பு.

2. நிலவளத்திலும், குடிவளத்திலும், சிறப்பிலும், செல்வத்திலும், நாகரீகத்திலும், மேன்மை பெற்றதாய், கமுகஞ்சோலை, கரும்பஞ்சோலை, பலாச்சோலை, மாஞ்சோலை, வாழைச்சோலை, முதலாகிய பலனுள்ள சோலைகள், அணி அணியாக, ஒன்றை ஒன்று சூழ்ந்து ஓங்கப் பெற்றதாய், அசோகு, குருக்கத்தி, சண்பகம், பாதிரி முதலான விருக்ஷங்களால் நெருங்கப்பெற்று, தாமரை தடாகங்களும், அல்லி, நீலம், முதலான புஷ்பங்கள் மலர்கின்ற நீர் நிறைந்த ஏரிகளும், ஓடைகளும், குளங்களும், மாதம் மும்மாரி பொழிய, சகலவித பயிர்கள், மாறுதல் முப்போகமும் விளைகின்ற விளைவையுடைய வயல்கள், நெருங்கியுள்ளதாய், யானைக்கூட்டங்கள், குதிரைப்பந்திகள், சேனையிடங்கள், ஆஸ்தான மண்டபம், கல்விமண்டபம், கணக்கறி மண்டபம், விநோத மண்டபம், பாடல் மண்டபம், பரிசனமண்டபம், சித்திரமண்டபம், தேவாசிரிய மண்டபம், ஆயுதசாலை, அமுதசாலை, அறச்சாலைகளும் உள்ளதாய், கனகமாளிகைகளும், பளிங்கு மாடல்களும், மணிப்பந்தல்களும், மகரதோரணங்களும், மங்கல கோஷணங்களும், உள்ளதாய், பரம்பரையாய் அரசாக்ஷி செய்வதற்கு உரியதாய், நிடததேசம் சிறப்பைப்பெற்று இருந்தது.

## THE EARLY CAREER OF NALA.

### நள அரசின் வரலாறு.

3. இந்த நிடத தேசத்து இராஜாவான வீரசேன மகாராஜாவின் குமாரர் நள ராஜன், வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள், இதிஹாஸங்கள் முதலான கலைகளிலும், யானையேற்றம், குதிரை யேற்றம், ரதாரோகணம், வில்வித்தை, வாள் வித்தை, முதலான சமஸ்த வித்தைகளிலும், மஹாஸமர்த்தராய், அறுபத்து நான்குகலைகளிலும் வல்லவராய், ஆதிசேஷனைப்போல அறிவும், காமனைப்போல் அழகும், ஆண்சிங்கம் போல் ஆண்மையும், மதயானைபோல் நடையும், மார்த்தாண்டன் போல் வாய்மையும், கற்பக விருக்ஷம் போல் கொடையும் உடையவராய், தரும சொரூபியாய், சௌரியபராக்கிரமம், அன்பு, ஆசாரம், நீதிமார்க்கம், தயை, பரிதாபசிந்தை, இரப்பவர்க்கீதல், பிரஜைகளைக் காத்தல், பாலோடு பழஞ் சேர்ந்தாற்போல முகமலர்ச்சியோடு இனிய வசனஞ் சொல்பவராய், தனத்திலும், கனத்திலும், சொற்திறத்திலும், மனத்திறத்திலும்; குறைவு இல்லாதவராய், எல்லா உயிர்களுக்கும் இதஞ் செய்கின்றவராய், சந்திர சூரியர் திசை மாறினாலும், சமுத்திரந் தடைமீறினாலும், மகமேரு நிலைகுலைந்தாலும், அரசாக்ஷி செய்வதில், மனங்கலங்காது அசையற்று, உறவு அற்று, வியவஹாரங்களில், பழுதுவராது பாதுகாத்து, தருமமார்க்கமாக, குடிகள் கையிலே பத்தில் ஒரு கடமை வாங்கி, அவர்களுக்கு ஒரு சிந்தையும் இல்லாமல் ஆதரித்து, பெற்றதாய் தகப்பனைப்போலே அந்த நாட்டு ஜனங்களை எல்லாம் போஷித்து, தர்மம் உயர்ந்து, அதர்மம் தாழ்ந்து, அறம், பொருள், இன்பம், வீடு, என்கிற நான்கு வருணாசிரமதர்மம் குறைவு இல்லாமல் நடந்தேறி, மனுநீதி சிறந்து, மகா கீர்த்திப் பிரதிஷ்டையோடு சுகமே ராச்சிய பாரத்தை நடாத்திவந்தார்.

## NALA, COMMISSIONED THE SWAN TO PLEAD HIS CAUSE BEFORE DHAMAYANTI AND OBTAINED HER CONSENT AS HIS CONSORT.

### நளன் அன்னப் பக்ஷியை தமயந்தி இடத்துக்கு தூது அனுப்பி தன் பத்தினியாக சம்மதம் பெற்றது.

4. இது இப்படி நிற்க, தெய்வபக்தி, தயாள சிந்தை, தான தருமங்கள், முதலிய சிறந்தகுண ரூபமுள்ளவளாயும், அடக்கம், பொறுமை, அன்பு, ஈகை, இரக்கம், ஒழுக்கம், பெரியோர்க்கு கீழ்ப்படிதல், முதலிய மேலான குணங்கள், இளமையிலேயே உண்டாகி, உடைமுதலானவைகளில் மிதவாழ்க்கை உள்ளவளாயும், பத்தரை மாத்து தங்கத்தை உருக்கி வார்த்த பிரதிமைபோல் வடிவுடையவளாயும், சுக்ல பக்ஷத்து சந்திரனைப் போல் நாளும் ஒரு கலை விருத்தியாய்க் கொண்டு, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த, விதர்ப்பதேசத்து இராஜாவான வீம ராஜா மகள் தமயந்தி எனும் மாதுசிரோமணியின்மேல், நள ராஜன் மோகங் கொண்டு, தன்புஷ்ப வனத்தில் வந்து விளையாடிக் கொண்டிருந்த தெய்வ பக்ஷிகளான அன்னப்பக்ஷிகளில், ஒரு பெரிய இராஜ அன்னத்தை தூது அனுப்பி, அந்த நாயகி தன்னை விவாஹஞ் செய்துக் கொள்ளும்படி சம்மதம் பெற்றார்.





## PROCLAMATION ABOUT THE MARRIAGE OF DHAMAYANTI.

### தமயந்திக்கு சுயம் வரம் சாத்தினது.

5. வீம ராஜா, தக்க பருவம் வந்து மஹா இலக்ஷ்மி போல் திவ்ய சோபையாய் விளங்குவதைக்கண்ட சத்குண சிகாமணியான தன் அருமை பெண்ணுக்குத் தக்க கணவனைக்கண்டுகொள்ள தங்கள் குலாசார வழக்கப்படி, தமயந்திக்கு சுயம்வரம் என்று, இராஜாக்களுக்கு விண்ணப்பத்திரிகைகள் எழுதி பேரிகை சாற்றுவித்தார்.

## NALA WAS COMMISSIONED TO PLEAD BEFORE DHAMAYANTI ON BEHALF OF (GODS) DEVAHS.

### தேவர்கள் நளனை தமயந்தியிடம் தூது அனுப்பினது.

6. இந்திராதி தேவர்கள் வழியிலே நளராஜாவைக்கண்டு அவரை தமயந்தி இடத்துக்கு அவர்கள் தூதனாய்ப்போய் தங்கள் பெருமையை தெரியப்படச்சொல்லி அந்நாயகியை அவர்களுக்குள்ளே ஒருவரை கல்யாணம் பண்ணத்தக்கதாகப் பேசி அமர்த்திக்கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

## NALA'S EMBASSY.

### நளன் தமயந்திக்குத் தூது போனது.

7. தேவர்கள் கோரிக்கையின்படி, நள ராஜா தன் இச்சையை அடக்கி, இந்திராதி தேவர்களுக்காக, தமயந்தி இடத்துக்குப் போய், தேவேந்திரர், குபேரர், வருணர், எமதர்மராஜர், இவர்கள் நாலு பேர்களும், தங்களில் ஒருவருக்கு உன்னைப் பட்டத்தேவியாகக் கலியாணஞ் செய்துக் கொள்ள வேண்டுமென்று, என்னை அவர்கள் தூதனாய் உன்னிடத்துக்கு அனுப்ப வந்தேன். அவர்களில், திரிலோக கர்த்தரான, தேவேந்திரர், தேவர்களுக்கும், தேவ கன்னிகைகளுக்கும் எஜமானா—உலகத்தில், துஷ்ட, நிக்ரஹ, சிஷ்ட, பரிபாலனம், என்பதாய், புண்ணியபாவங்களை விசாரிக்கிற தர்மகர்த்தர். குபேரர், நவநிதிகளாகிய ஒன்பது ரத்தினங்களை, ராசி ராசியாக உடைத்தாய், சகலதர்மங்களுந் தெரிந்து, சகல பாவங்களையும் பரிகாரம்-பண்ணத்தக்கவர். வருணதேவர், சகல

சம்பத்திலேயும் மிருந்தவர்—சகலபாவங்களையும் போக்கும் புண்ணியவான். எமதருமராஜர், தனக்கு சமானம் எவரும் இல்லையெனச் சொல்ல வல்லவன்—சத்தியன், தரும சொரூபி.

DHAMAYANTI'S REPLY TO NALA'S EMBASSY.

தமயந்தி, நளனுக்கு சொன்ன பிரதி உத்தரம்.

8. இதைக் கேட்டு, தமயந்தி, வெகு வியசனத்துடனே கண்ணீர் சொரிந்து, தேவர்கள் எனக்கு தகப்பன் மார்கள். நான் அவர்களுக்கு பெண்மரியாதை. அப்படியிருக்க, அவர்கள் இந்தப்படி செலவு கொடுப்பது தர்மமா? என்று தேவர்களுக்குத் தெரியச்சொல்ல வேண்டும் என்று சொன்னாள்.

NALA'S INTIMATION OF THE RESULT OF HIS EMBASSY TO DAMAYANTI.

நளனுக்கு நியமித்த தூதின் பிரயோசனத்தை தேவர்களுக்கு தெரிவித்தது.

9. மேலே சொன்னவைகளைக் கேட்டுக் கொண்டு நளமஹாராஜா, தேவர்களிடத்துக்குப் போய் நமஸ்காரம் பண்ணி, அவர்களுடனே தமயந்தி சொன்னவைகளை எல்லாம் ஆதியோடு அந்தியமாகச் சொல்ல, தேவர்கள், அவரை ரொம்பவும் கொண்டாடி, சுயம்வர மண்டபத்துக்குப் போனார்கள்.

THE PRESENCE OF (GODS) DEVARS AND SEVERAL RAJAHS AT THE PLACE OF MARRIAGE.

தேவர்களும் அனேக இராசாக்களும் சுயம்வர மண்டபத்தில் வந்திருந்தது.

10. இந்திராதி தேவர்களான, தேவேந்திரர், குபேரர், வருணர், எமதருமராஜர், இவர்களும், அங்கம், அருணம், அவந்தி, ஆந்திரம், இலாடம். ஒட்டியம், கருசம், கலிங்கம், கன்னடம், கர்னடம், காசம், காஸ்மீரம். காந்தாரம், காம்போஜம், கிராடம், குடகம், குந்தளம், குரு, குருகு, குலிந்தம், கூர்ஜரம், கேகயம், கேரளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சகம், சவ்வீரம், சாலவம், சிங்கனம், சிந்து, சீனம், சூரசேனம், சோனம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்கணம், நிடதம். நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டியம், புலிந்தம், போடம், மகதம், மச்சம். மராடம், மலையாளம், மாளவம், யவனம், யுகந்தரம், வங்கம், வங்காளம், விதர்ப்பம், என்னும் ஐம்பத்தாறு தேசாதிபதிகளான இராஜாக்களும் வந்து சேர்ந்தார்கள்.





NALA'S ENTRANCE AND RECEPTION IN THE PALACE OF VEEMA RAJAH.

நளன் சுயம்வர மண்டபத்திற்குப் பிரவேசித்ததும், அப்போது வீமராஜன் எதிர் கொண்டுபோய் அழைத்து வந்து கலியாண மண்டபத்தில் ஆசனங் கொடுத்ததும்.

11. அப்போது, பல பல வகை ராஜ வாத்தியங்கள் முழங்க, மத்தளத்தாளத் தொனிகளுடனே சங்கீதங்கள்பாட, பொன் தடிக்காரர் பராபரிபண்ண, பாட்டுவான்கள் எதிர்நின்று கொண்டாட, சகல வேடிக்கை வைபவங்களுடனே, வீமராஜா, கண்டேன் கண்டேன் என் பெண்ணுக்கு தக்க நாயகனை, என்று ஆனந்தித்து, நளராஜாவை எதிர்கொண்டுபோய், சகல சம்பிரமத்துடனே அழைத்துக்கொண்டு, சிங்கார மண்டபத்தில், நவரத்னம் இழைத்த ஆசனத்தில், உட்கார வைத்தார்.

DHAMAYANTI WAS BROUGHT AND CHOICE WAS MADE BY HER BY GARLANDING NALA.

தமயந்தியை, அலங்காரஞ் செய்து சுயம்வர மண்டபத்திற்கு கொண்டுவந்ததும், மாலை தரித்ததும்.

12. செவந்த தளிரைப்போலே பாதங்களும், முத்துகள் புதைத்த பவளக்கரணைகள்போலே விரல்களும், அலவன்களைப்போலே முழங்கால்களும், காந்தல் பூவைப்போலே கைகளும், சங்கைப்போலே கழுத்தும், செந்தாமரை இதழ்களைப்போலேயும், சேல்கண்டையைப் போலேயும், விசாலமான கண்களும், செங்காணி வில்லுகளைப் போலே புருவங்களும், மூன்றாம்பிறைச் சந்திரனைப்போலே நெற்றியும், சந்திரபிம்மம்போலே முகமும், வள்ளத்தண்டுகள்போலே காதுகளும், வண்டோடுபோலே தலைமயிரும், சம்பங்கி பூவைப் போலே நாசியும், கோவைப்பழம் போலே அதரமும், நக்ஷத்திரங்களைப் போலே பற்களும், மாதள விரைபோன்ற பல்வரிசையும், வல்லி சாதகக் கொடியைப் போலே சிறுத்த இடையும், நாறுமாற்று அபரஞ்சி பொன்னைப் போலே மேனியும் உடைய, தமயந்திக்கு, அப்பியங்க ஸ்நானம் பண்ணிவைத்து, தலைமயிரை ஆற்றி, கோதி, சிணுக்கு அறுத்து, வாசனை ஊட்டி, நவரத்னம் இழைத்த, குச்சுருப்பி, சடபில்லை, அணிந்து, மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, செண்பகம், குருவேர், மரு, மருக்கொழுந்துகள், முடித்து, கண்களுக்கு மையிட்டு, நெற்றியில் திலகம் இட்டு, வாசனை உடைத்தாகிய திவ்ய சந்தனம் பூசி, நவரத்ன மயமான சரிகை ரவிக்கையைத் தரித்து, பொன் பட்டாடை உடுத்தி, மூக்குத்தி, சிந்தாக்கு, நெற்

றிப்பட்டம், ரத்னஷுஜீ, அஸ்த கடகம், வன்னசரம், முத்து மாலை, மாணிக்க பதக்கம், சரப்பளி, சூடகம், சரிவளை, ஒட்டியாணம், காலாழி, பீலி, பாடகம், சிலம்பு, தண்டை, கொலுசு, முதலான ஆபரணங்கள் எல்லாம், அந்தந்த ஸ்தானங்களில் அணிந்து, தரித்து, அலங்காரம் பண்ணி வைத்து, புஷ்ப அலங்காரத்துடன் ராஜரதத்தில் ஏறி, பல பல படைகளும், பரிஜனங்களும், புடைசூழ, ருத்திர வீணைகள், சுரமண்டல யாழ், முதலான வாத்தியங்களும் முழங்க, பலதேசத்து ராஜாக்களும் அவர் அவர்க்குத் தக்க ராஜ சின்னங்களுடனே நெருங்கிவர, பெரியோர் பலரும், இந்நாயக மணிபோலச் சிறந்த சக்கிரவர்த்தனி இல்லை யெனக் கொண்டாட, கொலுமண்டபத்திற்குக் கொண்டுவரப்பட்டு, தமயந்தி, நளன் உருக்கொண்டு வந்திருந்த தேவர்களோடு இருந்த, நளனை, தெய்வ கடாக்ஷத்தால் அறிந்து, அவனுக்கு, மாலைசூட்டி வணங்கினாள்.

NALA'S TYING OF MARRIAGE TOKEN TO DHAMAYANTI.

நளன் தமயந்திக்கு மங்கிலியந் தரித்தது.

13. அதன் மேல், வீம ராஜா, வெகு மேன்மையாக, மங்கள வாத்தியங்கள் பலவும் முழங்க, வேதாகம, ஸ்மிருதி, ஸாஸ்திர, புராணோக்தமாக சகல ஸாஸ்திர ஸம்பன்னர்களான பிராமணர்கள் ஹோமம்பண்ண, பாடகர்கள் பாட, கவிராயர்கள் புகழ்ந்து கொண்டாட, பெரியோர்கள் பலரும் ஆசிகூற, நகரத்தார் அனைவரும் கண்டு களிக்க, மகா வைபோகத்துடனே, வரனுக்கும், வதுவுக்கும், மங்கல தூரியம் முழங்க, சுபமுகூர்த்தத்தில், திருமங்கிலியதாரணம் செய்தல் முதலிய கிரியைகளுடன், பல பல வேடிக்கை விநோதங்களோடு, விவாஹம் நடத்தி, நள மஹாராஜாவுக்கு தமயந்தியை தாரைவார்த்துக் கொடுத்து, நளன், தமயந்தியை கைகோர்த்து, ஓமத்தீயைச்சுற்றிவந்து, அக்நியில் நெற்பொரியைச் சொரிந்து, தமயந்தியின் பாதங்கள் அம்மியின் மேல் தூக்கிவைத்து, ஆகாயத்தில், அருந்ததியைக் காட்டினான். கௌதமன் முதலிய முனிவர்கள் ஆசீர்வதித்தனர்.

KALI APPEARS. HIS DISAPTOINMENT AND SCHEMES FOR RENENGE.

சனீஸ்பரர்வருகை. தமயந்தியை, விவாஹம் செய்யக் கூடாமையாய்.

நிராசையானதால், அவருக்குண்டான துவேஷம்.

14. இந்தப்படி, கலியாணம் நடந்தபின், தேவலோகம் போகும் தேவர்கள், வழியில் வந்து கொண்டிருந்த, கலிராஜாவாகிய சனீஸ்வரரைக் கண்டு, கலகல வென்று நகைத்து, ஓய்சனீஸ்பரரே! எங்கே போகிறீர் என்று கேட்க, அவர், தமயந்தி சுயம் வரத்திற்கு





என்று சொன்னார். தேவர்கள், அது முடிந்து விட்டது; நள மகாராஜா, அந்தப் பெண்ணை கலியாணம் பண்ணினான் என்று சொல்ல, அதைக் கேட்ட சனீஸ்பரர், கோபம் பொங்கி, உதடு துடித்து, பற்களை நெற நெற கடித்து, மீசை துடிக்க, முகத்திலே வேர்வை காண, இரண்டு கண்களிலும் இரத்தமாகி, நெருப்புப் பொறிகள் பறக்க, ஆகட்டும்; தேவர்களை எல்லாம் விட்டு, ஒரு மனிதனுக்கு மாலைதரித்த, தமயந்தியின் அகங்காரத்தை, நான் அடக்குகிறேன். அவளை, நளனோடு வாழ வொட்டுவேனோ? என்று, அட்டகாசம் செய்து போயினார்.

DHAMAYANTI'S DEPARTURE FROM HER FATHER'S COUNTRY TO THAT OF NALA.

தமயந்தி தகப்பன்நாட்டை விட்டு நளன் தேசத்துக்குப் போனது.

15. இந்த ராஜதம்பதிகள், உடல் இரண்டும் உயிர் ஒன்றுமாய், மிகவும் அன்னியோன்னியமாய் இருந்து, அவரவர் கடமையை குறைவு இல்லாமல் நடந்து, நள-தமயந்தி, மாவிந்த நகரம் போய் சேர்ந்தார்கள்.

---

## SELECT SCENES FROM THE DRAMA.

## நாடகப்பகுதி.

### SCENE I.

1-ம் பிரிவு.

நிடதநாடு, நளச்சக்கிரவர்த்தியின் அரமனை, கொலுமண்டபம்.

கட்டியக்காரன் கூறல், (விருத்தம்).

மாநிலா மதிகுல மன்னவர் களித்திட வளம் பெறும் நிடத நாடான்
தேசிக மகாராஜர்செய் தவ பலத்தினால் ஜெகமெலாங் கொண்டாடவே
பூசக்ர குடைநிழலில் புடைசூழ வாசரொடு பொருந்தியே பொற்றசத்தில்
வாசமா யிருந் தாசான நளமகாராஜன் வருகிறார் வருகிறாரே.

கட்டியக்காரன் கூறல், (கவி).

சந்திரகுலதீரனே தார்புனையமார்பனே சுவாமிபராக் கெச்சரிக்கை
மந்திரகிரிதீரனே மன்னர்பணிநாதனே மகிபனே யெச்சரிக்கை
அந்தமுனைவீரனே அவனிபுகழ்மாறனே ஐயனே யெச்சரிக்கை
கீர்த்திமிகு மெய்யனே மேகமெனுங் கையனே வேந்தனே யெச்சரிக்கை.

லோகவிசாரணை.

மஹாராஜ ராஜ கெம்பீர சந்திரகுல நளமஹாராஜன்,
லோகவிசாரணை செய்கிற விதங்காண்க.

ராஜன். திருவளர் மால்பாதந் தியானிக்க உபதேசம் செய்த சற்குரு சுகந்தானா?

மந்திரி. தருமநெறி மறவாத சக்கிரேசனே! தமது சற்குரு சுகந்தானையா.

ரா. திங்கள் மும்மாரியும் தவறாமல் அறம்வளர சீராகவே பெய்யுதா?

மந். சங்கு சக்ராயுதன் தயவினால் மும்மாரி தவறாமல் பெய்யுதையா.

ரா. பத்திலொரு கடமைதரு பண்பான குடிகளின் பயிரெலாம் செழித்து வருதா?

மந். உத்தமக் குடிகளின் பயிரோங்கி விளைவதால் ஒரு குறையும் இல்லை யையா.

ரா. வேதபாராயணம் ஓதுமா வாரியர்கள் விதிப்படி நடக்கிறாரா?

மந். மாதவர்கள் வேதமுறை மறவாமல் நெறியுடன் வாசிக்கிறார்களையா.

ரா. தேவ தேவாலயப் பூசை திரிகாலமும் செவ்வையாய் நடந்து வருதா?

மந். காவலர்கள் துதிசெயும் ஆலயப் பூசைகள் நன்றாய் நடக்குதையா.

ரா. சிங்கார நந்தவனம் வாவி முதல் யாவும் செழித்துப் பூ வெடித்து வருதா?

மந். சங்கு வெண்டாமரை தடாகமுள நந்தவனம் தாழ்விலாதிருக்குதையா.

ரா. பாராளு மகிபர்கள் பாக்கி யில்லாமலே பகுதி பணம் வந்து விடுதா?

மந். தாராளமா யைம்பத்தாறு தேசப் பகுதி தடையின்றி வருகுதையா.

ரா. புலியுடன் பசுவுமொரு துறையினி லிறங்கியே பொருந்தி நீர் குடித்துவருதா?

மந். வலிமையுள புலியுடன் பசுவும் ஓரினமதாய் வந்து நீர் அருந்துதையா.

ரா. அறிவிற் சிறந்த நமதுமந்திரியே கேளும்! நமது நாட்டில் யாவும் குறைவில்லாமல் நடந்தேறி வருவதையும், மனு நீதி தவறாமல் தேசமெல்லாம் செழிக்க, நீர் நமது அரசியலை நடத்துவதையும், நாம் கேட்டுக் களித்தோம்; இப்போது நமது நகரிலுள்ள நந்தவனத்தையும் போய் பார்த்து வருவோம், உமக்கும் திரிக்கை யிருந்தால் கூட வாரும் மந்திரியே!

மந். தங்கள் சித்தப்படியே போய் வருவோம் மகாராஜனே!



# NOTES EXCITING LAUGHTER.

## விகட விநோதங்கள்.

ஓர் ஐரோப்பிய டாக்டர், விசேஷமாக ஞாபக சக்தி உண்டாக்கும்படியான புதிய ஔஷதத்தைத் தான் கண்டுபிடித்திருப்பதாய் பிரசித்தஞ் செய்திருக்கிறார். இது வாஸ்தவமாய் இருந்தபோதிலும் சிலர் விஷயத்தில் இந்த ஔஷதம் குணம் செய்யாது என்பது மெய். எப்படி யெனில், முதலில் சாதாரண நிலைமையில் இருந்து, இப்பால் குருட்டு அதிர்ஷ்டத்தாலோ அல்லது தெய்வ கடாக்ஷத்தாலோ, செல்வத்திலாவது, உத்தியோக தோரணையிலாவது, மேலான பதவியை அடைந்தவர்களில், சிலருக்கு இம்மருந்தை காலன் காலனாக கொடுத்தாலும், அவர்களுக்கு தங்கள் பூர்வ நிலைமை, ஞாபகத்திற்கே வருவதில்லை. சாம்பிரதாயஸ்தர்களுக்கோ வெனில், 'அட்டாலும் பால் சுவையில் குன்றாது,' 'தேய்ந்தாலும் சந்தனம் அதன் மணம் அறாது', 'குப்பையில் போட்டாலும் குன்றி மணி மங்காது,' 'குத்தி வடித்தாலும் சம்பா, குப்பையில் போட்டாலும் சம்பா,' என்பவைபோல், அவர்கள் இம்மருந்தை ஒரு துளிகூட உட்கொள்ளாமலே, பூர்வஸ்திதி இன்னதென்று மாறாமல், எப்பொழுதும் ஞாபகத்தில் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். (இது என்ன மருந்தாயிருக்குமோ?)

*
* *

ஒரு வாலிப வயது உள்ள வைகீல், ஓர் கல்யாணம் ஆகாத பெண்ணுக்கு வரவேண்டிய 1000—ரூபா வழக்கை கெலித்து கொடுத்து, மறுநாள் தனக்கு சேரவேண்டிய பீஸ் (Fees) தொகைக்கு எழுதி அனுப்பினார். 'பேராசைக்காரனைப் பெரும் புளுகு சொல்லி வெல்லவேண்டும்' என்பதுபோல உடனே அந்தப்பெண் வைக்கீல் இடத்துக்குப்போய், 'என்னை விவாஹஞ் செய்துக்கொள்ள வெகு அவசரமாய் இருக்கிறதுபோல காணுகிறது,' என்றாள். அப்படி நான் நினைக்கவில்லையே என்று வைக்கீல் ஆச்சரியத்தோடு சொன்னபோது, பெண், ஏன், நீர் என் ஆஸ்தியை எல்லாங் கேட்டீர்? அத்துடன் என்னையும் எடுத்துக் கொள்ள மனமாய் இருப்பீர் என்று நான் உண்மையாய் நினைத்தேன் என்றாள். (ஒருவேளை மேற்படி வைக்கீல் தகாதா செய்த பீஸ் அவ்வளவு அதிகமாக இருந்து இருக்கும்).

*
* *

தேவலோகத்தில் வசிக்கும் இந்திரன், தம் ராச்சியத்தில் உள்ள ஜட்ஜிதுரை அவர்கள், மிகவும் வயது தளர்ந்த விருதாப்

யாராய் விட்டதில், அவருக்கு பதிலாக யாரை நியமிக்கலாம் என்று யோசிக்கும் விஷயத்தில், நாரதபகவான் தோன்றி தேவேந்திரா! பூலோகத்தில், சென்னைப்பட்டணத்தில், ஆனரேபில். டி. முத்துசாமி ஐயர் என்பவர், ஹைகோர்ட்டு ஜட்ஜிவேலைபார்த்து, இப்போது பர்லோவின் பேரில் இருக்கிறார். அவர், ஒவ்வொரு கேஸையும் எள்ளுக்காய் பிளந்தாப்போல் தீர்மானம் செய்யப்பட்டவர். அவரைப்போல், ஈரேழு பதினாலு உலகங்களிலும் காணுவது அரிது எனப் புகழ்ந்து கொண்டாட, தேவேந்திரன், உடனே சென்னை ஹைகோர்ட்டாருக்கு எழுதி, டி. முத்துசாமி ஐயரை அவ்விடம் அனுப்பக் கேட்டுக்கொள்ள, இவர்கள், தேவேந்திரன் அனுப்பிய எமதூதனுக்கு மறுமொழிகூற வகையில்லாமல், அய்யர் அவர்களை, தேவலோகத்துக்கு பிரயாணப்படுத்தி அனுப்பிவிட்டு, பிறகு வருத்தப்பட்டுக்கொண்டு இருந்தார்கள்.

*
* *

திருத்தணி முருகர் ஆலயத்தின் திருக்குளம், இருந்தாப்போல் இருந்து, திடீரென அக்கினி பற்றியெரிய, அதை அவிப்பதற்கு, போலிஸ்-வீரர்கள் அதி துரிதமாய்வந்து, ஆர்க்கோணம் கிர்ஸனயில் குளத்தை திருப்பி, பம்பு (Pump) வைத்து அடிக்க, அக்கினி தண்ணீராக மாறிவிட்டதாம். இதுவும் ஒருவிந்தையே?

*
* *

ஓர் வைஷ்ணவ பிராம்ஹணப் பெண், விதவையான பிறகு, அவள் புருஷனுக்கு மறுகலியாணஞ் செய்யலாமா என்னும் விஷயத்தைப்பற்றி, சித்தூர் ஹைஸ்கூலில் ஓர் பிரஸங்கம் நடத்தப்படும். அதற்கு இறந்து போன, ஸர். டி. திவான், மாதவராவு அவர்கள் அக்கிராஸனாதிபதியாகவும், திருவான்கூர் திவான், ஆனரேபில் டி. ராமையங்கார், மைசூர் திவான், ரங்காசார்லு, உப அக்கிராஸனாதிபதிகளாகவும், பூர்வம் லெஜிஸ்லேடிங் மெம்பரான, ஆனரேபில் சடகோபாசார்லு, காரியதந்திரியாகவும், இருக்க ஒப்புக்கொண்டார்கள். அதற்கு, கண் இல்லாக் குருடர்களும், காது இல்லாச் செவிடர்களும், கால் இல்லா மொண்டிகளும், வரப்பிரார்த்திக்கின்றோம்.

*
* *

கேள்வி.—நல்லவனை அனுப்பும்படி சொன்னால் உன்னை அனுப்புவித்தார் என்ன? உங்கள் எஜமானிடத்தில் உன்னைவிட நல்லவர்கள் கிடையாதா?

விடை.—சித்தம். இருக்கிறார்கள். ஆனால், அவர் நல்லவரிடத்துக்கு நல்லவரை அனுப்பி, என்னை உமயிடத்துக்கு அனுப்பினார்.

*
* *



# RIDDLES.

## விடுகதைகள்.

1. வெள்ளரிப்பழம், வெடித்திருக்கிறது, கட்டுவாரும் இல்லை,
இராஜாமகள், ஓடிப்போகிறான், பிடிப்பாரும் இல்லை,
ரோஜாப்பூ, மலர்ந்து இருக்கிறது, கிள்ளுவாரும் இல்லை,
இதை விடுவிப்பீர், விடுவிப்பு.—சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்.

2. முன் ஒரு ஊரின் பேராம்,
முதல் எழுத்து இல்லாவிட்டால், நன்னகர் மன்னர் பேராம்,
நடு எழுத்து இல்லாவிட்டால், கன்னமா மிருகம் பேராம்,
கடை எழுத்து இல்லாவிட்டால், உன்னிய தேனின் பேராம்,
ஊரின்பேர் விளம்புவீரே. விடுவிப்பு.—மதுரை.

3. ஒரு பெரிய மரம்,
அதற்கு பனிரெண்டு கிளைகள்,
ஒவ்வொரு கிளையிலும் முப்பது இலை,
அவற்றுள் பதினஞ்சு இலை கறுப்பு,
பதினஞ்சு இலை வெளுப்பு,
இதை விளம்புவீரே. விடுவிப்பு.—ஒருவருஷம், பனிரெண்டு மாதங்கள், முப்பது இலைகள், தேய்பிறை, வளர்பிறை.

4. ஒரு செல்வப் பெண்,
சிவந்த பட்டு உடுத்து,
வீடுகள் தோறும் பிரகாசிக்கிறாள்,
அவள் யார். விடுவிப்பு.—திருவிளக்கு.

5. வெள்ளைக்காரன், ஒரு கள்ளப்பையன்,
நான்காணும் பொழுது, செய்யாத கோரணிகள் எல்லாம் செய்கிறான்,
நான் சிரித்தால் சிரிக்கிறான், கோபித்தால் கோபிக்கிறான்,
அடிக்கப் போனால் அடிக்கவருகிறான், அடாவென்றால் சும்மாயிருக்கிறான்,
வாயைக் குழைக்கிறான்,
இதைவிளம்புவீரே விடுவிப்பு.—கண்ணாடி.

6. இது வரையில், நீ ஒரு நாளும் இல்லாத இடத்தில், நான் உன்னை பலதரம் கண்டேன்,
இனிமேலும், நீ ஒரு நாளும, அவ்விடத்துக்கு வரமாட்டாய்,
ஆயினும், என்றாளும் அவ்விடத்தில், நான் உன்னைக் காண்பேன்
இதை விடுவிப்பீரே. விடுவிப்பு.—நிலைக் கண்ணாடி.

7. நீண்ட உடலாயிருக்கும், தாணும் அல்ல;
கையினால் பிடித்து அணைத்தால், மெலிவுண்டு இருக்கும், புஷ்பமும் அல்ல;
படுக்கையில், இவள் அன்றி, வேறே சுகமும் இல்லை;
மாநிலத்தில், மங்கையும் அல்ல;
மகிழுடனே, இக்கதையை உரைத்திடுரே. விடுவிப்பு.—தலைகணை

8. செக்கம் சிவந்தவர் நான்கு பேர்,
செவ்வெண்ணெய் இட்டுக் கொண்டவர் நான்கு பேர்;
மஞ்சள் குளித்தவர்கள் நான்கு பேர்;
மையிட்டுக் கொண்டவர்கள் நான்கு பேர்;
பதினாறு பேருக்கு இரண்டே ஆம்பிடியான்மார்;
இதை விடுவிப்பீரே, விடுவிப்பு.—சொக்கட்டான்.

9. கால் உண்டு, மூக்கு உண்டு, கையில்லை, காதுண்டு, ஆனால் கேட்கமாட்டார்;
கண்ணுண்டு பார்க்கமாட்டார்;
கன்னியவாள் துணையின்றி போகமாட்டார்;
கண்டு, சொல்லும், இவர் பெயரைக் கருத்தாய் தானே.
விடுவிப்பு.—தலைவைத்த கைத்தடி.

10. வலிமை உள்ளவள் மலை இருப்பவள், மல்லருடன் வந்து மருவினையாடு
வருத்தம் உற்றபோது பெருத்த உதவி ஆவாள்; [வாள்;
மாதர் கையில், பலவகையாய் மாறி, சஞ்சரிப்பாள்;
வலுத்த இவள், வாலிபர்க்கும், கிழவர்க்கும், வாங்கப்பட்டாள்;
இதை விடுவிப்பீரே. விடுவிப்பு.—மூங்கைத்தடி.

11. பச்சை பச்சை கிறத்தான், பாவக்கா கிறத்தாள், அம்பலம் வாயில்,
என் மடிச்சாய் வளர்வாள், மாடு மேய்ப்பாள், என்னை விற்பாள்,
வழியில் இருந்து, பொருள் பறிப்பாள், பறிப்போரையும் தப்பாள்,
இதை உரைத்திடுவீரே. விடுவிப்பு.—வாழை, மூங்கில்.

12. காட்டுப் பிள்ளையை, வீட்டில் வளர்த்து,
பாட்டுப் படிப்புகள், கற்றுக்கொடுப்பது,
அம்மா, அக்கா, அண்ணா, மாமா,
நீயாரடா, வெளியேறடா, என்கவே. விடுவிப்பு.—கிளிப்பிள்ளை.

13. ஓடிவரும், கூடிவரும், உட்கார்ந்தால் முத்தமிடும், பிள்ளை அல்ல;
தக்க ஒரு சமயத்தில், உதவியாய் இருக்கும், தம்பி அல்ல;
உற்ற, இடர் தீர்த்திடும், உறவோர் அல்ல;
உண்பதிலும், தின்பதிலும், பங்கு எடுக்கும், பெண்டீர் அல்ல;
எத்தனையாய் சொன்னாலும், இவர் போல், பணிபுரிவோர், இல்லை கண்டீர்;
இதை உரை செய்வீர், இனிதாய் தானே. விடுவிப்பு.—நாய்.

14. குயவன், செய்ததும் அல்ல, வர்ணக்காரன், வர்ணம் பூசியதும் அல்ல,
ஆயினும், உருண்டையாயும், நல்வர்ணம் உடையதாயும், இருக்கும்,
அதென்ன. விடுவிப்பு.—கிச்சிலிப்பழம்.

15. சுத்திபோல், இலை இருக்கும், தின்றால், பழம் பழுக்கும், தின்றுவிட்டால்
காய் காய்க்கும். விடுவிப்பு.—வேப்பம் பழம்.

16. (1) காரும், தொளாயிரமாம், கித்திக்கு மண்டபமாம்,
ஆனை கட்டும் சாவடியாம், அரைக்கு அரைக்கு புஸ்தகமாம்,
(2) முள்ளு முள்ளுக்குள்ளே, மூங்கில் தோப்புக்குள்ளே,
கைவச்சால் பொருக்குள்ளே, ஒருமாணிக்கம் கண்டு எடுத்தேன்.
விடுவிப்பு.—பலாப்பழம்

17. பச்சை ஜன்னல், வெள்ளை காபிர்,
உள்ளே தூங்குகிறான், கறுப்பு காபிர். விடுவிப்பு.—சீதாப்பழம்

18. சடைகள் பெருத்து இருக்கும், சந்நியாசி அல்ல;
தையல் மேல் வைத்திருப்பார், சிவனும் அல்ல;
கொம்பு பெருத்து இருக்கும், எருமை அல்ல;
கொத்து கொத்தாய் சிவந்து இருக்கும், பவழம் அல்ல;
குணமாக வெகுபேர்கள், மேல் கீழாக சூழ்ந்திருப்பார், குதித்துப்பாரே,
விடுவிப்பு.— ஆலமரம்.





# குடிவாழ்க்கை பழமொழிக்கோர்வை.

## I. CHILDREN.—குழந்தை, பிள்ளை, மக்கள் :—

1. அஞ்சிலே அறியாதவன், ஐம்பதிலே அறிவானா ?
2. அஞ்சிலே விளையாதது, ஐம்பதிலே விளையுமா ?
3. அடக்குவார் அற்ற கழுக்காணியும், கொட்டுவார் அற்ற மேளமுமாய், திரிகிறான் ?
4. அடி உதவுகிறதுபோல், அண்ணன் தம்பி உதவுவானா?
5. அடித்து வளர்க்காத பிள்ளையும், முறுக்கி வளர்க்காத மீசையும், செவ்வை யாகாது.
6. அடியாத மாடு, படியாது.
7. அடுக்களைக்கு ஓர் பெண்ணும், அம்பலத்துக்கு ஓர் ஆணும்.
8. அண்ணனும் தம்பியும், ஜன்மப்பகைவர்.
9. அண்ணன் தம்பி வேண்டும், இன்னும் தம்பிரானே.
10. அப்பன் அருமை, அப்பன் மாண்டால், தெரியும்.
11. அம்மையார் நூற்கிற நூலுக்கும், பேரன் அரைஞாட் கயிற்றுக்கும், சரி.
12. அருக்காணி நாச்சியார், குரங்குபிள்ளை பெற்றாளாம்.
13. அழுகிற ஆண்பிள்ளையையும், சிரிக்கிற பெண்பிள்ளையையும், நம்பாதே.
14. அறியாப்பிள்ளை யாருனும், ஆடுவன் மூப்பு.
15. அறுதலி மகனுக்கு, அங்கமெல்லாம் சேஷ்டை.
16. ஆடுங்காய், பிஞ்சிலே தெரியும்.
17. ஆணை அடித்து வளர், பெண்ணைப் போற்றி வளர.
18. ஆரும் ஆரும் உறவு, தாயும் பிள்ளையும் உறவு.
19. ஆனையைப் பிடிக்கிறதும், பானையில் அடைக்கிறதும், அதுவே, செல்லப்பிள்ளைக்கு அடையாளம்.
20. இல்லாத வீட்டுக்கு, இலஞ்சியம்.
21. இளங்கன்று, பயம் அறியாது.
22. இளமையில் முயற்சி, முதுமையில் காக்கும்.
23. உருக்கம் உருக்கமாய் ஊட்டி, உள்ளே போச்சுது.
24. எங்கள் அப்பன் பிறந்தது வெள்ளிமலை, எங்க ஆயிபிறந்தது பொன்மலை.
25. எமன் பிள்ளையை, பேய் அடிக்குமா (பிடிக்குமா) ?
26. ஐந்தெழுத்தும், பாவனையும், அவனைப்போல் இருக்கிறது.
27. ஒரு தாயற்ற பிள்ளைக்கு, ஊரெல்லாம் தாய்.
28. ஒரு பிள்ளை பெற்றவனுக்கு, உறியிலே சோறு, நான்கு பிள்ளைபெற்றவனுக்கு, நடுத்தெருவிலே சோறு.
29. ஒரு பிள்ளை பெற்று, ஊட்டி வளர்த்தாளாம், அது, செரியாக்குணம் பிடித்து, செத்ததாம்.

30. ஒரு புத்திரன் ஆனாலும், குரு புத்திரன் ஆவானா?
31. ஒரு பெண் என்று, ஊட்டி வளர்த்தாள், அது, ஊர்மேல் போச்சுது.
32. ஒருவனைப் பிறப்பது பிறப்பாமா, ஒன்றி மரம் தோப்பாமா?
33. ஒருவனாய்ப்பிறந்தால்தனிமை, இருவராய்ப்பிறந்தால்பகைமை.
34. ஒன்றைப் பெற்றாலும் கடுகப்பெறு.
35. ஒன்றைப் பெற்றாலும், கன்றாய்ப்பெறு.
36. ஒன்றைப் பெற்றாலும், நன்றாய்ப் பெறவேண்டும்.
37. ஓடுகிற பாம்பை, பிடிக்கிற பருவம்.
38. கக்கின பிள்ளை, தக்குமா?
39. கடிதான பிள்ளை, பெற்றாருக்கு உதவுமா?
40. கள்ளன் பிள்ளைக்கும், கள்ளபுத்தி.
41. கற்றவனும் உண்பான், பெற்றவளும் உண்பாள்.
42. காக்காய்க்கு, தன்குஞ்சு, பொன் குஞ்சு.
43. காத வழி பெயர் இல்லான், கழுதை போடொக்கும்.
44. காலம் அறிந்து பிழையாதான், வால் அறுந்த குரங்கு ஆவான்.
45 காலம் கண்டகூலி.
46. குருமொழி கேளாதவனும், தாய் வார்த்தைக்கு அடங்காதவனும், சண்டி.
47. குழந்தை தூங்குகிற தெல்லாம், அம்மையாருக்கு லாபம்.
48. குழந்தை பசியோ, கோவில் பசியோ?
49. கெட்ட குடிக்கு, ஒரு கெட்டை பிறந்தது.
50. கெட்ட குடிக்கு, ஒரு அஷ்டப் பிள்ளை.
51. சகோதரம் உள்ளவன், படைக்கு அஞ்சான்.
52. சத்தியத்திற்கு இல்லாதபிள்ளை, துக்கப் பட்டபோது, அற்றுப் போகிறதா?
53. சித்தி பெறாத மருந்தாம், மருந்தோ, பெற்றுப் படையாத பிள்ளையும், பிள்ளையோ?
54. சித்திரை மாதத்தில், செல்வன் பிறந்தால், சீரும் சிறப்பும் கெடும்.
55. சித்திரை மாதத்தில் பிறந்த, நிர்கேடனுமில்லை, ஐப்பசிமாதத்தில் பிறந்த, அதிர்ஷ்டவானுமில்லை.
56. சிறியார்க்கு, இனியதை காட்டாதே, செம்புக்கு, புளியிட்டு மசியாதே.
57. சிறு குழந்தை, வில்லாவிடும், விடல்ல, சீரகம் இட்டு, ஆக்காத கறியும், கறியல்ல.
58. சிறுபிள்ளை, செய்த வெள்ளாண்மை, வீடுவந்து சேராது.
59. சிறுபிள்ளை விளையாட்டு, அழிந்தது மாங்காடு (or கண்டு எலிக்கு காலம்).



# AGRICULTURAL PROVERBS.

## பயிர்வகைப் பழமொழிக் கோர்வை.

1. அகல் உழவை விட, ஆழ உழவு மேல்.
2. அக்கரை மாட்டுக்கு, இக்கரை பச்சை.
3. அம்மாவைக் கூறி சம்பாவிரைத்தான், சம்பாவிளைந்து சந்தோஷப்பட்டான்
4. அழியாச் செல்வம், விளையே ஆகும்.
5. அழிவே அழிவினும், உழவே உழு.
6. அழுது கொண்டு இருந்தாலும், உழுது கொண்டிரு.
7. அறுப்பு காலத்தில், எலிக்கு ஐந்து பெண்சாதி.
8. ஆடி எட்டில், ஆயிரம் கண்ணுடையான், மூடமுகம் விரியானுமாகில், ஆழி ரெண்டு, அண்டம் பாண்டு, நாடு விளையாது, நாழி.
9. ஆடி ஐந்தில், விதைத்த விளையும், புரட்டாசி பதினைந்தில், நட்ட நடவும், ஆறு நாள் வயதிற் பெற்ற, புதல்வனும், இம்மூன்றும், பெரியோர்கள் புதைத்து வைத்தனர்.
10. ஆடிக்கரு அழிந்தால், மழை குறைந்து போம்.
11. ஆடி கீழ் காற்றும், அற்பசி மேல் காற்றும், அடித்தால், அவ்வாண்டும் இல்லை, மறு ஆண்டும் இல்லை, மழை.
12. ஆடி கீழ்காற்று, அற்பசி மேல்காற்று, அடித்தால், அரிசி விற்கிற விலை, நெல் விற்கும்.
13. ஆடி பிறந்த ஐந்தாம் நாள், ஆடும் புதனே யாகில், நாடு விளையும் ஒரு போகம், நல்ல வியாழம் இருபோகம், வெள்ளி பயிர் சாரு, சன் கதிர் சாரு.
14. ஆடி மழை தேடி, விதை.
15. ஆடிமாதத்தில், விதைத்த விதையும், அய்யஞ்சில், பிறந்த பிள்ளையும், ஆப த்துக்கு உதவும்.
16. ஆண்டு மாறின காரும், அன்று அறுத்த சம்பாவும், ஆளன் கண்ணுக்கு அரித
17. ஆழ உழுது, தேடி வை.
18. ஆழ உழுது, அரும்பாடுபட்டாலும், பூமிவிளைவது, புண்ணியவான்களுக்கே
19. ஆயிரங் கலம் நெல்லுக்கு, ஓர் அந்து பூச்சி, போதும்.
20. ஆனிக்கார் சாவியும், குரங்கு பிணமும், கண்டதில்லை.
21. இராஜனுக்கு செங்கோல், ஸம்ஸாரிக்கு உழவுகோல்.
22. இளைத்தவனே, எள்ளை விதை.
23. ஈரூரில் உழுதவன், கெட்டான், இரண்டு பெண்கட்டினவன், கெட்டான்.
24. உடையவன், பாராப் பயிர், ஆகுமா.
25. உழவில் மிகுந்த, உளதியம் இல்லை.
26. உழவின்றி, உளதியமில்லை.
27. உழுகிற நாளில், ஊர் விட்டுப் போனால், அறுக்கிற நாளில், ஆள் தேட வேண்டாம்.
28. உழுகிற காலத்தில், ஊர்வழிப் போனால், அறுவடைகாலத்தில், அறுவா தேடவேண்டாம்.
29. உழுகிறவன், கணக்குப்பார்த்தால், உழவுகோல், மிஞ்சாது or மீராது.
30. உழுதவன், கணக்கு பார்த்தால், உழக்கு மிஞ்சாது.
31. உழுதவன், கெட்டதில்லை.
32. உழுவார்க்கு அழகு, உழுதூண் உண்ணல்.
33. உள்ளூர் மருமகனும், உழுகிற கடாவும் சரி.
34. உளண மிச்சம், உழவில் இல்லை.

35. ஊர் ஓரம் கழனி, ஓட்டமுள்ள தக்கேன்.
36. ஊர் ஓரத்தில் கழனியும், உத்திராடத்தில் ஓர் பிள்ளையும், உத்தமம்.
37. எண்ணிச் செய்வது செட்டு, எண்ணாமல் செய்வது, வெள்ளாண்மை.
38. எண்ணிப்பார் குடித்தனத்தை, எண்ணாதே பார் வெள்ளாமையை.
39. ஏர் உழுகிறவன் இளப்பமானால், எருது மைத்துனன் கொண்டாடும்.
40. ஏரா மடைக்த நீர், பாய்ச்சாதே.
41. ஏரை இகழ்ந்தார், பேரை இகழ்ந்தார்.
42. ஏர் நடந்தால், பேர் நடக்கும்.
43. ஐப்பசி மாதம், அழுகைத்தூற்றல்.
44. ஓடுவான் எல்லாம், உழுவான் தலைக்கடையில்.
45. கம்மவிட்ட பயிரும், ஓம்மவிட்ட குடித்தனமும், முன்னுக்குவராது.
46. கரம்பை சுற்றினால், காலபணம்.
47. கன்றுகள் கூடிக், களம் மிதிக்கப்போனால், வைக்கோலும் ஆகாது, செத்தையும் ஆகாது.
48. காருக்கும், கத்திரிக்காய்க்கும், காலம் இல்லை.
49. காலத்தப்பயிர், காய்ப்பிலே.
50. குடி உயர, முடி உயரும்.
51. குடி ஏற, கோல் ஏற.
52. குடித்தனம் செழித்தால், துரைத்தனம் செழிக்கும்.
53. குடித்தனமே துரைத்தனம்.
54. குடியானவனே முடியானவனே?
55. கூடயிருந்து பார், கூடப்பயிரிட்டு பார்.
56. கொண்டு வாரங்கொடுத்தவனும், உழுதுவாரங் கொடுத்தவனும், தேரமாட்டார்கள்.
57. கொழுமீதில், குடிகொண்ட குடிச்செல்வமே, செல்வம்.
58. சாயம்ப்ராத க்ஷேத்ரதர்சி, (காலமேயும் சாயந்திரமும், வயலைப்பார்)
59. சீரைத்தேடின், ஏரைத்தேடு.
60. செங்கோலை காக்கும் கோல், ஏர் அடிக்கும் சிறுகோலே.
61. செட்டுக்கு, வேளாண்மை, சென்மப்பகை.
62. தன் ஆள் இல்லாத வெள்ளாண்மையும், தான் உழாத நிலமும், தரிசு.
63. தானேற நீரேறும்.
64. தொழுதூண் சுவையினும், உழுதூண் இனிது.
65. நீர் இல்லாப்பயிரும், தாயில்லாப் பிள்ளையும் சரி.
66. நீர் வற்றினால், நெல்வற்றும்.
67. பசு கறப்பானால், பாலும் கறப்பாமா?
68. பண்ணிய பயிரில், புண்ணியந் தெரியும்.
69. பத்துக்குப் பின், பயிரு.
70. பயிரையிட்டு, பாவத்தைத் தொலை.
71. பரப்பன், பயிர் இழந்தான், இரப்பன், பெண்டிர் இழந்தான்.
72. பறையன் பயிரிட்டு, பழஞ்சலம் ஏறுவது, அரிது.
73. பரித்தி செடியும், பாலும், உள்ளவனுக்கு, பஞ்சமில்லை.
74. பத்து ஏர் வைத்து, படைமரமும் தோற்றேன், எத்தனை ஏர் வைத்து கோவணமும் தோற்றாய்.
75. பாராதே கெட்டது பயிர், ஏறாதே கெட்டது, குதிரை, கேளாதே கெட்டது, கடன்.
76. பாலைப்பார்த்து பசுவைக்கொள்ளு, தாயைப்பார்த்து மகளைக்கொள்ளு.



# MEDICAL NOTES.

## வைத்தியக்குறிப்புகள்.

1. இலகுவில் பிரசவிக்க:—கோவைக்கொடியை, இலையுடனேயும் காயுடனும் கொண்டுவந்து நசுக்கி, கால் பெருவிரல்கள் இரண்டிலும் கட்டிவிட்டால், 5 நிமிஷத்தில் பிரசவமாம்.

2. கெர்ப்பத்தில் உள்ள சிசு வெளிப்பட வருத்தப்பட்டால்:—குன்றிமணி பருப்பை, தண்ணீர்விட்டு அரைத்து, வெற்றிலையில் தடவி, பாக்குடன் கொடுக்கலாம்.

3. வயிற்றில் பிள்ளை இருந்தால்:—நாயுருவி வேர் 1¼-ரூபா எடை, தண்ணீரில் அரைத்து, உள்ளுக்கு கொடுக்கவும்.

4. குழந்தைகள் ஜன்னி, கணை—மாந்தத்துக்கு:—கல்லுப்பு, மிளகு, வெள்ளை வெங்காயம், இவைகளை அரைத்து, விளக்கெண்ணையில் மத்தித்து, சற்றே அனலில்வைத்து, 2-வராகனிடை உள்ளுக்கு கொடுக்கவும்.

5. பிள்ளைகள் கணமாந்தத்திற்கு:—துளசி, வில்வம், கஞ்சாங்கோரை, தூதுவிளா, கரிசாலங்கண்ணி, இவைகளை புட்டிட்டு, சாறு பிழிந்து, அதில் கோரோசனை மாத்திரை உரைத்துக் கொடுக்கவும்.

6. பீனிசத்துக்கு:—ஜாதிலிங்கம் வராகனிடை-8, எலுமிச்சம்பழச் சாறு விட்டு அரைத்து, மெல்லிய துணியில் தடவி, உலர்த்தி, திரிசெய்து, விளக்கில் கொளுத்தி, புகைபிடித்தால், 8-வகை பீனிசம் தீரும்.

7. உள்நாக்கு வளர்ந்திருந்தால்:—ஓட்டடையும், கல்சுண்ணாம்பும் எருமைப்பாலில் குழைத்து உள்நாக்கில் வைக்கவும்.

8. காதில் சீழ் வடிகிறதற்கு:—கடல்நுரையையும், வலம்புரிக்காயையும், பொடிபண்ணி, நல்லெண்ணையில் போட்டுக் காய்ச்சி, காதில் துளி விடவும்.

9. வெட்டுகாயத்துக்கு:—நாட்டு சக்கரையில், ஆமணக்கெண்ணை விட்டு, வெண்ணெய்போல் குழைத்து, அக்காயத்தில் வைத்து இறுக்கி கட்டவும்.

10. நீர்ச்சுருக்கிற்கு:—முள்ளங்கி கிழங்கை இடித்து, சாறு பிழிந்து, அதோடு சிறிது வெள்ளை சக்கரை சேர்த்து, காலை வேளையில் சாப்பிடவும்.

11. நீரடைப்பிற்கு:—வால் மிளகு 1½-வராகன் எடையை இடித்து, தூள்பண்ணி, வஸ்திரகாயம் செய்து, 10-பலம் குளிர்ந்த சலத்தில் கரைத்து, ஒரு தினத்திற்கு 5, 6 தரம் சாப்பிடவும்.

12. நீராதவெள்ளைக்கு:—வெள்ளறுகைச்சமூலமாகனைமபோல் அரைத்து, கன்னடி தயிரில் கலக்கி, காலை வேளையில் விடாது, மூன்று அல்லது ஐந்து நாளைக்குச் சாப்பிடவும்; பத்தியம்—உப்பு சேராத கன்னடி தயிர்சாதம், வெண் வெங்காயம், சேர்த்துக் கொள்ளவும்.

(வேறு) வெள்ளைக்குங்கிலியத்தை, பொடி செய்து, ஆற்று ஜலத்திலிட்டு, நன்றாய் கொதிக்கவைத்து, எடுத்து, அதற்கு இரட்டிப்பாக சிறு கற்கண்டு சேர்த்து, காலை மாலைகளில் சாப்பிடவும்.

13. இரைப்பு வியாதிக்கு:—ஊமத்தின்வேரை, நிழலில் உலர்த்தி, அந்த புகையை பிடித்தால், மார்பின் துரையை அறுத்து வியாதி நீங்கும்.

14. 1. கண்—ஒளி:—

i. அதிமதுரத்தை, முலைப்பாலில் உரைத்து, நேத்திரத்தில்விட, ஒளியுண்டாகும்.

ii. நரிசு கண்களுக்கு, ஒளிகொடுக்கும்.

iii. கோரோசனையை, முலைப்பாலில் உரைத்து, கண்ணில் இட, பிரகாசம் அதிகரிக்கும்.

iv. தான்றிக்காயை, சூரணஞ் செய்து, சம எடை சர்க்கரைசேர்த்து, நித்தமும், ஒரு வராகன் எடையை, வெந்நீரில் சாப்பிட்டுவர, கண்களுக்கு அதிக தெளிவு உண்டாகும்.

v. மூங்கில் உப்பை, பன் பாஷாவின் எண்ணெயில், உரைத்துப்பூச, கண்ணொளி அதிகப்படும்.

vi. வெள்ளை குங்கிலியத்தை, முலைப்பாலில் உரைத்து, கண்ணில் இட, கண் ஒளி உண்டாகும்.

vii. செசப்பு வாதுமைப் பருப்பை, முலைப்பாலில் உரைத்து, கண்ணில் இட, கண் பிரகாசம் அதிகப்படும்.

2. கண்—சிவப்பு.—

i. அபினியுடன், குங்குமப்பூ சேர்த்து கோழி முட்டை மஞ்சள்கருவில் இழைத்து, கண்ணில்விட, கண் சிவப்பு நீங்கும்.

ii. பாம்பின் கொழுப்பை, கண் ரெப்பைகளில், மையிடுவதுபோல் இட, கண் சிவப்பு நீங்கும்.

3. கண்—நோய்.—பாம்பு தாளுரித்ததோலை, கஷாயம் இட்டு, கண்ணில் வார்த்து கழுவ, கண்ணோய்தீரும்.

4. கண்—சிவப்பு, ஒளி.—ஜடாமாஞ்சில், கொத்தமல்லி இலை, சாற்றில உரைத்து, கண்ணில் விட கண்





# கால்னடை வியாதி குறிப்புகள்.

## வியாதின் குணம்.

### I.—SPLENIC APOPLEXY.

1. மண்ணீரல் அடைப்பான் அல்லது மண்ணீரல் ஜன்னி.

(1) மாடு, திடீரென்று நோய்பட்டு, எழுந்திருக்க, அசத்தமாய் விழுந்துவிடும். அதின் மூக்கும், கண் ரெப்பைகளும், ஊதா வர்ணமா (கருஞ் சிவப்பு) யாவது, கறுப்பு நிறமாவது, மாறும். இரத்தமோ, கறுப்பு நிறமாகி, சாணியோடே விழும். இந்தப்படியிருந்து, கொஞ்சநேரத்தில் சாகும். இறந்த மாட்டை, திறந்து பார்த்தால், இரத்தம், கருஞ் செவப்பு நிறமாகி, மண்ணீரல் (Spleen), சாதாரண ரூபத்தைவிட்டு, மிகவும் பெருத்து இருக்கும். அதில் உள்ள இரத்தமோ, தார் எண்ணெபோல், கறுப்பாய் இருக்கும். சலம், வெகுசீக்கிரத்தில் அழுகி, நாறிப்போகும்.

### II.—QUARTER ILL OR BLACK LEG.

கருங்கால்.

(2) ஆரம்பத்தில், பசு, சாதாரணமாய், பின்னங்கால் நொண்டும். அப்போதே, அந்த கால் வீக்கத்தைக் காட்டும். தோலின் கீழ், வாயு சேர்ந்திருப்பதால், அழுத்தும்போது, நெற நெறென்று, வெடிக்கிற சப்தம் உண்டாகும்.

செழித்த மேய்ச்சல் ஸ்தானத்தில், முதல் முதல், கன்றுகளை மேய்ச்சலுக்கு சாதாரணமாய் விட்டபோது, இந்த விதமான அடைப்பான் வியாதி, காணுகிறது.

மற்ற அடைப்பான் நோய்களில், அதிகரிப்பது போல், காய்ச்சல், இதிலும் அதிகரிக்கும். மரணம், சீக்கிரம் சம்பவிக்கும்.

### III.—MALIGNANT SORE THROAT.

தொண்டை அடைப்பான் அல்லது கொடும்பண்ணுள்ள தொண்டை.

(3) பிராணி, ரொம்பவும் அசௌக்கியமாயும், பலஹீனமாயும், இருக்கும். தொண்டையும், நாக்கும், வீக்கமாகி, வாயில் இருந்து, சொள்ளு ஒழுகும். நாக்கை, வெளியே வைத்துக் கொண்டு இருக்கும். வாய், கறுப்பு நிறமாக இருக்கும். ஸ்வாஸம், துர்காற்றம் அடித்துக்கொண்டு இருக்கும். மரணம், துவரிதமாகச் சம்பவிக்கும்.

### IV.—ANTHRAX FEVER.

அடைப்பான் காய்ச்சல்.

(4) இது, குதிரைகளுக்கு சம்பவிக்கிறது. இது, இந்தியாவில், அடிக்கடி உண்டாகிறது. உக்கிரமானகாய்ச்சல் உண்டாயிரு

ப்பது, பின்பு வெகு சீக்கிரமாக, மிகுந்த பலஹீனம் உண்டாயிருப்பது, கண்ணிலும், மூக்கிலும், வாயிலும், ரத்த நிறமான புள்ளிகள் உண்டாயிருப்பது, மரணம் சம்பவித்தபோது, மூக்கின் வழியாக நுரை தள்ளுவதாக இருக்கும்.

## V.—CARBUNCLES.

### பிளவைகள், இவை மனிதர்களுக்கு சம்பவிப்பவே.

(5) அடைப்பான் வியாதியினால், இறந்த பிராணிகளின் ரத்தம், மனிதசரீரத்தில், புண்ணான இடத்திலாவது, வேறே இடங்களில் ஆவது, பொருந்துத (Inoculation) லினால், இந்தவியாதி உண்டாகிறது. காய்ந்த தோலுங்கூட, இந்த பயங்கரமும் பிராணாபாயமுமான வியாதியை, பரவச்செய்கிறது. கம்பளி நெய்க்கும் ரோமத்தில், அடைப்பான் வியாதியினால் இறந்த, ஆடுகளின் ரோமம், கலந்திருப்பதுண்டு. தோல் வியாபாரமும், ரோம வியாபாரமும், தொற்று வியாதிகளை, மிகுதியாகப் பரவச்செய்கின்றன.

## VI.—BRAXY.

### பிரக்சி அல்லது நீரடைப்பான்.

6. இது, ஆடுகளுக்கு வரும் அடைப்பான். இந்த வியாதியால், ஆடுகள் மந்தை மந்தையாக மரணம் அடையும். இது, மேலே சொல்லிய இரண்டு வகை அடைப்பான்களை ஒத்து இருக்கலாம்.

மாட்டுக்கு கிகிச்சை:—

1. சுத்தமான கார்பாலிக் கமிலம், (Carbolic acid pure) 1 திராம், அல்லது 60 துளி.
2. மெதுவாக பொடித்த, கரி உப்பு, 2½ ரூபா எடை.
3. ஒரு, சிறிய எலுமிச்சம்பழம் அளவு, உருண்டை செய்வதற்கு, போதுமான கோதுமை மாவு.
4. கரும்வேலன் பிசின் கலந்த (கோந்து) நீர்.

இவைகளை சேர்த்து, அரைத்து, உருண்டை செய்து, அதை பட்டணம் அரைப்படி, தின்மையான சுடுகஞ்சியில் கரைத்து, தக்ஷணம் கொடுக்கவும்.

மாடு, சுதாவாய் குடிக்காத பக்ஷத்தில், குழாயால் வாயில் வார்க்கவும்.

---

நோட்டு.—(1) மலச்சிக்கு உண்டாகி இருக்கும் பிராணிகளுக்கெல்லாம் சாந்தமான பேதிமருந்து கொடுக்கலாம்.

(2) சரீரத்தில், எந்த பக்கத்திலாவது உண்டாகும் வீக்கங்களுக்கு, முதலில் வெந்நீர் விடவும். அல்லது வெந்நீர் நனைத்த துண்டினால் ஒத்தடம் கொடுக்கவும். பின்பு களி வைத்து (போல்டிஸ்) கட்டவும். அப்பால், அவசியமென்று தோன்றினால், கொப்பளம் உண்டாக்கும் காரமருந்து பிரயோகித்து, வீக்கத்தை குறைக்கவேண்டும்.

(3) வியாதியின் மூர்க்கம் நின்றபின், பிராணியை கவனமாய் போஷித்து, அதற்கு, நெடுங்காலம், பல விருத்தி மருந்து கொடுப்பது, அவசியம்.



## ON LOYALTY.

### இராஜபக்தி.

1. நம்மை ஆளும் ஆங்கிலேய துரைத்தனத்தில், பிரிடிஷ் நாட்டில் வழங்கி வருகிற, விலையில்லா மாணிக்கங்களாகிய, இலக்கிய இலக்கணங்களையும், மேல்நாட்டு சாஸ்திரங்களையும், நமக்கு வெகுமதிகளாக அளித்தும்; நம் ஸ்வபாவ சக்தியைக் கொண்டு நம் ஸாமர்த்தியத்தாலும், விடா முயற்சியாலும், நமக்கு வேண்டியவற்றை எல்லாம் எளிதில் நாம் அடையும்படி கணக்கில்லாத வழிகளைப்புகட்டியும்; இவ்வாறான பெரும்பாக்கியங்களை நாம் அடைந்திருப்பதும் அல்லாமல், நாம் நினைத்தபடி நம் கருத்தை உபன்னியாச மூலமாக வெளியிடவும், பத்திரிகைகள் மூலமாக எழுதி பிரசுரஞ் செய்யவும், உதாரத்துவமாய் சுயாதீனங்களை கொடுக்கப்பட்டும்; நமக்கும் நம் பொருளுக்கும் அபாயமில்லாமல் காக்கப்பட்டும், இருக்கின்றோம். இதைப்பற்றி அளிக்கப்பெற்ற நன்றிக்காக, நாம், நம் மாகஹிமை தங்கிய இங்கிலீஷ் துரைத்தனத்தாருக்கு, நன்றி அறிதல் உடையவர்களாய் இருக்கவேண்டியது, நம் கடமையன்றோ? இதை மறந்து, அளவு கடந்து, யாதாயினும் ஒன்றை சொன்னாலும், செய்தாலும், அதனால் நமக்கு அந்தரங்கமான ராஜபக்தி இல்லை என்பதைக்காட்டும். இதற்கு முன்னிருந்த இருப்பையும், நம்மை முன்னுக்கு கொண்டுவரும்படி கருணையே வடிவமாகக்கொண்ட நமது துரைத்தனத்தார் பட்டு பிரயாசையையும், சீர்தூக்கிப் பார்க்குமளவில், நமக்கு கிடைத்த அபரிமிதமான நன்மைக்கு காரணம், அவர்களே யென்று ஸ்பஷ்டமாய் விளங்கும். நமக்கு இவ்வளவு நன்மையை உண்டாக்கினவர்கள், இன்னம் என்னென்ன செய்தால் நன்றாகுமோ அவற்றை எல்லாம் செய்ய உடன்பட்டிருக்கிறார்கள். துரைத்தனத்தார், குடிகளின் நன்மையை நாடி செய்யவும், அவை எல்லாவற்றையும், நன்றி அறிதலோடு நாம் உணர்ந்து, பின்னும், குடிகளுக்கு என்ன செய்யப்பட வேண்டுமோ அவற்றை எல்லாம், துரைத்தனத்தாரிடத்தில் நாம் அணு அளவும் பிசகாது தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

2. நமது தேசத்தை ஆளுவதில், எவ்வளவோ வருத்தமும், சங்கடமும், உண்டு. ஆதலால், நன்றி உணர்ச்சியில்லாமல், மனமறிந்து தப்புக்குற்றமாகச்சொல்லி, அதனால் பின்னும் வருத்தம் உண்டாகும்படி செய்யாது ஒழிக. நாம், ராஜபக்தியும், விசுவாசமும், உடையவர்களாய் இருக்கவேண்டுமென்பது, நமது ஜாதிதர்மத்தின்படியும், நீதிசாஸ்திரத்தின்படியும், ஏற்பட்ட சித்தாந்தம். நமக்கு உண்டாகவேண்டிய க்ஷேமங்களுக்கும், இதுவே காரணமாகும்.

3. நம்மில், பெரும்பான்மையோர், நாம் செய்யப்புகுந்த கருமத்தைச் செய்வதில், சோர்வு உடையவர்களும், நியாயா நியாயம் தெரியாதவர்களும், வழக்கமே பிரதானமானதென்று பிடிவாதம் உடையவர்களும், ராஜதந்திரஞானமும், இதுதெரியாதவர்களுமாய் இருந்தால், அப்பேர்ப்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து, தங்கள் நாட்டை, நலம்பெறச் சீருஞ் சிறப்புமாக சுய அரசாக்ஷி செய்ய வல்லவர்களென்று, எதிர்ப்பார்ப்பதும் கூடுமோ? நம்மில், ஒவ்வொருவரும், தனித்தனியே, நம் தேசத்தாருக்கு மென்மேலும் நன்மை உண்டாக நன்றாய் பழக்கப்படவேண்டும்; நாம் குற்றம் அற்றவர்களாய் வாழ்ந்திருக்க நடக்கவேண்டும்; காமக்குரோத முதலிய தீக்குணங்களை ஒழிக்கவேண்டும்; சுயநலத்தைமட்டுப்படுத்தி, பிறர்க்கு பயன்படும்படி செய்வதையே, பெரிதென்று எண்ணி செய்யப்படவேண்டும்.

தாழ்வே தீயோர் வெம்மை
ஆழிபோல் பெருகச் செம்மை
ஊழிமேல் ஆள நம்மை
வாழி விக்டோரி யம்மை.

# CONCLUDING PRAYER.

## மங்கள வாழ்த்து.

அகந்தன்னிலும் புறந்தன்னிலும்
இகந்தன்னிலும் பரந்தன்னிலும்
உருக்கொண்டு பெரிதாகவும்
சிறிதாகவும் உறைகின்ற பரமதயாளா!!!

1. இராஜகுணங்களை நன்குணர்ந்தவரும், பிரஜைகளுக்கு, தம்மிடத்தில், ராஜவிசுவாஸம் உண்டாகச் செய்ய வல்லவரும், நம், உத்தம சக்கரவர்த்தினியாருமான, விக்டோரியா மஹிஷியார், இன்னும், பல நூற்றாண்டு அரோக திடகாத்திரராய், வெகுவாழ்வு வாழும்படி கிருபை செய்ய, தேவரீரைப் போற்றி, இராஜபக்தியுடன் மங்கள வாழ்த்து சொல்லுகிறோம்.

2. நம், ஸார்வ பௌமியான விக்டோரியா ராஜமஹிஷியார், வாழ் நாள் அளவும், சத்துருபயமும், உள்நாட்டு கலகமும், அண்டாமல், அவர் ஆக்கினைக்கு உட்பட்ட தேசங்கள் எல்லாம், க்ஷேமம் அடைந்து, இன்னும் பல நூற்றாண்டுகள் சுகஜீவியாயிருந்து, புகழோங்கி, ராச்சிய பரிபாலனம் நடத்திவர, எங்கள் நாட்டார் அனைவரும், தேவரீரைப் போற்றி, இராஜபக்தியுடன் மங்கள வாழ்த்து சொல்லுகிறோம்.

3. ஊக்கமாய் பலகலைகளையும், வேதாகமங்களையும் கற்று, இப்போது, தமிழுக்கு உறைவிடமாய் விளங்கி, பிரக்யாதி பெற்று, மேதினியோர் மெச்சிப்புகழ் மன்னரும், பெருங்கொடை வள்ளலும், பாவலர் போற்றும் காவலரும், ஸாரஞ்சித நேயரும், ஸர்வகுணாலங்கிருத பூஷணருமான, நம், ஸ்ரீமத் ஹிரண்ய கர்ப்பயாஜி ரவிகுல முத்து விஜய ரகுநாத ராஜா, பாஸ்கர ஸேதுபதி பூபாலர், அவர்கள், பெருஞ் செல்வமுற்று, மாயாப் புகழ்மேவி, பல நூற்றாண்டு தீர்க்காயுஸு பெற்று, வாழ, அருள் புரிய, தேவரீரைப் போற்றி, மங்கள வாழ்த்து கூறுகிறோம்.

4. இத்தமிழ் நாட்டைச் சார்ந்த, கிராம ரயித்துகள், கிராம நவுகர்கள், வியவஹார ஞானத்தை விருத்திசெய்ய, "கிராம வியவஹாரிணி" என்னுஞ் சஞ்சிகையை, பிரசுரஞ் செய்ய, மேற்போட்டுக் கொண்ட எங்கள் முயற்சி, கோடாது தீர்க்காயுஸு பெற்று வளர, தேவரீரைப் போற்றி, மங்கள வாழ்த்து கூறுகிறோம்.

5. தயாநிதியான, தேவரீர், எங்கள் மங்கள வாழ்த்துகளை கிரஹிக்க, ஸர்வஸாம்பிராச்சியாதிபத்திய பிரபுத்துவம், தேவரீருடையதாவதாக.

வாடாத ரத்னம் மாமலராளுடன் வாழும் ரத்னம்
கோடாத ரத்னம் அவனி தன் னீழலிற் கொண்ட ரத்னம்
நாடாத ரத்னம் நியமென்று நராதிபரும்
சூடாத ரத்னம் விக்டோரியா மஹிஷி துரைத்தனமே!!!



# கிராமவியவஹாரிணி.

சித்தூர், 1899௵ ஜுன் மீ

## PART II.

### *A REVIEW ON THE CONTENTS OF THE JOURNAL, THE RESPONSIBILITY OF THE JOURNALIST & AN APPEAL TO THE PUBLIC FOR ITS PATRONAGE.*

பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விஷயார்த்தங்களும்,
பத்திராதிபர்பொறுப்பும், பத்திரிகையை அபிமானிக்க வேண்டுகோளும்.

"கிராமவியவஹாரிணி" என்னும் திரு நாமம் பூண்ட, இச் சஞ்சிகை, இத்தேச தமிழ் நாட்டில் உள்ள, முக்கியமாய், கிராம, குடிகள், கிராம சிப்பந்திகளான, ஒவ்வொருவர் கையிலும், களிப்புடன் விளையாட, புத்தக ரூபமாக வெளிப்பட்டு வருகின்றது.

2. இந்த சஞ்சிகையை, இரண்டு பிரிவாகச்செய்து, முதல் பிரிவில்,

1. தெய்வ வணக்கம்.
2. கிராம உத்தியோகஸ்தனுக்கும், கிராம குடிக்கும், இத் தமிழ் பத்திரிகையின் பிரயோஜனத்தைப் பற்றிய, விவேக ஸம்பாஷணை.
3. பிரபு, பிரபு சேவகன், கலெக்டர், இவர்களிட விநோத ஸம்பாஷணை.
4. ஆழ்வாராதிகள் வைபவம்.
5. திருவிளையாடற் புராணவசனம்.
6. நள-தமயந்தி சரித்திர சாரசங்கிரஹம்.
7. விகட விநோதம்.
8. குடிவாழ்க்கை பழமொழிக் காஞ்சி,
9. விவஸாய பழமொழிக் கோர்வை.
10. வைத்திய குறிப்புகள்.
11. கால் நடைவியாதி சிகிச்சை குறிப்புகள்.
12. விடுகதைகள்.
13. இராஜபக்தி.
14. கடவுள் மங்கள வாழ்த்து, இவைகளைப்பற்றி பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.



67649

3. இவைகள், இதை வாசிப்போர்க்கு அதிக உல்லாசந்தரக் கூடியவைகளாகவும், சத்தியம், ஸன்மார்க்கம், ஜீவகாருண்ணியம், முதலிய நீதி நெறிகட்கு ஏற்றவைகளாயும், வருணாசிரம தருமங்கள் முதலிய, லௌகீக, வைதிக, விஷயங்களைச் சார்ந்தவைகளாயும், உள்ளவைகள். இவைகளைப்பற்றி, கூடியவரையில், சொல் நயம், பொருள் நயம் உள்ள, செந்தமிழ் நடை கொண்ட, மேலே கண்ட அனேக அற்புத விஷயங்களை, வாசிப்போர் ஒவ்வொருவர் மனதையும், குதூகலிக்கச் செய்யும், என்று, நாங்கள் நம்புகின்றோம். முக்கியமாய், இந்த பிரிவு, எச்சமையத்தாரும், புருஷர்களும், ஸ்திரீகளும், சிறுவர்களும், சிறுமிகளும், படித்து, ஆனந்திக்கத் தக்கதென்று கருதுகிறோம். நம்மிட பாஷையில், இந்தப்படி வசன காவியமாயும், கேள்வி, விடை, ரூபமானதாயும், விவேகமும், விநோதமுமான சம்பாஷணையாயும், இல்லாதகுறைவை, கூடியவரையில். பரிபூர்த்தி செய்ய நிச்சயித்திருக்கிறோம்.

4. இரண்டாம் பிரிவில்,

1. இச்சஞ்சிகையில் பிரசுரமான விஷயார்த்தங்களும், பத்திராதிபர் பொறுப்பும், பத்திரிகையை அபிமானிக்கும்படி வேண்டுகோளும்.
2. கிராம சிப்பந்திகளின் தொழில், பொறுப்பு, அதிகாரம், அவர்களிடத்தில், நம் கவர்ன்மெண்டாருக்குள்ள கௌரவம், மதிப்பு, அவர்கள் உத்தியோக அந்தஸ்துக் குரிய, முக்கிய யோக்கியதாம்ஸம், இவைகள்.
3. கிராம உத்தியோகஸ்தர்களின், ஸ்பெஷியல் டெஸ்டு என்கிற, சட்டபரிக்ஷை விளம்பரம்.
4. கிராம முன் சீப்புக்கு, சம்பந்தித்த உத்தரவுகள்.
5,6. கால்நடை, ஸ்டாம்பு, ரெஜிஸ்டிரேஷன், சட்ட ஸங்கிரஹம்.
7. ரிவின்யூ போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர்கள்.
8. தமிழ்ஜில்லா கலெக்டர்களின் கிராமஉத்தரவுகோர்வை.
9. கிராமசுகாதாரம்.
10. வர்த்தமான குறிப்புகள். இவைகளைப்பற்றி பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

5. இவைகள், கிராமகுடிகளுக்கும், கிராமசிப்பந்திகளுக்கும், லௌகிக விஷயமாய், போதுமானவரையில், சட்டபாஷையாயும், சிக்குகளாயும் இல்லாமல், தெளிவான நடையில், சீக்கிரத்தில் கிரஹிக்கத்தக்கதாகவும், ஒவ்வொரு சங்கதியும் ஆரம்பிக்கும்பொழுது, அதின் கருத்தை, இங்கிலீஷிலும், தமிழிலும், சுருக்கமாய் தலைப்பில் கண்டிருக்கிறதும் அல்லாமல், அந்த பிரதிசங்கதிக்கு அனுசரணையான ஆதாரங்களை எல்லாம், தகவல் படுத்தி, கூடுமானவரையில்; ஜனரஞ்சிதமாய் கோர்வை யிடப்பட்டதாக எண்ணுகிறோம்.





இதில், ஒவ்வொரு விஷயமும், தனித்தனி, ஒன்று, இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, பக்கங்கள், அந்தந்த விஷயங்களுக்கு, ஏற்றபடி பதிப்பித்து, அதற்குரிய வட்டின் இலக்கத்தையும், அச்சிட்டிருக்கின்றபடியால், சந்தாதார் முடிவில், அந்தந்த விஷய ஸம்பந்தமான பக்கங்களை தனித்தனியாய் (பயிண்டு) கட்டடஞ் செய்துக் கொள்ளலாம்.

6. இந்த சஞ்சிகையை, தமிழ் நாட்டில் உள்ள பிரதி கிராம குடிகள் பொறுமையோடும், சிரத்தையோடும் வாசித்து, தங்கள் பூமிகளையும், பாத்தியங்களையும், சம்பந்தித்த எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து உணர்ந்து, இதனால் ஆகிலும், அதிகாரிகளால் ஆகிலும், தங்களுக்காவது, தங்கள் சொத்துக்காவது, அக்கிரமம் ஸம்பவித்தபோது, மேலான அதிகாரிகள் இடத்தில், நியாயத்தை அடைந்து, விரோதிகளுடைய பயத்தை விட்டு, சுகம் அடைவார்களென்றும்; கிராம சிப்பந்திகள், கிராம வியவஹாரத்தைச் சார்ந்த எல்லா அம்ஸங்களையும், செவ்வையாய் தெரிந்து, தங்கள் வேலைகளை அதிகாரஸ்தர்களுக்கு திருப்திகரமாய் நிறைவேற்றி, அவர்கள் ஸன்மானம்பெற்று, தங்கள் கௌரவத்தை காப்பாற்றிக் கொள்வார்கள் என்றும், நம்புகிறோம்.

7. இச்சஞ்சிகையில், பிரசுரமாகும் யாவத்து விஷயங்களும், மற்ற சமாசார பத்திரிகைகளில் உள்ள விஷயங்கள். மற்றொருகாலத்தில் படிக்க, அவசியம் இல்லாமல் போவதுபோல் இராமல், என்றுமே படிக்கத்தக்கவைகளாயும், மகா உல்லாசப்படும்படியாகவும், எப்போதுமே உபயோகம் உள்ளவையாயும், இருக்கின்றன.

8. இத்தகைய பத்திரிகைகளை நடத்துபவர்கள் பாடு, பெருஞ்சங் கடப்பாடாக இருக்குமென்று சொல்லச் சந்தேகமில்லை. அது எவ்வாறு எனில், "உலகம்பலவிதம்", உலக முழுவதும் சம்மதிக்கத்தக்கதும், அவரவர் மனதுக்கு ஆச்சரியப்படுத்துவது மாகிய பலவிஷயங்களை, ஒருங்கே திரட்டி, பலர்க்கும் உபயோகப்படும்படி பிரசுரிப்பது, எவ்வளவு கஷ்டமான காரியம், யோசியுங்கள்! ஒரே வயிற்றில் பிறந்து, ஒரேகுடியில் வாழ்ந்திருக்கும் பலரில், ஒருவர்க்கு உவர்ப்பிலும், ஒருவர்க்கு கார்ப்பிலும், ஒருவர்க்கு புளிப்பிலும், விசேஷ பிரீதி இருப்பது, அனுபவ சித்தமாய் இருக்கிறது.

9. இது நிற்க; ஒரு பத்திரிகையை நடத்தும் பத்திராதிபர், உலகத்தாருக்கு ஒவ்வொரு நாள் விருந்து வைத்து, வயிற்றைப் பூரிக்கப் பண்ணுவதில், பிரீதியை வருவித்துக் கொள்ளத் தக்க திரண்ட செல்வம் இல்லாமலும், தன் அமரிக்கையான ஒரு அறையில், ஆலோசனாசனத்தில் குந்தி, மண்டை பிளக்க மனோவியாபாரஞ் செய்து, தன் எழுது கோலையும், காகிதத்தையும், ஏதுவாகக்கொண்டு, உலகம் முழுவதும், ஒப்பும்படியான தொழில் நடத்தி வருவது, எவ்வளவு கஷ்டமான காரியம், யோசியுங்கள்!

10. பருத்த மரங்களின் சாரத்தை, ஒரு சிறுபுட்டியில் தயிலமாக இறக்குவது போல, பெரிய கிரந்தங்களின் சாரத்தை திரட்டி, சுருக்கி, எழுதுவது, கடல்நீரை, படி கொண்டு அளப்பதைப் போல் ஆகும். ஆயினும், விடைகள் கூடியே ஓர் புகமானதுபோல், இது ரூபமாகவே, அநேக அருமையான இங்கிலீஷ் நூல்களின் பொருள்களை, கூடிய வரையில் ஸங்கிரஹித்து, எல்லோரும், மிக எளிதாய் அறியும் படிக்கு, நாளுக்கு நாள் வெளியிடப்படும்.

11. இப்பத்திரிகையின் ஸ்வரூபத்தையும், உத்தேசியத்தையும், பிரயோசனத்தையும் நன்றாய் அறிந்து, நம்முடையவர்கள் தகுந்தபடி இதை ஆதரிப்பார்களாகில், வருகிற வருஷம் இதன் உருவத்தை பெரிதாகச் செய்து, பிரசுரஞ் செய்ய நிச்சயித்திருக்கின்றனம்.

12. புகைவண்டிக்கு, தனியே இழுக்கும் சத்தியிருந்தும், உருளைகள் இன்றியமையாத துணையாய் இருக்கின்றன. ஆகையால், இப்பத்திரிகை, நீடூழி நிலை பெறத்தகுந்த கையொப்பக்காரர்களும், விளக்கம் பொருந்த சிறந்த வித்வான்களுடைய துணையும், வேண்டி இருப்பதால். அவர்கள் ஒவ்வொருவரும், இதை சொந்த பத்திரியாக அபிமானித்து, கூடிய முயற்சி செய்து, என்றும் கைகொடுத்து, உதவிசெய்து, நம் "கிராமவியவஹாரிணி", வெகு சீக்கிரத்தில் பலப்பட்டு, ஸ்திரமாய் நிற்கும் பாக்கியம் பெறுமென்று, நம்புகிறோம்.

13. பின்னும், தமிழ் நாட்டு மடாதிபதிகள், ஜமீந்தார், ஜாகிர்தார், மிட்டாதார், அப்படியே தலைக்கு 50, 100, பிரதிகள் வாங்கி, கிராமாந்திரங்களில் பரவச்செய்து வருவார்களாயின், அது நமக்கும், ஜனங்களுக்கும், தமிழ் பாஷைக்கும் செய்த, பேர் உதவியாக இருக்கும்.

இதற்கு சுவல்ப வருஷசந்தா ரூ. 2 அணா 2 தான். இதை ஆதரிக்க முன்வரும் போஷகர்கள், ஒருவிசை பத்து ரூபாய் கொடுப்பீத. அவர்களுக்கு, சஞ்சிகையின் ஒருபிரதி, பின்னும் யாதொரு சந்தா வாங்காமலே, அனுப்பிக்கொண்டு வரப்படும்.

14. இச் சஞ்சிகையில் கிராம கணக்கர்களுக்கு மிகவும் உபயோகமுள்ள, சில அளவைச்சாஸ்த்ர ஸர்வே விதிகள், இங்கிலீஷிலிருந்து மொழி பெயர்த்து கிராமஸ்தர்களுக்கு சுலபமாய் கிரஹியம் ஆகும்படி, தமிழில், கேள்வி, விடை ரூபமாக, தயார் செய்துகொண்டு இருக்கிறோம். இது சிறந்தம் கஷ்டமான தாகையால், கிராம கணக்கர்கள், சுலபமாய் கிரஹிக்கும்படி, தெளிவான நடையில் எழுதப்பட்டுக்கொண்டு இருக்கிறது. அதை, பின்னும் இரண்டொருதடவை, அந்த ஸாஸ்திரப் பயிற்சியில் தேர்ந்தவர்களும், விசேஷ அனுபவமும் உள்ளவர்களைக் கொண்டு, பரிசோதித்து, வருகிற முறை பிரசுரஞ் செய்யப்படும்.





*THE duties, responsibilities and powers of the village officers, the estimation of our beloved Government regarding their position in the village and also of the special qualifications required of them.*

## கிராம உத்தியோகஸ்தர்களின் தொழில், பொறுப்பு, அதிகாரம், அவர்களிடத்தில், நம் கவர்ன்மெண்டாருக்குள்ள கௌரவம், மதிப்பு, அவர்கள் உத்தியோக அந்தஸ்துக்குரிய முக்கிய யோக்கியதாம்சம்.

இந்த சென்னை ராஜதானியில், சுமார் 55,000 கிராமங்கள் இருக்கின்றன. அவைகளில் உள்ள, மூன்றுகோடி ஜனத் தொகையில், ஏறக்குறைய, இரண்டு கோடி ஐம்பது லக்ஷம், அதாவது, 100-க்கு 90 ஜனங்கள் கிராமவாசிகளும், மீதி 10 பேர் பட்டண வாசிகளுமாம்.

2. கிராமம் என்பது, ராச்சியத்துக்கு முக்கியமான அங்கம்; [illegible] வியவஹாரங்களை நடப்பிப்பதற்கு, நியமிக்கப்பட்ட, கிராம உத்தியோகஸ்தர்கள், அநாதியாக, எல்லா கவர்ன்மெண்டாரால் கௌரவப்படுவதற்கும், அவர்கள் உத்தியோகங்கள், மற்ற உத்தியோகத்தைப்போல் அல்லாது, வம்ச பாரம்பரியமானதாய், எண்ணப்படுவதற்கும் காரணமாய் இருக்கிறது.

3. இந்த ராஜதானியில் (பிரஸிடென்ஸியில்), சில ஜில்லாக்களில் தவிர, மற்ற ஜில்லாக்களில், கிராம சிப்பந்தி வேலைகளுக்கு, பரம்பரை பிராதபாத்தியதை, இன்னும் அமுலில் (அனுஷ்டானத்தில்) இருக்கிறது. பெரும்பாலும், மணியகார், கர்ணம், இவர்களுக்கு, அந்தந்த கிராமத்தில், அவர்கள் முன்னோர்கள், சம்பாதித்த பூமிகள் உண்டு. அவர்கள், கிராமத்தில், குடிகளுக்கும், கவர்ன்மெண்டாருக்கும், பொதுவாயிருந்து, கிராமவேலை செய்து வருகிறார்கள். அப்பேர்க்கொத்த கிராம சிப்பந்திகளுக்கும், அவர்கள் கிராமத்துக்கும், இருக்கப்பட்ட, ஸ்வதேசாபிமான ஸம்பந்தத்தை, பலஹீனப் படுத்தத் தக்கதாகவாவது, அல்லது, அவர்களுடைய உத்தியோகங்களின் ஸ்வபாவமாவது, மாறவித்தம் இல்லாததாயும், மாறுதலுக்கு இடம் உள்ளதாகவாயும், இருக்கும் ஸந்தர்ப்பம், ஏதாவது நேரிட்டால், அவர்களுக்கு, கிராமத்தில் இருக்கப்பட்ட செல்வாக்கு குறைந்து, அதனால், இராஜாங்கத்துக்கும் பலக்குறைவு உண்டாகலாம். இப்படி பலக்குறைவு நேரிடுவது, ராஜ்யபரிபாலனத்திற்கு, ஓர் கெடுதி உள்ளதாக எண்ணக் கூடியது.

4. மேற்படி கிராமசிப்பந்திகள், சரியான நடவடிக்கை இல்லாமல், மோசடியான தப்பு தண்டாக்கள் செய்த பக்ஷத்தில், தம்

கள் பரம்பரை பாத்தியதையை, இழந்து விடுவதற்கு உள்ளாகிறார்கள். ஆகையால், கிராமத்தில், தங்கள் உத்தியோகங்களை, தங்கள் வமிசத்திலிருந்து வெளிப்போக ஒட்டாமல் காப்பாற்றி, தங்கள் வாரிஸுதாரர்கள் அடையும் படியான பாத்தியதைக்கு, ஹானி உண்டாக்காமல், ஜாக்கிரதையாய், தங்கள் வேலையை திறமையுடனேயும், தவறாமலும், செய்யவேண்டிய அக்கறை அவர்களதாய் இருக்கிறது. அந்தப்படி; தங்கள் ஸந்ததியார் அடையும்படியான பாத்தியதையிருந்து வருவதே, அவர்களுக்கு போதுமான பிரதிபலனாக பாவிக்கிறார்கள். மேலும், தங்கள் கிராமத்தையும், தங்கள் உத்தியோகத்தையும், தங்கள் கிராமத்தில், தங்கள் ஹோதாவுக்குள்ள கிராமாசார ஏற்பாடுகளையும், தங்கள் பிதுரார்ஜிதமென்று, பரம்பரையாக நாடி, அபிமானித்து வருகிறார்கள்.

5. துரைத்தன ஸம்பந்தமான சகலவியவஹாரங்களுக்கும், கிராம உத்தியோகஸ்தர்கள் செய்யும் வேலையே மூலாதாரம். நமது பிரிடிஷ் ராஜ்ய பரிபாலனத்தால், நாளுக்கு நாள் விருத்தியாகிவரும், இத்தேசத்தில், நத்தங்களாலும், பாவத்தங்களாலும், கிராம நத்தங்களாலும், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தின் விசாலம், விவசாயத்துக்கு உபயோகப்பட்டதும், உபயோகப்படாததுமான, நிலங்களின் அளவு, விவசாயஞ் செய்யப்பட்ட நிலத்தின் பரிமாணம், நாலுவிதமான நிலங்களின் பூசார விபரம், அந்தந்த நிலங்களில் உற்பத்தியாகும் தானியங்கள், தானிய உற்பத்திக்கு ஆதாரமான ஆறு, ஏரி, குளம், குட்டை முதலியவைகளின் சமர்த்தி, ஜனங்களின் தேக ஆரோக்கியங்கள், கால்நடைகள், சில காலங்களில் பிரஜைகளைப்பிடிக்கும் வியாதிகளான, வைசூரி, வாந்திபேதி, முதலானவைகள், வியாபித்து இருக்கும் இடங்கள், காலபேதத்தை அனுசரித்து, குறைந்தும், அதிகரித்தும் இருக்கும், ஜனன மரணாதிகளுக்கு காரணங்கள், தச்சவேலை, கருமாரவேலை, முதலிய, கைத்தொழில்களாகிய ஜீவனோபாயங்கள், வர்த்தக வியாபாரங்கள், முதலிய, இப்படிப்பட்ட ராஜ்ய பரிபாலனத்திற்கு, மிகவும் அவசியமான சங்கதிகளை எல்லாம், ராஜ்ய தந்திர பிரவர்த்தர்களாகிய, தாலூகா அதிகாரிகளான, ரெவினியூ இன்ஸ்பெக்டர், தாசில்தார், டிவிஷனல் ஆபீஸர்; ஜில்லா அதிகாரியான கலெக்டர்துரை; பிரஸிடென்ஸி அதிகாரிகளான ரிவினியூ போர்டார், கவர்ன்மெண்டார்; இவர்களுக்கு மேல் அதிகாரிகளான இந்தியா கவர்ன்மெண்டார், ஹோம் கவர்ன்மெண்டார்; இவர்கள் யாவரும், கிராம மணியகார், கணக்கப்பிள்ளை, இவர்களால் தானே தெரிந்துகொள்ள வேண்டியதாய் இருக்கிறது. இவர்களையன்றி, கிராமவியவஹாரங்களைப்பற்றி வேறே யாராலாவது தெரிந்துக்கொள்ள சாத்தியமோ?





6. இந்தப்படி, கௌரவமுள்ள கிராம உத்தியோகஸ்தர்கள், தங்களுக்கு அப்பேர்க்கொத்த கௌரவங்கள் பொருத்தமென்றும், தாங்கள் செய்யும் வேலையே, கவர்ன்மெண்டை சேர்ந்த எல்லா இலாகாக்களுக்கும் மூலாதாரம் என்றும், தங்களுடைய வேலைகளைத் தாங்கள் கிரமமாய் நடத்துவதினால் உண்டாகும் தேச க்ஷேமமும், அப்படி நடத்தாவிடில் உண்டாகும் தேசக்ஷோபமும், அவர்கள் அறிந்து கொள்ளாவிடில், அவர்கள் வேலை எப்பொழுதும் சரியாய் நிறைவேறிவரும் என்று எண்ணுவதற்கு இடமிராது. பூர்வ ஆசாரத்தை அனுசரித்து, காலத்தைப் போக்குபவர்கள் அனேகரே தவிர, தங்களுக்கு பொருந்த கடமைகளையும், கௌரவங்களையும், பூரணமாய் அறிந்துக் கொண்டு, வேலைகளை நிறைவேற்றுபவர்கள் சிலரே. இதற்கு காரணம், சாதனம் இல்லாமையே தவிர சாமர்த்தியம் இல்லாமை அல்ல, என அனுபவசித்தாந்தத்தினால் தெரியவருகிறது.

7. இந்த கிராம உத்தியோகஸ்தர்கள், பலவிதமான துரைத்தன காரியங்களை நிறைவேற்றவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்துக்கும், கிராமாதிகாரி அல்லது கிராம முன்சிபு என்பதாய் நியமிக்கப்பட்டு, கிராமத்தில் வசிக்கும் கிராம குடிகள், அவரிடத்தில் மிகுந்த நம்பிக்கையும், மதிப்பும் உள்ளவராயும் இருக்கின்றார். கிராமத்தினுடைய சர்வாதிகார விசாரணை அவருடையதே. அவருக்கு, பொறுப்பும், அந்தஸ்தும் அதிகம். இந்த கிராமாதிகாரிக்கு சில ஜில்லாக்களில் பொடேல், நாயுடு, பெத்தகாப்பு, என்றும் சிலதில், மணியகார், நாட்டாண்மைக்காரர், கவுண்டர், அல்லது அதிகாரி என்றும், பின்னும் சில இடத்தில் ரெட்டி என்றும் பெயர் வழங்குகிறது. கிராம அதிகாரி அல்லது, பெரியதனக்காரர், கிராமத்தில் கவர்ன்மெண்டாருடைய பிரதிநிதியாய் இருக்கிறார். இவருக்கு,

1. கிராம கலெக்டர்.
2. கிராம மாஜிஸ்டிரேட்டு.
3. கிராம போலீஸுதாரர், அல்லது சூபரின்டென்டென்டு.
4. கிராமமுன்சிபு (ஜட்ஜி) என்கிற நான்கு ஹோதாக்கள் உண்டு. ரெவினியூ விஷயத்தில், ஜில்லாவுக்கு கலெக்டரும், தாலூகாவுக்கு தாசில்தாரும், எவ்விதமோ, அப்படி, கிராம முன்சிபு கிராமத்துக்கு ஸர்வ அதிகாரியாய் இருக்கிறார். கிராமத்தில் திருடு போன விஷயத்திலும், ஸ்வல்ப குற்றஞ் செய்பவர்களை விசாரிக்கவும், சிலமணிநேரம் சிக்ஷிக்கவும், அவர்களை கிராம போலீஸான தலையாரி வசத்தில் வைக்கவும், இவருக்கு அதிகாரம்

உண்டு. பஞ்சமர் முதலிய இதரஜாதியர்களா யிருந்தால் அவர்களைத் தொழுமரத்தில் போட்டு வைப்பதும் வழக்கம். அகஸ்மாத்து அல்லது ஜடிதி மரணம் நேரிட்டபோது, விசாரணைக்கர்த்தராகவும் இருப்பதும் உண்டு. கிரிமினல் விஷயத்தில் இவர் கிராம மாஜிஸ்டிரேட்டு ஆகையால், இவருக்கு போலீஸாருடன் சம்பந்தம் உண்டு. சிவில் வியவஹாரங்களில், இருபது ரூபாய்க்கு அதிகப்படாத வியாச்சியங்களைப் பிடித்து, விசாரித்து, பைசல் செய்யத்தக்க ஜட்ஜி அதிகாரமும், கிராமத்தில் இவருக்கு உண்டு. இவற்றில், முதல் மூன்று தொழில்களையும், எல்லா கிராம அதிகாரிகளும், நிறைவேற்ற வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். நாலாவது ஹோதாவை, வாசிப்பும், திறமையும், சட்டப்பயிற்சியும் இல்லாதவர்கள் நடத்தக் கூடாமை. இந்த காரணத்தைப்பற்றியே, சில கிராமாதிகாரிகள், தமக்கு உண்டான சிவில் ஹோதாவை உபயோகத்திற்கு கொண்டு வருகிறதில்லை.

8. இதுவும் அன்றி, கிராமாதிகாரிக்கு ரிவினியூ வகையில் வழங்கும் மணியகார் என்பவர், ஸர்க்கார் வரிவசூல் செய்வதற்கும், வசூலான மொத்தத்திற்கு ரசீதுகள் கொடுப்பதற்கும், அதிகாரத்தை வகித்து, வசூலான மொத்தங்களை தாலூகா கஜானாவுக்கு அனுப்பவேண்டியவராக இருக்கிறார். அவரால் வசூல் செய்ய முடியாத, மிகுந்த பெரிசையுடைய கிராமங்களுக்காக, உடன் சேர்க்கையான, ஜாயிண்டு மணியக்காரர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அகஸ்மாத்தான மரணங்கள் நேரிட்டாலும், மழைபெய்தாலும், முகஸியாதிகாரிக்கு ரிப்போர்ட்டுசெய்து கொண்டும்; ஜனன மரணங்களைக் குறித்து ஸ்டேட்மெண்டு அனுப்புவித்துக் கொண்டும், ஸர்க்கார் வேலையாய், ரெவினியூ முதலான உத்தியோகஸ்தர்களுக்கு சகாயஞ் செய்து கொண்டும், உத்தியோகஸ்தரில் ஒருவர், ஸர்க்கார் வேலையாயாவது, வேறு வேலையாயாவது, கிராமத்துக்கு விஜயஞ் செய்தால், அவருக்கு வேண்டியவைகளுக்கு உதவி செய்ய வேண்டியவராயும் இருக்கிறார். மேலும், கிராமத்தலைவர், கிராமத்தில், பின்னும், ரயித்துகளுக்குள் உண்டாகும் சண்டை சச்சரவுகளை, விசாரித்து நிர்மாணிக்கவும், உற்சவம், விவாஹம் முதலிய விசேஷ காரியங்களை நடப்பிக்கவும், முக்கியஸ்தர். கிராம நிவாசிகளில் அவரே ஸர்வாதிகாரி.

9. கிராமத்தில், மணியம் முன்சிபுக்கு, பின் உத்தியோகஸ்தர் கர்ணம். அவர், ஒவ்வொருவகையிலும், கிராம பெரியதனக்காரருக்கு உதவி செய்து, யோசனை சொல்லவேண்டும். கிராமாதிகாரி, கிராம முன்ஸீபாகவும், மாஜிஸ்டிரேட்டாகவும், இருக்கிற ஹோதாவில், கர்ணம்; அவருக்கு க்ளெர்க் (ஸம்பிரதி) ஆவார். எழுதிவைக்கவேண்டிய அவஸியம் இருக்கிற ரிபோர்ட்டுகளையும், கணக்குகளையும், ஸ்டேட்டுமெண்டு முதலியவைகளையும், அவர், தயார்செய்ய





வேண்டியவர் ஆவார். இவருக்கு, கிராமத்தில் உள்ள யாவத்து பூமிகளுடைய விஸ்தீர்ணம், ரயத்துபெயர், தீர்வை, முதலானவை தெரிந்திருக்கவேண்டும். இவர், இதைச்சேர்ந்த கணக்குகள் வைக்க வேண்டி யிருக்கிறது. மணியகார், தாலூகாவுக்கு பணம் இருஸால் செய்யும்போது, கணக்கு தயார் செய்வதில், மணியகாரருக்கு சகாயஞ் செய்யவேண்டி யிருக்கிறது. கிராமத்தில், கணக்க பிள்ளை, கணக்கு எழுதுவதற்கு தேர்ந்த, ஸமர்த்தனாய் இருப்பதால், கிராமஸ்தர்கள், பத்திரம் முதலானவை எழுதவேண்டியிருந்தாலும், வட்டி கணக்கு தீர்க்கவேண்டியிருந்தாலும், கணக்கபிள்ளையைத் தேடவேண்டியிருக்கிறது. கிராமத்தில், கர்ணம், ஸமர்த்தரும், தந்திரம் தெரிந்தவருமாய், இருக்கிறார். கணக்கர், எவ்வளவு நல்லவராய் இருந்தாலும் கிராமஸ்தர்கள் அவரை ஸாதாரணமாய் நம்புவதில்லை. ஆனால், கிராமத்தில், ஒவ்வொருவரும் அவரை விரோதித்துக் கொள்வதற்கும், எதிர்ப்பதற்கும், பயப்படுகிறார்கள். ஆகிலும், கிராமத்தில், ரயித்துகளில், வேரேயாரும் அவ்வளவு திறமையாய் எழுதவும், சீக்கிரமாய் கணிக்கவும், அனேகமாய் இல்லை. ஆகையால், யாதொன்றுக்கும், கணக்கரிடத்திற்கே போவார்கள். இதுவும் அல்லாமல், பார்ப்பவர்கள், மிகுந்த ஆச்சரியப்படும்படி, கணக்கபிள்ளை, கிராமத்தில், பிரதி பூமியைக் குறித்தும், எப்போர்க்கொற்ற சங்கதியைக் குறித்தும், கணக்கு பாராமலே சொல்லும்படியான சாமர்த்தியம் உள்ளவர். ஒரே ஒரு கர்ணம், கணக்கு வைக்க முடியாத மிகுந்த பேரிசையுடைய கிராமங்களுக்கு, உதவி கர்ணங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

10. கிராமத்தில், போலீஸ் வேலை செய்பவன் தலையாரி. எப்போதும், அவன், அறடி நிகளமுள்ள, தடிக்கோலை கையில் ஏந்திக்கொண்டு இருப்பான். அவன், சிவில், கிரிமினல், வியாச்சியங்களில், கிராம முன்சீபு உத்தரவுபடி, போலீஸ் வேலைகளைச் செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டு, இருக்கிறான். அவனுடைய சரியான வேலை, தன் கிராமத்தை காவல்காப்பதாகும். முன்சீபு, ரயித்துகளைத் தெண்டித்தால், தலையாரி ஜெயில் காவல்காரனாய் இருப்பான். இராத்திரி காலங்களில், கிராமத்தை சுற்றி ரோந்துபோய், நிலங்களில் பயிர் அறுவடைக்கு இருந்தால், அறுவடை திருடு போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டியதும், கிராமத்திலிருந்து வசூல்தொகை இருசால் செய்யும்போது, அதை காவல் காப்பதும், கிராமாதிகாரியின் உத்தரவுகளின்படி, பொதுவாய் நடப்பதும், அவனுடைய கடமையாகும். தலையாரிகளுடைய சங்கியையானது, கிராமம் அல்லது கிராமங்களின் தொகுப்பின் ஜனஸங்கியைக்கு, ஏற்றபடி சாதாரணமாய் மாறுகிறது.

11. இது நிற்க, முன்னைப்பார்க்கிலும், இப்போது ஜனஸாமானியத்துக்கு உண்டாய் இருக்கும் வித்தியாபிவிருத்தியை, அறிவ

சரித்தும், இப்போதிய காலபேதத்தை யோசித்தும், நம் கவர்ன்மெண்டார், கிராம உத்தியோகஸ்தர்களின் அதிகாரத்தை உயர்த்தியிருப்பதால், தங்கள்பேரில் பாரித்த ஜவாபுதாரியுள்ள மேற்படி உயர்ந்த அதிகாரத்தை, ஜாக்கிரதையோடு, திர்யமாயும், ஸர்வ ஜனங்களுக்கு திருப்தியாயும், நடத்தி, இனி, முன் வெகு நாளாக்கு தங்களுக்குள்ள உத்தியோகத்தை காப்பாற்றிக்கொள்ளும் நிமித்தம், கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சாமர்த்தியத்தை உண்டாக்குவதற்கு, இப்பால் இந்த ராஜதானியைச் சார்ந்த சில ஜில்லாக்களில், சர்வே, ஸெடில்மெண்டு, பைஸலாதியான பின், கிராமங்களின் வட்டங்களானவை, ஓரே ஸமமான வீதப்படி நிர்ணயித்து ஏற்படுத்தப்பட்டவைகள் அல்ல; அவைகளில், மணியகார், கர்ணங்கள் செய்யவேண்டிய வேலைப்பாடுகளிலும், ஒன்றுக்கொன்று சம்மானவைகள் அல்ல. சில கிராமங்கள் பெரியவையாகவும், ஐசுவரிய வளம் உள்ளவைகளாயும் இருக்கின்றன; கவர்ன்மெண்டாருடைய உத்தரவுபடி, கணக்கு வகையராக்கள் தயார் செய்து நிறைவேற்றுவதில், அதிக வேலைப்பாடுகள் செய்யவேண்டியதாய் இருக்கின்றன; ஸர்க்கார் சம்பந்தமான விஷயங்கள் இப்படியிருக்க, கிராமத்தில், மணியகார், கர்ணம், காரியஸ்தர்களாக இருந்து செய்யவேண்டிய கடமைகளையும், முறைமைகளையும் செய்து நிறைவேற்றவும், கிராமத்தில், அவர்கள் வாஸம் செய்யவும் அதிகசெலவு பிடிக்கின்றன. வேறுசில கிராமங்களோ, சிறியவைகளாயும், செல்வவளம் இல்லாதவைகளாயும், கிராமத்தில் வாஸம் அதிக செலவு பிடிக்காததாயும், வேலையோ மற்ற கிராமங்களைவிட அதிக சொற்பமாயும், இருக்கின்றன. விபரமாய் எடுத்து சொல்லுமிடத்து, பிரதி மணியகாரும், கர்ணமும், அவர்கள் கிராமத்தில், எவ்வளவு வேலைப் பாடுகள் செய்யவேண்டியதாய் இருக்குமோ, மொத்தத்தில், அனேகமாய் அதற்கு தார தம்மியத்தை அனுசரித்தே, அந்தந்த வட்டத்துக்கு, சம்பளம் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றதென்று சொல்லலாம்.

11. பின்னும், இந்த ராஜதானியில், ஸெடில்மெண்டு தீர்வையானது, அப்போதப்போது மாறுதலுக்கு உட்பட்டதாய் இருப்பதால், இப்பால், கிராம கர்ணங்களுடைய வேலை, அதிக உழைப்பும், மிகவும் பொறுப்பும், உள்ளதாய் இருக்கின்றது. அப்பேர்ப்பட்ட கர்ணங்கள் வரவர, அதிகபடிப்பு முதலிய லாயக்கு உடையவர்களாய், இருக்கவேண்டியதாய் இருக்கிறபடியால், ஸர்வே முதலிய வேலைகளைச் செம்மையாய் போதித்து, பழக்கி வைப்பது, மிகவும் முக்கியமானதாய் இருக்கிறதென்று, சென்ற சில வருஷகாலமாய், நம்மிட கவர்ன் மெண்டார் நோக்கங் கொண்டவர்களாய் இருக்கிறார்கள். ஸர்வே செய்வதிலும், ஸரியான கிராம படங்களையும், இவை ஸம்பந்தமான ஸாஸ்வித கணக்குகளையும், தயார் செய்து





பரிபாலித்து வரவேண்டியதில், கிராம கர்ணங்களுக்கு போதித்து, பழக்கி வைக்கப்படுகிற விஷயமாய், அதிக கவனம் செலுத்தி, இப்பால், அதிக உபயோககரமுள்ள, இந்த கிராம உத்தியோகஸ்தர்களில், அனேகமாய், எல்லாரையும் சீக்கிரத்தில் உயர்ந்த வேலைத் திறமையுடைய ஸ்திதிக்கு, பயிற்றிக் கொண்டுவர, நமது மாக்ஷிமை தங்கிய கவர்ன் மெண்டார், எண்ணங்கொண்டிருக்கிறார்கள். இது நம் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஓர் சுபம்!!! சுபம்!!! சுபம்!!!

13. கவர்ன்மெண்டாரால் "வில்லேஜ் ஸ்பெஷியல் டெஸ்டு" என்னும் பரீக்ஷை ஒன்றை நிர்ணயிக்கப்பட்டு, ஷை பரீக்ஷையில், இப்போதிய முன்சீபு, கர்ணம், அஸிஸ்டாண்டு கர்ணம், மணியம், ஹோதாவில் உள்ள, கிராம உத்தியோகஸ்தர்களின் வாரிசுகள், பரீக்ஷையில் தேறவேண்டுமென்றும், அந்தப்படி தேறக்கூடாதவர்களுக்கு, தங்கள் வம்ஸபாரம்பரையான மணியம் ஹோதாவுக்கு, ஹக்கு இராதென்றும், உத்தரவு ஜாரியாய் இருப்பதால், ஷை பரீக்ஷை பிரதி வருஷமும் நடந்து கொண்டிருக்கும். ஆனால் ஷை பரீக்ஷைக்கு ஹாஜராக இருக்கவேண்டியவர்களும், இப்போதிய கிராம உத்தியோகத்திலிருந்து பரீக்ஷைக்குப்போக, வேலையில்லாமல் மின ஹாயிக்கப்பட்டவர்களும், தெரிந்துக் கொள்ளும்பொருட்டு, ஷை பரீக்ஷைக்காக கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டு இங்கிலீஷில் பிரசுரிக்கப்பட்ட வில்லேஜ் ஆபீஸர்ஸ் மானியூயல் என்னும் புத்தகத்தையும், ஸர்வே நூல்களையும், அனுசரித்தும், பின்னும் இந்த விஷயத்துக்கு சம்பந்தப்பட்ட அநேக சட்ட திட்டங்களை அனுசரித்தும், கிராமவியவஹாரத்தைச்சார்ந்த எல்லா சங்கதிகளும், கிராமகுடிகளுக்கும், கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், செவ்வையாய் போதையாகும்படி, "கிராம வியவஹாரிணி" எனும் பெயர் கொண்டு இந்த விசேஷ சஞ்சிகையை பிரசுரிக்க உடன்பட்டோம்.

14. இது சஞ்சிகை, மேலே சொன்ன பிரகாரம், கிராமஉத்தியோகஸ்தர்களுக்கும், கிராம உத்தியோக பரீக்ஷைக்கு வாரிஸுகளுக்கும் மாத்திரமே அல்லாமல், கிராமத்தில் குடித்தனம் இருக்கும் பிரதி நபருக்கும் கூட, அவசியமான விஷயங்கள், அடங்கியிருக்கின்றதென்பதற்கு சந்தேகம் இல்லை.

15. மேலே கண்டபடி கிராமமுன்சீபு, மணியம், கர்ணம், தங்கள் ஹோதாவுக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும், திட்டங்களும், ராஜ்யதந்திர ஞானங்களும், நன்றாய் தெரிந்து நடந்து கொள்வதினால், அவர்கள் தங்கள் உத்தியோகத்தின் மரியாதையை காப்பாற்றிக் கொள்வதே அல்லாமல் மேல் அதிகாரிகளுடைய ஸன்மானத்தையும் பெறுவார்கள்.

16. இந்த சந்திரிகையை சிரத்தையோடு வாசிப்பதால்,

1. கிராம உத்தியோக பரீக்ஷைக்குப்போவோர் :—

பரீக்ஷையில் தங்களை கேழ்க்கப்படும் கேள்விகளுக்கு சரியான விடை எழுதி பரீக்ஷையில் தேறலாம்.

2. கிராம முன்சீபுகள் :—

தங்கள் பேரில் பொருத்த சிவில், கிரிமினல், ரிவினியூ சம்பந்தமான ஜாவாபு தாரியுள்ள வேலைகளை அதிகாரஸ்தர்களுக்கு திருப்திகரமாய் நிறைவேற்றி தங்கள் உத்தியோகத்தின் கௌரவத்தை காப்பாத்திக்கொள்ளலாம்.

3. கர்ணம், 4. அஸிஸ்டாண்டு கர்ணம்.

5. மணேகார்.

தாங்கள் ஸ்வயமாய் செய்யவேண்டிய ரிவினியூ ஸம்பந்தமான வேலைகளையும், கிராம முன்சீபுகளுக்கு சகாயமாக இருந்து செய்யவேண்டிய, சிவில், கிரிமினல், சம்பந்தமான வேலைகளையும், செவ்வையாய் தெரிந்துகொண்டு, தங்கள் வம்ஸ பாரம்பரியமான உத்தியோகத்தை ஸம்ரக்ஷித்துக் கொள்ளலாம்.

6. ரயத்துக்கள் (கிராமகுடிகள்).

தங்கள் பூமிகளையும், பாத்தியங்களையும், ஸம்பந்தித்த சங்கதிகளை செவ்வையாய் கிரஹித்து, அதிக்கிரமிசனால் ஆகிலும், இதரனால் ஆகிலும், அன்னியாயம் ஸம்பவித்தபோது, அந்த சங்கதி, மேலான அதிகாரிகளுக்கு தெரிவித்துக் கொண்டு, நியாயத்தை அடைந்து, விரோதிகளிட பயத்தை விட்டு, சுகமாக இருக்கலாம்.

பின்னும், கிராம வியவஹாரத்தைச்சார்ந்த சிவில், கிரிமினல், ரிவினியூ, சம்பந்தமான எல்லா அம்ஸங்களையும், செவ்வையாய்க்கண்டறிந்து, கிராமஸ்தர்களிட ஹக்குகளுக்கும், ஆபத்திக்கும் கெடுதி சம்பவித்தபோது, அவர்களுக்கு, நியாயமான யுக்தி புத்தி ஆலோசனை சொல்லி திரவியம் ஸம்பாதித்துக்கொள்ளலாம்.

## *NOTIFICATION REGARDING VILLAGE OFFICERS SPECIAL TEXT EXAMINATION.*

## கிராம நவுகர்கள் சட்டபரீக்ஷை விளம்பரம்.

### கவரன்மெண்டாரிட நோடிபிகேஷன்.

1891 ஆகஸ்டுமீ 18உ யுள்ள, போர்ட் செண்டு ஜார்ஜி கெஜட்டு, 1-வது பிரிவு, 848-வது பக்கத்தில், பிரசுரப் படுத்தியிருக்கும், 1891 ஜுன்மீ 29யுள்ள, 366-ம்நெ. நோடிபிகேஷன்.

கிராம உத்தியோகஸ்தர்க (நவுகர்கள்) ளிட ஸ்பேஷல் டெஸ்டு என்னும் சட்டபரீக்ஷை.

1. கர்ணம், அஸிஸ்டெண்ட்கர்ணம், மணியம், முன்சீபு, இந்த உத்தியோகங்களை அபேக்ஷிக்கிற நபர்கள், லாயக்குள்ளவர்களா என்று பரீக்ஷித்துப் பார்க்க வேண்டியதற்காக, "கிராம உத்தியோக ஸ்பெஷல் டெஸ்டு" என்னும், சட்ட பரீக்ஷை, வருஷா வருஷம் நடத்தப்படும்.

2. கர்ணம் உத்தியோகத்தை, அபேக்ஷிக்கிறவர்கள் :—

(எ.) வில்லேஜ் மானியூவில், சொல்லப்பட்ட கிராமகணக்குகள்.
(பி.) கிராம நவுகர்களுக்குள்ள, அதிகாரங்கள், அலுவல்கள்.
(ஸி.) ஸர்வே செய்வது.

இவைகளில், பரீக்ஷை செய்யப்படுவார்கள்.

மணியம், அல்லது முன்சீபு உத்தியோகத்தை, கோருகிறவர்கள் :—

(எ.) கிராம உத்தியோகஸ்தர்களுக்குள்ள அதிகாரங்கள், அலுவல்கள்.
(பி.) கிராம பரிசுத்த சம்பந்தமாய், வியாதி முதலானது சம்பவிக்காமல் இருக்கும்படி, செய்யவேண்டிய ஏற்பாடுகள்.

இந்த பரீக்ஷைகளில் தேற (பாஸ் செய்ய) வேண்டியது.

3. யூனிவர்ஸிடி என்னும் சங்கத்தாராலாவது, அன்கவினெண்டெட் ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷைக்காக, ஏற்பட்டிருக்கும் கமீஷனராலாவது, டைரெக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்டிரக்ஷன் என்பவராலாவது, நடத்தப்படும் பரீக்ஷைகளை, பாஸ் செய்பவர்களும், "பிரைமெரி ஸ்கூல் பரீக்ஷை" பாஸ் செய்பவர்களும், இந்த கிராம உத்தியோக பரீக்ஷைக்கு வரலாம்.

1898ளு ஜுலைமீ 1உ முந்தி நியமிக்கப்பட்டவர்களும், இப்போது அமுலில் (அநுஷ்டானத்தில்) உள்ள விதிகளினாலே பரமெனென்ட் பரீக்ஷையும், கிராம நவுகர்கள் ஸ்பெஷல் டெஸ்டு பரீக்ஷையும், பாஸ் செய்யவேண்டாம் என்று விலக்கப்பட்டு இருக்கிறவர்களுமான, கிராம நவுகர்கள், பிரிவிய பரீக்ஷைக்குப் போகலாம். ஆனால் 1898ளு ஜுலைமீ 1உயின், ஆக்டிங்காகப் பார்த்துவந்த ஏற்பாட்டில், அப்படிப்பட்ட ஆக்டிங் உத்தியோகஸ்தர்கள் காயம் செய்யப்பட்டால் ஒழிய, அவர்கள் ஷை பரீக்ஷைக்கு போகக்கூடாது.

| | | |
|---|---|---|
| கவர்ன்மெண்டு ஆர்டர். | நெ. 18 (ரெவினியூ) | 6—1—99. |
| திருநெல்வேலி ஜில்லா கெஜட்டு, வில்லேஜ் ஷீட். | நெ. 3 | 1—3—99. |
| தென் ஆர்காடு ஜில்லாகெஜட்டு, ஷை | நெ. 3 | 1—3—99. |
| மதுரைஜில்லா கெஜட்டு, ஷை | நெ. 3 | 1—3—99. |

கர்ணம், அஸிஸ்டெண்டு கர்ணம், ரெட்டி அல்லது முனிசீபு, குடும்பங்களைச் சேர்ந்தவர்களை, பரீக்ஷைக்குச் சேர்த்துக்கொள்ள, ஒரு ரூபாய் பீசும்; மற்றவர்கள் விஷயத்தில், 5 ரூபாய் பீஸும், வசூல் செய்யப்படும்.

கிராம உத்தியோகஸ்தர்களிட வம்ஸஸ்தர்களென்றும், அதனால், குறைந்த பீசு பணங்கட்ட பாத்தியம் உடையவர்களென்றும், கேட்டுக் கொள்பவர்கள், முதலில், தங்கள் தாலூகா தாசில்தார், அல்லது டிப்டிதாசில்தாருக்கு, எழுதிக்கொள்ள வேண்டியது. அவர்கள், அது விஷயத்தைப்பற்றி, தகுந்த விசாரணைசெய்து, கிராம உத்தியோகஸ்தருக்கும், விண்ணப்பதாரருக்கும், உள்ள பந்துவத்தைக் கண்டு எழுதி, ஒரு ஸர்டிபிகேட்டு கொடுக்கவேண்டியது. பரீக்ஷைக்கு பணம் கட்டும்போது, கஜானா (டிரெஜரி) ஆபீஸரிடம், இந்த ஸர்டிபிகேட்டை தாகல் செய்யவேண்டியது. பந்துத்துவம் சமீபமா அல்லது தூரமா என்பதைப்பற்றி, சந்தேகம் அல்லது விவாதம் நேரிட்டால், அவ் விஷயத்தில், ஜில்லா கலெக்டர் செய்யும் தீர்மானம், முடிவானதாகும்.

4. இந்த பரீக்ஷை, வருஷாவருஷம், ஒவ்வொரு ஜில்லாவிலும், தனித்தனியாய், அந்தந்த ஜில்லா கலெக்டர்துரை அவர்கள், மேல் விசாரணையின்கீழ், நடத்தப்படும்.

5. இந்தபரீக்ஷை, டிவிஷனல் ஆபீஸரிட கஸ்பாவில், அவரிட மேல்விசாரணையின் கீழ், வருஷத்துக்கு இருதரம் நடத்தப்படும். அந்தப்படி நடத்துங்காலம், ஜில்லா கெஜட்டில், கலெக்டர் துரையால் பிரசுரம் செய்யப்பட்டு, ஜில்லா ஓட்டுக்கும், ஏககாலத்தில் பரீக்ஷை நடத்தப்படும்.

6. வேறே எந்த இடத்திலாவது, பரீக்ஷைக்கு ஆஜராகலாம் என்று, கலெக்டர்துரை, ஸ்பெஷல் உத்திரவுகொடுக்கப்பட்டால் ஒழிய, பரீக்ஷைக்கு பணம் கட்டினவர்கள், எந்த டிவிஷனல் ஆபீஸரிட கஸ்பாவில் சேர்ந்தவர்களோ, அந்த கஸ்பாவில், பரீக்ஷைக்காக ஆஜராக வேண்டியது.





7. எல்லா விஷயங்களைப்பற்றியும், பரீக்ஷை, அந்தந்த ஜில்லாவில் வழங்கும், சுதேசபாஷையில், எழுத்து மூலமாய், நடத்தப்படும்.

பிரதி விஷயத்தைப் பற்றியும், ஜில்லா ஓட்டுக்கும், ஒரேவிதமான கேள்விகள், கலெக்டரால் நியமிக்கப்படும் ஆபீஸர்களால், தயார் செய்யப்பட்டு, மார்க்கு கொடுக்கப்படும்.

8. ஸர்வேயில், நடத்தப்படும், எழுத்து மூலமான பரீக்ஷை அல்லாமல், நிலங்களை அளந்து காட்டச்சொல்லியும், பரீக்ஷை செய்யப்படும். இது, டிவிஷனல் ஆபீஸரிட மேல் விசாரணையில், நடத்தப்பட்டு, மார்க்கு கொடுக்கப்படும்.

9. பிரதி விஷயத்துக்கும், ஏற்படுத்தப்பட்ட மார்க்குகளில், குறைந்த பக்ஷம், 3-ல் 1-பாகமாவது வாங்காவிடில், பரீக்ஷையில் தேறினதாக (பாஸ் செய்ததாக) எண்ணப்பட மாட்டாது.

10. பரீக்ஷை முடிந்த உடனே, கூடிய சீக்கிரத்தில், பரீக்ஷையில் தேறினவர்கள் பேர்களை, அவரவர்கள் அடைந்த மார்க்குகளை அநுசரித்து, வரிசைக் கிரமமாய் கண்டு, ஒரு லிஸ்டு, ஜில்லா கெஜட்டில், பிரசித்தம் செய்யவேண்டும்.

11. பரீக்ஷையில் தேறினவர்களுக்கு, கலெக்டர் துரையவர்களால் கையெழுத்து செய்யப்பட்டு, ஸர்டிபிகேட்டுகள் கொடுக்கப்படும். பரீக்ஷையில் தேறினவர், இன்னாரென்று தெரியும் பொருட்டு, அவருடைய அங்க அடையாளங்களை, அவருக்கு கொடுக்கும் ஸர்டிபிகேட்டில் கண்டிருக்க வேண்டியது.

12. பரீக்ஷைக்குச் சேரப்போகிறவர்கள், பரீக்ஷை காலமென்று பிரசித்தப் படுத்தும் தேதிக்குமுன், ஒரு மாசத்துக்கு முன்பாக, நமுனா பிரகாரம், தங்களை பரீக்ஷைக்கு சேர்த்துக் கொள்ளும்படி, அவரவர்கள், (அப்பிளிகேஷன்) விண்ணப்பம் தாகல் செய்துக கொள்ள வேண்டியது.

இந்த நோடிபிகேஷன் (விளம்பரம்), 3-வது ஆர்டிகல் (பிரகரணம்) பிரகாரம், பீசு கட்டினதற்காக, கஜானா ஆபீஸரால் கொடுக்கப்படும் ரசீதையும், விண்ணப்பத்துடன் தாகல் செய்யவேண்டியது. அப்படி கட்டியபீசு, 1-ரூபாயாயிருந்தால், பந்துத்துவமான விஷயமாய், தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தார், கொடுத்திருக்கும், ஸர்டிபிகேட்டையும், தாகல் செய்யவேண்டியது.

13. இந்த பரீக்ஷைக்காகச் செய்துக் கொள்ளும், ஒவ்வொரு அப்பிளிகேஷனுடனும், ஆஸ்பிடல் அஸிஸ்டாண்டு ஹோதாவுக்கு குறையாத, மெடிகல் ஆபீஸராவது, அல்லது மெடிகல் ஸபார்டினேட் ஆபீஸராவது, கொடுத்த, வாக்ஸிநேஷன் (அம்மை குத்தி) ஸர்டிபிகேட்டும், தாகல் செய்யவேண்டியது. முன்னாலே நடந்த

பரிக்ஷைக்கு போனபோது, இப்பேர்ப்பட்ட ஸர்டிபிகேட்டுகள் தாக்கல் செய்திருந்தால், ஷை ஸர்டிபிகேட்டை தாகல் செய்யத் தேவையில்லை.

14. இந்த விளம்பரம், மதராஸ், பிரஸிடென்ஸியில், கெஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரியில் உள்ள, ஷிடியூல் டிஸ்டிரிக்டுகள்தவிர, மற்ற எல்லா இடத்திலும் செல்லும்.

15. 1894௵ ஜனவரிமீ 1௳ வரையில், முன்னிட்டே வேலையில் அமர்ந்திருக்கும் கிராம உத்தியோகஸ்தர்களுக்காவது, அல்லது, அவர்களுடைய வாரிசுகளாயும், இந்த நோட்டிபிகேஷன் பிறந்த தேதியிலேயே 18-வயதுக்கு மேற்பட்டவர்களாயும் இருப்பவர்களுக்காவது, இந்த நோட்டிபிகேஷன் சம்பந்தப்படமாட்டாது. ஆனால், இந்த விலக்கைத்தவிர, 1894௵ ஜனவரிமீ முதல் தேதியிலும், அதற்குப் பின்னிட்டும், இந்த நோட்டிபிகேஷன் 2-வது ஆர்டிகலில், நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பரிக்ஷையைக் கொடுத்திருந்தாலொழிய, அவரை, கணக்கு, மணியம், அல்லது முன்சீபு ஆகிய எந்தவேலைக்கும், நேமிக்கக்கூடாது.

நிபந்தனை.—1894௵ ஜனவரிமீ 1௳யில், 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயது அடைந்தவர்களாக இருக்கக்கூடிய, தங்கள் வாரிசுதார்களின் பெயரை, கிராம உத்தியோகஸ்தர், 1893௵ ஜனவரிமீ முதல் தேதியிலாவது, அதற்கு முன்னிட்டாவது, டிவிஷனல் ஆபீஸரிட ஆபீஸில், ரெஜிஸ்டர் செய்துவைக்க வேண்டியது. அப்படி ரெஜிஸ்டர் செய்யப்படாத வாரிசுகளுக்கு, இந்த ரூலினால உண்டாகிய விலக்குகள், சம்பந்தப்படமாட்டாது.

---

நோட்டு—1. ரிவினியூ போர்டார் அவர்களுடைய, 1892௵ மேமீ 5௳ யுள்ள, 207-ம் நெ. புரோஸீடிங்ஸில் கண்ட உத்திரவை, எல்லாருக்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது.

இதுவரையில், கிராம உத்தியோகங்களுக்கு இனாம்தார்களாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்டு, குமாஸ்தாக்களைக்கொண்டு வேலை நடத்திவரும் மைனர்களை, அவர்கள், சுயமாய்வேலை ஒப்புக்கொள்வதற்கு முன், வேலையில் இருப்பவர்களாக எண்ணக்கூடாது, ஆகையால், பரிக்ஷை கொடுக்கவேண்டியதில்லை என்கிற விலக்கு, அவர்களுக்கு உபயோகப்படமாட்டாது. இந்த மைனர்களும், ஏற்பட்ட பரிக்ஷைகளை, பியாஸ்செய்து வேலைபார்க்க லாயக்காகவேண்டியது அவசியம். (1892௵ மேமீ 27௳ யுள்ள கோயம்புத்தூர் ஜில்லா கெஜட்டு.)

நோட்டு—2. மேலேசொல்லிய பரிக்ஷை ரூல்கள், சத்தியா, சாசுவித பைஸலான எஸ்டேட்டுகளில் உள்ள, கிராம உத்தியோகஸ்தர்களுக்கு, சம்பந்தப்படமாட்டாது.



# ORDERS RELATING TO VILLAGE MUNSIFFS.

## கிராம முன்ஸீபுகளுக்கு சம்பந்தப்பட்ட உத்தரவுகள்.

1. மனிதர்கள் குடியிருக்கவும், சாமான்கள் வைக்கவும், உபயோகப்படும் கட்டடம், கூடாரம், அல்லது கப்பல்களில், செய்யப்படும் திருட்டிலும், இந்தியன் பீனல்கோட்டின் 381-வது பிரிவில் கண்டபடி, வேலைக்காரனால் செய்யப்படும் திருட்டிலும், திருட்டு சொத்தானது, விலை அல்லது மதிப்பில், ரூபாய் 1-க்கு அதிகமாகா இருந்தாலும், அப்படிப்பட்ட கேஸுகளை, கிராமமாஜிஸ்திரேட்டு பிடிக்கக்கூடாது. (ஜி-கோ-பு-1865௵ செப்டம்பர்மீ 17௳.)

2. சிறு குற்றங்கள், கிராமமாஜிஸ்திரேட்டுகளாலேயே பைஸலாகும்படி, சகல சப்மாஜிஸ்திரேட்டுகளும், கூடியமட்டும் முயற்சி செய்யவேண்டியது. (கி-பு-1863௵ மார்ச்சுமீ 18௳.)

3. திருட்டு சொத்தை வாங்கிக்கொண்டதாக மாத்திரம் பிரியாது வந்தால், அதை, கிராம மாஜிஸ்திரேட்டுகள் பைஸல் செய்யக்கூடாது. (ஜி-கோ-பு-1862௵ நவம்பர்மீ 17௳.)

4. கிரிமினல் புரோஸீஜர் கோட்டின் படிக்கு, கிராம முன்ஸீபுகளும், மாஜிஸ்திரேட்டென்று எண்ணப்படுகிறார்கள். ஆகையால், 1821-வது௵ 4-வது சட்டம் 6-வது பிரிவு முதல், உட்பிரிவுபடிக்கு, விசாரணை செய்யத் தக்கின திருட்டு கேஸுகளில் ருஜு இல்லாவிட்டால், போலீஸார், ரிபர் சார்ஜ் ஷீட்டு கிராம முன்ஸீபு இடத்துக்கு அனுப்பலாம். (ஜி-கோ-பு-1868௵ பிப்ரவரிமீ 16௳.)

5. சொல்ப களவுகள் முதலானது, சார்ஜ்ஷீட்டு மூலமாய், ஸ்டேஷன் ஆபீஸர், கிராம எஜமான் முன்பாக அனுப்பினாலொழிய, அவர், அவைகளை பிடிப்பதுமில்லை, விசாரிப்பதுமில்லை, என்று தெரியவருகிறது. சொல்பகேஸுகளை, தாங்கள்பைஸல்செய்கிறவரையில், போலீஸாருக்கு ரிபோர்ட்டுசெய்யவேண்டிய அவசியம் இல்லையென்று, கிராம எஜமான்களுக்கு தெரிவிக்கவேண்டியது. சொல்பகேஸை, கிராம எஜமான், ஸ்டேஷன் அவுஸுக்கு ரிபோர்ட்டு செய்தால், அந்த கேஸை, சார்ஜ்ஷீட்டுடனே கிராம எஜமானுக்கு, போலீஸார் அனுப்புவது சரியே. (1865௵ ஏப்ரல்மீ 22௳ நெ. 311-ச-பி.)

6. சில மணிநேரத்திற்கு, காவலில் வைக்கும்படி தீர்ப்புப் பெற்ற கைதிகளை, காவலில் வைப்பதற்காக, கிராம எஜமானர்கள், சமீப ஸ்டேஷனுக்கு வெகு மயில்தூரம், அனுப்புகிறார்கள். அவர்கள், அவ்விடம் வருகிறதற்குள்ளே, அவர்கள் தீர்ப்புப்பெற்றகாலம் சென்றுபோகிறது. கிராம எஜமானர்கள், தங்களைச் சார்ந்த கைதிகளை, போலீஸாருக்குசம்பந்தமில்லாமல், 1816௵த்திய

11-வது சட்டம் 10-வது பிரிவு, முதலாவது உட்பிரிவின்படி, காவலில் வைக்கவும், விடுதலை செய்யவும், ஜாக்கிரதை பண்ணிக் கொள்ளவேண்டியது. போலீஸார், அப்படிப்பட்ட கைதிகளை, காவலில் வைக்க நியாயமாய் பெற்றுக்கொள்ளக் கூடாது. (1865ஹு ஏப்ரல்மீ 22உ கெ. 31-உ-ச.)

7. 1816-ம் வருஷத்து 11-வது சட்டம் 10-வது பிரிவு முதலாவது உட்பிரிவுபடி, கிராம மாஜிஸ்திரேட்டினால் தீர்மானிக்கப்படத் தக்கதாக, அவர் முன்பாக கொண்டுவரப்படும் சகல பிரியாதுகளையும், சங்கதிகள் அடங்கியதாய், சுருக்க வகையாய் எழுதி, கையொப்பமிட்டு, அதை, அந்த அதிகாரியிடத்தில், கொடுக்கப்படவேணும். திருட்டு குற்றமானால், வாதி பிரியாதைக் கேட்டு எழுதிக்கொண்டு, கையொப்பமிடச் செய்யலாம். அவர் [illegible] சரிதானென்று வாய்மொழியாகக் கேட்டு, அதற்கு அவன் சொல்லும் ஜவாப்பை எழிதிக்கொள்ளவேண்டியதும் தவிர, பின்னும் பிரியாதில் ஏதாவது சந்தேகம் நேரிட்டால், அதைத்தெரிந்து கொள்வதற்கு வேண்டிய கேள்விகளையும், வாய் மொழியாய்க் கேட்டு, அவனுடைய, மறுமொழிகளை எழுதிக்கொண்டு, அதில் வருஷம், மாசம், தேதி, போட்டு, அவனை கையெழுத்துசெய்ய செய்து, பின்பு, தன் முன்பாக வாங்கப்பட்டதென்று எழுதி, கிராம மாஜிஸ்திரேட்டும், கையொப்பமிடவேண்டும்.

8. கிரிமினல் புரொஸிஜர் கோடின் தாத்பரியப்படிக்கும், அதை அநுசரித்து 1861ஹு பிப்ரவரிமீ 14உ 1873ஹு ஜூலைமீ 13உ களில் பிறந்திருக்கிற, ஹைகோர்ட்டு புரொஸிடிங்கின் தாத்பரியப்படிக்கும், ஸாக்ஷி ஆக்டின் 3-வது பிரிவின்சுருத்துப்படிக்கும், வில்லேஜ் மாஜிஸ்திரேட்டுகள், அவருடைய தீர்மானத்துக்கு குட்பட்டதா யிருக்கிற பிரியாது ஸங்கதிகளில், அவர் ஜட்ஜியாக எண்ணப்படுகிறார். அப்படிபட்ட பிரியாதுகளில், எதாவது மனதறிந்து பொய்யும் பொல்லாங்குமாகக் கொண்டுவரப்பட்டதாக யிருக்கும் பக்ஷத்தில், நீதி சாஸ்திரப்படி, அது, இந்தியன் பீனல்கோடின் 211-வது பிரிவின்கீழ், பொய் பிரியாது குற்றத்துக்காக விசாரிக்கப்படத்தக்கதாகு மென்று, அர்த்தஞ்செய்யப் படுகிறது.

9. ஹைகோர்ட்டார் அவர்களுடைய தீர்ப்பு, பிரியாதுநால் அதில்கண்ட குற்றங்கள், அதாவது, துன்பத்துடன் சேர்ந்திருடு, கொடுமையானதா யில்லாவிட்டால், கிராம முன்ஸீபு நடவடிக்கை நடத்தக் கூடியதாயிருக்கிறது.

10. இந்த சம்மனை, அலக்ஷியம் செய்ததற்காக விதிக்கப்பட்டிருக்கும் தெண்டனை, ஆக்ஷேபித்துச் சொல்லப்படும் நியாயங்களின் பேரில் ரத்தாகத் தக்கதல்ல. வில்லேஜ் மாஜிஸ்திரேட்டு





களுக்கு, சம்மன் பிறப்பிக்கிற அதிகாரம் இருக்கிறதா என்பது, தீர்மானிக்க கடினமானதுதான். கிரிமினல் கேஸுவிஷயமாக, கிராம முன்ஸீபுகளுக்கு அதிகாரங் கொடுக்கிற சட்டமானது, சம்மன் பிறப்பிக்கும்படி வெளிப்படையாய், அதிகாரங் கொடுக்கவில்லை என்றாலும், தன்னுடைய அதிகாரத்துக்கு இசைந்ததாக, தான்விசாரிக்கக்கூடிய கேஸுகளில், தன் அதிகார எல்லைக்குள் பட்ட இடத்திலிருக்கிறவர்கள், தன் முன்பாக ஆஜராகும்படி, வாய்மொழியாகவாவது, எழுத்து மூலமாகவாவது, சம்மன் பிறப்பிக்க அவருக்கு அதிகாரமிருக்கிறது என்பதில், நமக்கு சந்தேகமில்லை. அப்படி யிருந்தாலும், தன் அதிகார எல்லைக்கு அப்பால்இருக்கிறவர்களுக்கு, சம்மன் பிறப்பிக்க, அவருக்கு அதிகாரம் இருப்பதாக தோணுது தென்படவில்லை. இந்த காரணத்தினால், இந்த தெண்டனை செல்லும்படி உள்ளதல்ல. (சென்னப்பட்டணம் ஸீ-இ-லா-ரி-வா 5-பக்கம் 230-231.)

11. வில்லேஜ் முன்ஸீபு கோர்ட்டுகளில், தனி சிப்பந்தி வைக்கக் கூடாதென்றும், ஆனால் வில்லேஜ் முன்ஸீபுகளால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகள், சாதாரணமாய், அந்தந்த கிராமத்தின் சேவகன், அல்லது தலையாரியினால் ஸார்வுசெய்ய, அல்லது நிறைவேற்றப்படவேண்டியதென்றும், கோர்ட்டுபீஸ் ஆக்டின் 20-வது ஸெக்ஷனை அநுசரித்து, சென்னப்பட்டணம், ஐகோர்ட்டார் அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ரூல்ஸுகளின் கடைசிபாகத்தில், விவரிக்கப்பட்டிருக்கின்றன.

12. 1872ஹு பிப்ரவரிமீ 20உ ஐ-கோ-பு-ஒருகிராம மாஜிஸ்திரேட்டு, வாய்மொழியாய் ஒரு உத்தரவுசெய்தால், எந்த குற்றத்தைப்பற்றி அப்படி உத்திரவுசெய்கிறாரோ, அந்த குற்றத்தைப் பற்றி விசாரிக்க, அவருக்கு அதிகாரம் இருக்குமேயாகில், அந்த உத்தரவின்படி நடவாமைக்காக, பீனல்கோடின் 174-வது பிரிவின்படி சிக்ஷை விதிக்கலாம்.

13. 1889ஹுத்து 1-வது அல்லது 1816ஹுத்து 11-வது சட்டப்படி, வியாச்சியங்களையும், குற்றங்களையும், விசாரித்து முடிவுசெய்கிற பிரதி கிராம முன்ஸீபு, அல்லது கிராமமாஜிஸ்திரேட்டுகளும், மேற்படி 11-வது சட்டம் 10-வது பிரிவு முதலாவது உட்பிரிவின் தாத்பரியப்படி, முக்கியமாய், கிராமச்சாவடி முதலான பப்ளிக்கான பொதுஸ்தலங்களிலாவது, தாங்கள் சொந்தத்தில் அதற்காக பிரத்தியேகமாய் கட்டடங்கட்டப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட இடத்திலாவது, அதவா யாதொரு பொதுஸ்தானத்தின் தெருத்திண்ணையிலாவது, ஒரே இடத்தில் ஸ்திரமாய், அப்படிப்பட்ட தங்களுடைய விசாரணை, அல்லது பரிசீலனைகளை நடத்தவேணும். அந்த இடத்தை கிராம முன்ஸீபு கச்சேரியென்று சொல்லப்படும்.

14. கி-பு-கோ-435-வது பிரிவின் தாத்பரியப்படி, கிராமத் தலைவன் செய்கிற கச்சேரி, கிரிமினல் கோர்ட்டாக, எண்ணப்படும். (1870ஹு ஜூன்மீ 26உ- ஐ-கோ-பு.)

15. 1816ஹுத்து 11-வது சட்டம் 10-வது பிரிவு, முதலாவது உட்பிரிவின்படி, யாதொரு கிராம மாஜிஸ்திரேட்டினால், யாதொரு குற்றத்திற்காக, யாதொருவனை காவலில் வைக்கும்படி, அல்லது தொழுவில் மாட்டிவைக்கும்படி, தீர்மானிக்கப்பட்டால், அவர், அந்தத் தீர்ப்[illegible], கிராம காவல்காரன்வசம் ஒப்பித்தும், குற்றவாளிக்கும், தீர்ப்பின் விவரத்தை, அந்தக் காவல்காரனுக்குத் தெரியப்படுத்துவதுந் தவிர, அப்படிப்பட்ட தீர்ப்புகளை, நிறைவேற்ற ஆரம்பித்தது முதல், அந்த தீர்ப்பின்காலம், முடிகிறவரையிலுள்ள மத்தியில், செல்லவேண்டிய நாழிகை அல்லது மணியின் சங்கியை, இவ்வளவென்பதை, ஒவ்வொரு சங்கதியிலும், ஒவ்வொரு குற்றவாளியை பற்றியும், விவரமாய், மேற்படி காவல்காரனுக்கு, நன்றாய் கிராஹியமாகும்படி, அந்த அதிகாரியானவர், பிரதி சங்கதியிலும், தெரியப்படுத்திக்கொண்டு வரவேண்டியது.

16. சிக்ஷிக்கப்பட்ட நபர்களை, காவலில் வைக்கும்போதும், தொழுக்கட்டையில் மாட்டிவைக்கும்போதும், அவர்களிடத்தில் குருக்கத்தி, பிச்சுவா, இது முதலாகிய ஆயுதங்கள், ஒன்றுமில்லாமல் சோதித்து, பார்த்துக்கொண்டு, காவல்படுத்த வேண்டியதென்று, 1823ஹு மார்ச்சுமீ 25உ ப-அ-கோ-ச-1832ஹு ஏப்ரல்மீ 30உ ப-அ-சோ-ச-இதுகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

17. 1816ஹு 11-வது சட்டம் 10-வது பிரிவு முதலாவது உட்பிரிவின்படி, கிராம மாஜிஸ்திரேட்டினால், கொடுக்கப்படும் தெண்டனை தீர்ப்புப்படி, யாதொரு குற்றவாளியானவன், கிரமமாய் உட்படவேண்டிய காவலுக்கு, அவனை உட்படுத்துகையில், அவன், அதற்குஉட்படுகிறதில்லையென்று நிராகரித்தாவது, எதிர்த்தாவது, நியாயமான காவலுக்குஉட்படாவிட்டாலும், நியாயமான காவலிலிருந்து, எவ்விதமாயாவது, தப்பித்துக்கொண்டு ஓடிப்போய் விட்டாலும், அப்படிப்பட்ட சங்கதிகளில், குற்றவாளியை இந்தியன் பீனல்கோடின் 224-வது பிரிவின்படி, தெண்டனைக்குள்ளாகும் பொருட்டு, அதுவிவரத்தை, அந்த வில்லேஜ் மாஜிஸ்திரேட்டானவர், போலீஸாருக்கும், சப்மாஜிஸ்திரேட்டுக்கும், அறிக்கை செய்யக்கடவர்.

18. ஒரு குற்றவாளி, போலீஸார் வசத்திலிருக்கையில், ஒரு கிராம பெரியதனக்காரன் முன், தான் குற்றஞ்செய்ததாய் ஒப்புக்கொள்ளுவானேயாகில், அந்த ஒப்புதலை சாக்ஷி, விசாரணையில் ஏற்றுக்கொள்ளப்படும். (ஐ-கோ-பு-1868ஹு பிப்ரவரிமீ 14உ.)



# AN EPITOME OF CATTLE TRESPASS ACT (1 of 1871.)

## கால்நடைகள் அக்கிரமமாய் நுழைவதைப்பற்றிய (1871ஹு I-வது.) பவுண்டு சட்டச்சுருக்கம்.

### 1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

1. இந்த ஆக்டிலே:—

*அர்த்தம்.*

"போலீஸ் உத்தியோகஸ்தன்" என்பது, கிராம காவற்காரன் என்றும் அர்த்தமாகும்.

"கால் நடை" என்பது, யானை, ஒட்டை, எருமை, ஆண்குதிரை, பெண்குதிரை, விரையடித்தகுதிரை, மட்டக்குதிரை, ஆண்குதிரைக்குட்டி, பெண்குதிரைக்குட்டி, கோவேறுகழுதை, கழுதை, பன்றி, ஆட்டுக்கிடா, பெட்டை ஆடு, செம்மறி ஆடு, செம்மறி ஆட்டுக்குட்டி, வெள்ளாடு, வெள்ளாட்டுக்குட்டி என்று, அர்த்தமாகும். (செக்ஷன் 3.)

### 2-ம் அத்தியாயம்.

பட்டிதொட்டிகளும் தொட்டிக்காரர்களும்.

*பவுண்டுகீபர் என்னும் தொட்டிக்காரரை நியமிப்பது.*

2. ஜில்லா மாஜிஸ்டிரேட்டு, பிரதிபவுண்டு (தொட்டி)க்கும், பவுண்டுகீபர் என்னும் தொட்டி அதிகாரி ஒருவரை, நியமிக்கவேண்டும்.

*இன்னார் பவுண்டுகீபர்களாய் இருக்கவேண்டும் என்பது.*

கிராமாதிகாரியான மணியம் முன்ஸீபு, உத்தியோக முறைமையை அனுசரித்து, கிராம பவுண்டு (தொட்டி)க்கு, பவுண்டு கீபராய் இருக்கவேண்டும்.

*பவுண்டு கீபரை நீக்கிவைப்பதும் தள்ளிப்போடுவதும்.*

ஜில்லா மாஜிஸ்டிரேட்டால், நியமிக்கப்பட்ட பிரதி பவுண்டு கீபரை, அந்த மாஜிஸ்டிரேட்டு, சஸ்பெண்டு (சிலகாலம் வரையில், உத்தியோகத்திலிருந்து நீக்கிவைக்கலாம்; அல்லது, தள்ளிப் போடலாம்).

*பவுண்டு கீபர் வேறே உத்தியோகமும் செய்யலாம்.*

எந்த பவுண்டு கீபரும், அதேகாலத்தில், மற்றொரு கவர்ன்மெண்டு உத்தியோகத்தில் இருக்கலாம்.

*பவுண்டு கீபர் ஸர்க்கார் உத்தியோகஸ்தர் ஆவார் என்பது.*

பிரதி பவுண்டு கீபரும், இன்டியன் பினல் கோட்டின் தாற்பரியத்தின்படி, சர்க்கார் உத்தியோகஸ்தராக எண்ணப்படுவார் (செ-6.)

## பவுண்டுகீபரின் தொழில்.

*ரெஜிஸ்டர் வைத்து கணக்கு அனுப்பவேணும் என்பது.*

**3.** பிரதி பவுண்டுகீபரும், சர்க்கார் அப்போதைக்கப்போது உத்தரவு செய்கிறபடி, ரெஜிஸ்டர்கள் வைத்து, ரிடர்ன்ஸ் என்னும் கணக்குகள், அனுப்பவேண்டும் (செ-7.)

*பிடித்துக்கொண்டு வரப்பட்ட கால் நடையை ரெஜிஸ்டரில் தாகல்செய்வது.*

**4.** கால்நடைகள், பவுண்டுக்கு கொண்டு வரப்பட்டபோது, பவுண்டு கீபர், தன்னுடைய ரெஜிஸ்டரில்.—

(1) அந்த பிராணிகள் இத்தனை என்பதையும், அவைகள் பல[illegible]பதையும்.

(2) அவைகள் அந்தப்படி கொண்டுவரப்பட்ட தேதியையும், மணிநேரத்தையும்.

(3) பிடித்துக்கொண்டு வந்தவனுடைய பெயரையும், இருப்பிடத்தையும்.

(4) தெரிந்திருந்தால், சொந்ததாரனுடைய பெயரையும், இருப்பிடத்தையும், எழுதிக்கொண்டு, பவுண்டுக்கு பிடித்துக்கொண்டு வந்தவனுக்காவது, அவனுடைய ஏஜெண்டுக்காவது, அப்படி எழுதிக்கொண்டதற்கு ஒரு பிரதி (நக்கல்) கொடுக்க வேண்டும். (செ-8.)

### வியாக்கியானம்.

பவுண்டில், அடைக்கும் நிமித்தம், கால்நடைகளை ஓட்டி வந்தபோது, ரசீது கொடுப்பதற்கு ஆக்ஷேபனை செய்யக்கூடாது. மேலும், ரசீது கொடாமலே, கால் நடைகளை, பவுண்டில் வைக்கவும் படாது.

*ஆடு மாடு முதலிய வற்றை தன்வசம் வைத்துக் கொண்டு அவைகளுக்கு தீனி போடுவது.*

**5.** இதன் பின்னால் உத்தரவு செய்திருக்கிறபடி, கால் நடைகளை விடுவிக்கிற வரையில், பவுண்டு கீபர், அவைகளை தன் வசத்தில் வைத்திருந்து, அவைகளுக்கு தீனி கொடுத்து, தண்ணீர் காட்டவேண்டும் (செ-9.)





# 3-ம் அத்தியாயம்.

## கால் நடைகளை அடைப்பது.

*நிலத்தை சேதப் படுத்துகிற ஆடு மாடு முதலியவை.*

**6.** ஓர் நிலத்தை பயிரிடுகிறவராவது, அனுபவிக்கிறவராவது, சாகுபடி செய்வதற்காகவாவது, மாசூலுக்காகவாவது, முன் பணம் கட்டியிருக்கிறவர் ஆவது, அப்படிப்பட்ட பயிரை அல்லது மாசூலையாவது, அதில் ஒரு பாகத்தை விலைக்கு வாங்கினவர் ஆவது, குதுவை வைத்துக்கொண்டவர் ஆவது, அப்பேர்ப்பட்ட நிலத்தில் அக்கிரமமாய் நுழைந்து, அந்த பூமியையாகிலும், அதில் உள்ள பயிரை ஆகிலும், அல்லது, மாசூலை ஆகிலும், நஷ்டம் உண்டு பண்ணுகிற கால்நடையை பிடித்து, மேற்படி கிராம பவுண்டுக்கு, அனுவசியமான ஆலசியம் இல்லாமல், (அதாவது 24 மணிகாலத்துக் குள்ளாக) கொண்டு போகலாம்.

(1) அப்படி பிடிப்பதற்கு, தடை நேரிடாதபடி செய்யும் விஷயத்திலும்,

*போலீஸார் உதவி செய்வதைப் பற்றி.*

(2) அப்படி பிடிக்கிறவர்கள் இடத்தில் இருந்து, விடுவித்துக்கொண்டு போகாமல் இருக்கும்படி செய்யும் விஷயத்திலும், போலீஸ் உத்தியோகஸ்தர்கள், வேண்டியபோது உதவி செய்யவேண்டும் (செ-10.)

*பாட்டைகளையும், கால்வாய்களையும், கரைகளையும், சேதப்படுத்துகிற ஆடு மாடு முதலியவை.*

**7.** சர்க்கார் ரோட்டுகள், உல்லாசபூமிகள், தோப்பு தோட்டங்கள், கால்வாய்கள், ஜலதாரை நுத்திரங்கள், கரைகள், மற்றும், இப்படிப்பட்டவைகளின் விசாரணைக் கர்த்தர்களும், போலீஸ் உத்தியோகஸ்தர்களும், அப்படிப்பட்ட ரோட்டுகள் முதலானவைகளுக்காவது, அவைகளின் பக்கங்களுக்காவது, சரிவுகளுக்காவது, நஷ்டம் உண்டு பண்ணிக் கொண்டாகிலும், எதேச்சையாய் திரிந்து கொண்டாகிலும், இருக்கிற கால் நடைகளைப்பிடித்து, கிராமத்துக்கு சமீபத்திலிருக்கிற பவுண்டுக்கு, அனுவசியமான ஆலஸியம் இல்லாமல், அனுப்ப வேண்டும். (செ. 11.)

*அடைக்கப் பட்ட கால் நடைகளுக்கு அபராதம்.*

**8.** மேலே சொன்னபடி, பவுண்டில் அடைக்கப்பட்ட ஒவ்வொரு கால்நடைக்கும், பவுண்டு கீபர், இதன் அடியில் கண்டரேட்டுப்படி, அபராதம் வசூல் செய்யவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| யானை ... ... ... ... ... | 2 | 0 | 0 |
| ஒட்டை, எருமை, அல்லது எருமைக்கிடா ... | 0 | 8 | 0 |

ஆண்குதிரை, பெண்குதிரை, விரை யடித்த குதிரை,
மட்டக் குதிரை, ஆண் குதிரைக் குட்டி, பெண்

| | | | |
|---|---|---|---|
| குதிரை குட்டி, கோவேறு கழுதை, ரிஷபம், அல்லது எருது, காளை அல்லது சேங்கன்று, பசு, அல்லது கிடாரிக்கன்று ... ... ... | 0 | 4 | 0 |
| கன்றுக்குட்டி, கழுதை, அல்லது பன்றி ... | 0 | 2 | 0 |
| ஆட்டுக்கிடா, பெட்டை ஆடு, செம்மறி ஆடு, செம்மறி ஆட்டுக்குட்டி, வெள்ளாடு, அல்லது வெள்ளாட்டுக் குட்டி... ... ... ... ... | 0 | 1 | 0 |

இந்தப்படி, வசூல் செய்யப்பட்ட எல்லா அபராதங்களையும், சர்க்கார், அப்போதைக்கு அப்போது, உத்திரவு செய்கிற உத்தியோகஸ்தர் மூலமாக, ஜில்லா மாஜிஸ்டிரேட்டு இடம், அனுப்ப வேண்டும்.

*அபராதங்களையும் தீனிச் செலவுகளையும் குறித்த ஜாபிதா.*

அபராதங்களும், கால்நடைகளுக்குத் தீனி கொடுத்து தண்ணீர் காட்டுவதற்கான செலவின் ரேட்டுகளும் (வீதங்களும்), கண்ட, ஓர் ஜாபிதாவை, ஒவ்வொரு பவுண்டிலும் ஆவது, அதற்கு சமீபத்தில் ஆவது, எல்லாருக்கும் தெரியத்தக்க இடத்தில், ஒட்டிவைக்கவேண்டும் (செ. 11.)

## 4-ம் அத்தியாயம்.

### ஆடு, மாடு, முதலியவற்றை ஒப்பிப்பது, அல்லது விற்பது.

**9.** பவுண்டில், அடைக்கப்பட்ட கால்நடைகளின், சொந்தக்காரர் ஆவது, அவருடைய எஜெண்டாவது, மேற்படி கால்நடைகளின் அபராதங்களையும், அவைகளுக்காக பிடித்த தீனிச் செலவுகளையும், செலுத்திய பக்ஷத்தில், பவுண்டுகீபர் வைத்து இருக்கும் ரெஜிஸ்தரில், அவர் கையெழுத்து பெற்றுக்கொண்டு, கால்நடைகளை, அவர் இடத்தில் ஒப்பிக்கவேண்டும். (செ. 13.)

*சொந்தக்காரன் வந்து, அந்த கால்நடை தன்னதென்று சொல்லி, அபராதத்தையும், செலவையும், செலுத்தினால், இன்னது செய்யப்படும் என்பது.*

**10.** கால் நடைகளை, பவுண்டில் அடைத்த 7 நாளைக்குள், மேற்படி கால்நடை, சொந்தக்காரர் அவைகளை மீட்டுக்கொள்ளாமல் போனால், அதைப்பற்றி பவுண்டுகீபர், அந்த கிராமத்தைச் சேர்ந்த போலீஸ், ஸ்டேஷன் ஆபீசருக்கு, தெரிவிக்கவேண்டும்.

*ஒருவாரத்துக்குள், கால் நடைகளை வந்து மீ[illegible]ளாவிட்டால், இன்னது செய்யப்படும் என்பது.*

அவர், மேற்படி கால்நடை விஷயமாய், நோடீஸ் என்னும் இஸ்தியார் பிரசுரஞ்செய்து, அது சங்கதியை, அதைச் சேர்ந்த கிராமத்திலும், கடைத்தெருவிலும், தண்டோரா மூலமாக, பிரசித்தப்படுத்தவேண்டும். மேற்படி, நோடீஸ் தேதிமுதல் 7 நாளைக்குள்ளாக, அவைகளை விடுவித்துக் கொள்ளாத பக்ஷத்தில், அவைகளை, ஏலத்தில் விற்பனை செய்யவேண்டும். (செ. 14.)





### ரிவினியூ போர்ட்டு ஸ்டாண்டிங்கு ஆர்டர் நெ. 284.

மேலே கண்டபடி, பவுண்டில் அடைக்கப்பட்ட கால்நடைகளை, குறைந்த பக்ஷம், 14 நாளைக்காவது, ஏலம் போடாமல், பவுண்டில், வைத்துவைக்க வேண்டும். கால் நடைகளின் மதிப்பு தொகை. அந்த காலம் வரையில், கால் நடைகளை, பட்டி தொட்டியில் வைத்து, காப்பாற்றும் மேய்ச்சல் வகையரா செலவுகளுக்கு, கட்டாததாயிருந்தால் கூட, மேலே சொல்லியபடி 14 தினத்துக்குள், மாடுகளை ஏலம் போடக்கூடாது.

*கால் நடைகளைப் பிடித்தது நியாயம் அல்லவென்று, சொந்தக்காரன் வாதித்த போதிலும், பணத்தை அமானத்தில் கட்டினால், அவனுக்கு ஒப்பித்து விடுவது.*

**11.** கால் நடைகளின் சொந்தக்காரர் ஆவது, அவருடைய எஜெண்டு ஆவது, ஆஜர் ஆகி, அவர்கள், கால் நடைகளைப்பிடித்தது அன்னியாயம் என்றும், அதைக்குறித்து சொந்தக்காரர் பிராது செய்ய இருக்கிறார் என்றும், சொல்லி, அந்த ஆதாரத்தின்பேரில், மேற்படி அபராதங்களையும், செலவுகளையும், கொடுக்க மறுத்தால், அப்போது, அபராதங்களையும், அந்த கால் நடைகளுக்காக பிடித்த செலவுகளையும், அமானத்தில் கட்டப்படுவதின் மேல், அந்த கால் நடைகளை, அவர் இடம் கொடுத்துவிடவேண்டும் (செ. 15.)

*அபராதத்தையும், செலவையும், சொந்தக் காரன் செலுத்தமாட்டேன் என்றாலும், செலுத்தாவிட்டாலும், இன்னது செய்யப்படும் என்பது.*

**12.** மேற்படி சொந்தக்காரர், அல்லது அவரிட எஜெண்டு, மேலேசொன்னஅபராதங்களையும், செலவுகளையும், செலுத்தாவிட்டாலும், அல்லது அமானத், டிபாசிட்டு, ஆகக் கட்டாவிட்டாலும், அந்த கால் நடைகளை ஆயினும், அவைகளில் எத்தனை அவசியமோ அத்தனையை ஆயினும், அந்த கிராமத்தைச் சேர்ந்த போலீஸ்ஸ்டேஷன் ஆபீசர், அந்த கால் நடைகளை, பகிரங்கமான ஏலத்தில், விற்பனை செய்யவேண்டும். (செ. 16.)

நோட்டு.—பவுண்டில், அடைக்கப்பட்ட கால்நடைகளுக்கு அபராதம், தீனிச்செலவு வகையராக்களை, வசூல் செய்வதைப்பற்றியும், அவைகளை கழித்துக்கொள்வது, இருசால்செய்வது, இவைகளைப்பற்றியும், பவுண்டுபண்டு விதிப் (ரூல்ஸ்) படி, நடந்துகொள்ளவேண்டும்.

**13.** ஏலம்போட்ட உத்தியோகஸ்தர் ஆனவர், ஏல வசூல் பணத்தில் இருந்து கழிக்கப்பட்ட அபராதங்களை, ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்கு, அனுப்பவேண்டும்.

*அபராதங்களையும், செலவு பணத்தையும், விற்ற பணத்தில் மிகுதியையும், இன்னதுசெய்ய வேணும் என்பது.*

ஏல வசூல் பணத்தில் இருந்து, தீனி போட்டு, தண்ணீர் காட்டியதற்கும், கழித்து கொள்ளப்பட்ட செலவுகளை, பவுண்டுகீபர் இடத்தில் கொடுத்து விடவேண்டும். அவர், பெற்றுக் கொள்ளும் தொகைகளை எல்லாம், தம்மிடத்தில் வைத்திருந்து, அப்படிப்பட்ட செலவுகளுக்கு, உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

கால் நடை விக்கிரயபணத்தில், தாவாசெய்யாமல் இருக்கும் மிகுதித்தொகையை, ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் இடம், அனுப்ப வேண்டும். (ஸெ. 17.)

*உத்தியோகஸ்தர்களும், தொட்டிக்காரர்களும், ஆக்டின்படி,விற்கப்பட்ட கால் நடை முதலானது களை, வாங்கக் கூடாது என்பது.*

**14.** போலீஸ் உத்தியோகஸ்தர் ஆவது, இதில் கண்ட நிபந்தனைகளின்படி, நியமிக்கப்பட்டிருக்கிற, வேறே உத்தியோகஸ்தர் ஆவது, பவுண்டு கீபர் ஆவது, இந்த ஆக்டின்படி, செய்யப் படுகிற விற்பனையிலே, எந்த கால் நடையையும், நேராக ஆகிலும், வேறு விதமாக ஆகிலும், விலைக்கு வாங்கக் கூடாது.

*அடைக்கப்பட்ட ஆடு மாடு முதலானவைகளை, தொட்டிக்காரர் இன்னபடிக்கானால், விடுதலைசெய்யக்கூடாது என்பது.*

பவுண்டில், அடைக்கப்பட்டு, இருக்கிற கால்நடைகளை, மாஜிஸ்டிரேட்டார் ஆவது, சிவில் கோர்டார் ஆவது, விடுதலை செய்யும்படி ஆகிலும், ஒப்பித்து விடும்படி ஆகிலும், உத்தரவு செய்தால் ஒழிய, ஆக்டின், மேலே கண்ட நிபந்தனைகளின்படிக்கே அல்லாமல், வேறேவிதமாய், பவுண்டுகீபர், அப்பேர்க்கொத்த கால்நடைகளை, விடுதலை செய்யவும் கூடாது, ஒப்புவிக்கவும் கூடாது (ஸெ. 19.)

## 5–ம் அத்தியாயம்.

### அக்கிரமமாய் பிடிக்கப்பட்டதைக் குறித்து பிரியாது.

*பிரியாது செய்ய சுதந்தரம்.*

**15.** கால் நடைகளை, பிடிக்கப்பட்டாலும், பிடித்து மறியல் செய்யப்பட்டாலும், அந்த தேதி முதல் 10 தினத்துக்குள்ளாக, கால் நடை சொந்தக்காரர், மாஜிஸ்டிரேட்டின் இடத்தில், பிரியாது செய்யலாம். (ஸெ. 20.)

#### வியாக்கியானம்.

இந்த செக்ஷன் பிரகாரம், தாகலான பிரியாதில், மாஜிஸ்டிரேட்டார், எதிரியை விடுதலை செய்து, பிரியாதி எதிரிக்கு ஆயாசத்தை உண்டாக்கும் பொருட்டு, தாவா கொண்டு வரப்பட்டதாக அபிப்பிராயப்பட்டு, எதிரிக்கு, பிரியாதி, 20 ரூபா கம்பன்சேஷன் (பரிஹாரதிரவியம்) கொடுத்துக்கொள்ள வேண்டுமென்று, மாஜிஸ்டிரேட்டார் தீர்மானித்தார். இந்த விஷயத்தில், மேற்படி விவாதம், கிரிமினல் புரொஸீஜர் பிரகாரம், குற்றம் ஆகாது. ஆகையால், கம்பன்சேஷன் கொடுப்பிப்பது, ஆசாரத்துக்கு விரோதமானது. (இ-லா-ரி-வா-9; பேஜ்-374).

பசுக்களை, அக்கிரமமாய் பிடித்துவைத்து, சிலபேரின் பேரில் வந்த குற்றம், அக்கிரமம் என அபிப்பிராயப்பட்டு, 200 ரூபா, பிரியாதி, எதிரிக்கு கம்பன்ஸேஷனாக கொடுத்துக்கொள்ளவேண்டும் என்றும், கம்பன் ஸேஷன் கொடாத பக்ஷத்தில், 21-நாள், பிரியாதி, காவலில் வைக்கப்பட வேண்டும் என்றும், மாஜிஸ்டிரேட்டு தீர்ப்புசெய்தார். இது, ஆசாரத்துக்கு விரோதமானதாக, ஹைகோர்ட்டார் தீர்மானித்தார்கள். (இ-லா-ரி-கல்கத்தா-வா-31; பேஜ் 1304.)





*பிரியாதின்பேரில் நடவடிக்கை.*

**16.** கால் நடைகளைப் பிடித்து, நிஷ்காரணமாய் தொட்டியில் அடைக்கப் பட்டால், அவைகளின் சொந்ததார், அல்லது அவரிட ஏஜெண்டு, வாய்மொழியாயாவது, எழுத்துமூலமாயாவது, மாஜிஸ்டிரேட்டு இடத்தில், பிரியாது தாகல் செய்யவேண்டியது. வாய்மொழியாய் செய்யப்பட்டால், அதின் சங்கதிகளை, மாஜிஸ்டிரேட்டு எழுதிக் கொள்ள வேண்டியது (ஸெ. 20.)

#### வியாக்கியானம்.

பிராது எழுத்து மூலமாய் தாக்கல் செய்யப்பட்டபோது, ஸ்டாம்பு ஒட்டவேண்டிய அவசியம் இல்லை. (பொம்பாய் ஹைகோர்ட்டு தீர்ப்புகள், கிரிமினல் 22-ம் பக்கம்).

மாஜிஸ்டிரேட்டார், பிரியாதியை அல்லது அவரிட ஏஜெண்டை, விசாரணை செய்ததின் மேல், பிரியாதுக்கு தகுந்த ஆதாரம் இருப்பதாக காண்கிற பக்ஷத்தில், எதிரியை வரவழைத்து, தாவாவை விசாரணை செய்யவேண்டும். (ஸெ. 21.)

*அக்கிரமமாய் கால்நடைகளைப் பிடிக்கப்பட்டதற்காக பரிஹாரதிரவியம்.*

**17.** கால் நடைகளைப்பிடித்தது, அக்கிரமம் என்று ஏற்பட்டால், பிராதுக்காரனால், செலுத்தப்பட்டயாவத்து அபராத மொத்தங்களும், அவை விடுவித்துச் செய்துக்கொள்ளப்பட்ட செலவு மொத்தங்களோடு, அவைகளைப் பிடித்து, அடைக்கப்பட்டதினால் நேரிட்ட நஷ்டத்திற்காக, நூறு ரூபாய்க்கு மேல்படாமல், நியாயமான பரிஹாரதிரவியத்தை, கால் நடைகளைப் பிடித்தவன், பிராதுகாரனுக்கு கொடுக்கும்படி, மாஜிஸ்டிரேட்டு தீர்மானஞ் செய்யவேண்டும்.

*கால் நடைகளை விடுதலை செய்வது.*

மேலே கண்ட கால் நடைகளை, விடுதலை செய்யப்படாதிருந்தால், மாஜிஸ்டிரேட்டு, அப்படிப்பட்ட பரிஹார திரவியத்துக்கு தீர்மானஞ் செய்வதும் அல்லாமல், அவைகளை விடுதலைசெய்யும்படிக்கும், உத்தரவு செய்து, சட்டத்தின்படி வசூல் ஆகவேண்டிய அபராதங்களையும், செலவுகளையும், கால்நடைகளைப் பிடித்தவன், கொடுக்கும்படி உத்தரவு செய்யவேண்டும். (ஸெ. 22.)

#### வியாக்கியானம்.

இந்த ஸெக்ஷன்படி, மாஜிஸ்டிரேட்டார் செய்த தீர்ப்பின் பேரில், அப்பீல் இல்லை. (இ-லா-ரி-11; மதறாஸ், 359-ம் பக்கம்; இ-லா-ரி-10; பொம்பாய் 230 பக்கம்; இ-லா-ரி-15, கல்கத்தா 712-ம் பக்கம்).

மாடுகளை, அக்கிரமமாய், தொட்டியில் அடைத்ததினால் உண்டானநஷ்டம் நிமித்தம், இந்த செக்ஷன்படி அமுல் நடத்திக்கொள்ள வேண்டியதே தவிர, சிவில் கோர்ட்டில் தாவா கொண்டு வரக்கூடாது. (2, கல்கத்தா ரிப்போர்ட்டுகள் 344-ம் பக்கம்.)

காம்பன்ஸேஷன்பணம், கொடுப்பிப்பதற்கே இந்த ஸெக்ஷன்படி மாஜிஸ்டிரேட்டாருக்கு அதிகாரம் இருக்கிறது. அபராதம்போட அதிகாரம் இல்லை. (7, மதராஸ், ஹைகோர்ட்டு தீர்ப்புகள் அப்பெண்டிக்ஸ் 24-ம் பக்கம்.)

காம்பன் ஸேஷன், கொடுக்கும்படியாக, மாஜிஸ்டிரேட்டு உத்திரவு செய்த போது, அந்த பணத்தை கொடுக்காதபக்ஷத்தில், காவல் தண்டனைபடும்படி, தீர்ப்புசெய்யக்கூடாது. (மதராஸ் ஹைகோர்ட்டு புரோ. 1879 ஹு நவம்பர்மீ 27உ செ. 2113).

எதிரி, கால் நடைகளை, அக்கிரமமாய் பிடித்துக்கொண்டதாக, அபிப்பிராயப்பட்டு, மாஜிஸ்டிரேட்டார் பிரியாதிக்கு நேரிட்ட சம்மன் செலவுகளும், பிரியாதிக்கு எதிரி கொடுத்துக்கொள்ளவேண்டியதாக, கோர்ட்டு பீஸ் ஆக்ட், 31-ம் ஸெக்ஷன் பிரகாரம் உத்தரவு செய்தார். இந்த விஷயத்தில், கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு, உபயோகப்படாது. மேலும், பசுக்களை, அக்கிரமமாய் பிடித்து நிறுத்திவைத்ததற்காக சம்பவித்த நஷ்டத்திற்காக, செலவு காம்பன்ஸேஷனுக், பிரியாதுக்கு கொடுக்கப்படலாம். (இ-லா-ரி-வா-7, பேஜ். 345.)

## 6-ம். அத்தியாயம்.

### தெண்டனை.

தெண்டனை.

**18.** மேலே கண்ட, நிபந்தனைகளுக்கு விரோதமாக, பவுண்டு கீபர், கால் நடைகளை விடுதலை செய்தாலும், கிரயத்துக்கு கொண்டாலும், அல்லது சுபீத்தாலும், பவுண்டில், அடைக்கப்பட்ட கால் நடைகளுக்கு, போதுமான தீனியும், தண்ணீரும் கொடுக்கத் தவறினாலும், இந்த ஆக்டினால், அந்த பவுண்டுகீபருக்கு விதிக்கப்பட்ட இதர அலுவல்களில், எதையாகிலும், செய்யாமற்போனாலும, அப்படிப்பட்டவருக்கு, உண்டான வேறே தெண்டனையும் அல்லாமல், மாஜிஸ்டிரேட்டு முன்பாக, குற்றவாளி என்று தீர்மானிக்கப்படுவதின்மேல், அவருக்கு 50 ரூபாய்க்கு அதிகப்படாத அபராதம் விதிக்கப்படும்.

அப்படிப்பட்ட அபராதங்களை, பவுண்டு கீபரிட சம்பளத்தில் இருந்து கழித்து வசூல் செய்யலாம். (ஸெ. 27.)

### வியாக்கியானம்.

என்றால்—கி-பு-கோட் 386-வது செக்ஷனில் சொல்லியபடி, பிரதிவாதியின் அசையும்பொருளை ஜப்திசெய்து, விக்கிறயப்படுத்தி, வசூல் செய்துக் கொள்ளலாம். (மதராஸ் ஹைகோர்ட்டு புரோ. 1879 ஹு நவம்பர்மீ 27உ 2113 செ).

# A BRIEF SKETCH OF STAMP AND REGISTRATION LAW.

# ஸ்டாம்பு ரெஜிஸ்டிரேஷன் லா சங்கிரஹம்.

## I. ரெஜிஸ்டிரேஷன் செய்யாததைப்பற்றி நேரிடும் நஷ்டம்.

1. ரெஜிஸ்டர் செய்யாமல், செல்லத்தகாத கவுல் முதலிய தஸ்தாவேஜுகளையும், மற்ற சாதாரண தஸ்தாவேஜுகளையும், சிலர் தெரியாமையினாலேயோ, அல்லது, சொல்ப ரெஜிஸ்டர் பீஸான, ரூபா அரை, அல்லது, ஒன்று, செலவு செய்ய பின்வாங்கியோ, முதலில் ரெஜிஸ்டர் செய்துக் கொள்ளாமல், அசாத்தையாய் இருந்து விட்டு, பின்பு, வியாச்சியந் தொடர்ந்து, கோர்ட்டுக்குப் போகும்படி நேரிட்டபோது, காலம் அதிக்கிரமித்துப் போய், பாரி அபராதம் கொடுப்பதும், அல்லது, காலதோஷத்தினால், ரெஜிஸ்டர்செய்ய மார்க்கம் இல்லாமல், தஸ்தாவேஜே கெட்டுப்போவதும், அல்லது, 20 மடங்கு 30 மடங்கு, நஷ்டம், அடைவதுமாக இருக்கின்றன.

2. மேலே கண்டபடி, சொல்ப செலவுக்காக, பால்மாறுமல், தஸ்தாவேசுகளை, யுக்தமான காலத்தில், ரெஜிஸ்தர் செய்துக் கொள்ளுகிறவர்களுக்கோ எனில், அந்தச் செலவுக்கு, அனேக மடங்கு அதிகலாபம் உண்டாகும்.

## II. ரெஜிஸ்டர் செய்வதால் உண்டாகும் பிரயோஜனம்.

1. தஸ்தாவேஜு, அஜாக்கிரதையினால் கைசோர்ந்துபோனாலும், செல்லு முதலிய பூச்சிகள் அரித்துப் போட்டாலும், நெருப்பு பட்டு வெந்து போனாலும், வேறே எவ்விதமாகவாவது காணாமல் போனாலும், சொல்ப செலவு செய்து, ரெஜிஸ்தர் ஆபீசில் இருந்து, அதற்குநகல் ஸம்பாதித்துக் கொள்ளலாம். அந்த நகல் அசலைப்போலவே செல்லும். (எவிடேன்ஸ் ஆக்டு, ஸெக்ஷன், 65 C.)

2. முதலில், தஸ்தா வேஜில் எழுதியிராத சங்கதியை, புதிதாய் சேர்த்தாலும், அல்லது, இருந்த சங்கதியை நீக்கி விட்டாலும், மாற்றினாலும், அவைகளை சுலபமாய் கண்டு கொள்ளலாம்.

3. ரெஜிஸ்தர் ஆகாத தஸ்தவேஜு உண்டானதை, ருஜு செய்வதைப்பார்க்கிலும், ரெஜிஸ்தராய் இருக்கும் தஸ்தவேஜு உண்டானதை, ருஜுசெய்வது அதிக ஸுலபம். அதற்காக நேரிடும் செலவும் வெகு சொல்பம்.

4. தஸ்தவேஜு, ரெஜிஸ்தர் ஆய் இருந்தால், அது காணாமல் போன போதிலும், தாவழக்கு தொடர இடம் இராது.

5. கோர்ட்டு டிக்ரிகளை ரெஜிஸ்தர் செய்து கொண்டால் 6வருஷம் வரையில் காலதோஷம் இல்லாமல் செல்லும். ரெஜிஸ்தர் செய்யாவிட்டால், 3வருஷமான உடனே கால்தோஷம் வந்துவிடும். (லிமிடேஷன் ஆக்டு, ஷெடியூல் 2, ஆர்டிகல் 79.)

III. ரெஜிஸ்டர் செய்ய வேண்டிவந்து கேட்கும் அல்லது தாவாகும் தஸ்தாவேஜுகளின் பெயர்களும், அவைகளின் அர்த்தமும்.

1. தான ஸாஸனம்:—

பிரதி பலன் இல்லாமல், ஒருவர் ஸொத்தை மற்றொருவருக்கு மனப்பூர்வமாய் கொடுத்து, எழுதிக் கொடுக்கும் தஸ்தாவேஜு.

2. விக்கிரய தஸ்தாவேஜு:—

ரொக்க விலைக்கு, ஒருவர் ஸொத்தை மற்றொருவருக்கு கொடுத்து, எழுதிக்கொடுக்கும் தஸ்தாவேஜு:—

3. அடமானம் அல்லது குதுவை தஸ்தாவேஜு:—

கடனுக்குக் கொடுத்து இருக்கும், அல்லது கொடுக்க உத்தேசிக்கும், தொகையையாவது, அல்லது கடனையாவது, வரப்பற்றிக் கொள்ள, ஜவாபுதாரியாய், ஒரு ஸொத்தில், ஹக்கு உண்டாக்கிக் கொடுக்கும் தஸ்தாவேஜு.

4. கடன் பத்திரம் (பாண்டு):—

(a) யாதொரு சாக்ஷியால் கையெழுத்து போடப்பட்டு, யார் பெயரால் எழுதிக்கொடுக்கப்பட்டு இருக்கிறதோ, அவனுடைய உத்தரவு படிக்கு, யாருக்காவது அல்லது அதைக்கொண்டு வருகிறவனுக்காவது, தொகை கொடுக்கத்தக்கதாக, ஒருவன் மற்றொருவனுக்கு, தொகை கொடுக்க உடன்பட்டு, எழுதிக் கொடுக்கும் தஸ்தாவேஜு.

(b) மேல் கண்டபடி, சாக்ஷி கையெழுத்து போடப்பட்டு, ஒருவன், மற்றொருவனுக்கு, தானியம் அல்லது வேறு விலையுயர்ந்த பொருளை, சேர்ப்பிப்பதாய் உடன் பட்டு, எழுதிக்கொடுக்கும் தஸ்தாவேஜு.





5. குத்தகைப் பத்திரங்களும், அவைகளின் எதிரிடை பத்திரங்களும்.

குத்தகை (Lease) என்பது, அசையாப் பொருளுக்கே சம்பந்தப்படும். ஸாஸ்வதமாகவாவது, சிலகாலம் வரையிலாவது, ஒரு அசையாப் பொருளை அனுபவிக்கும் ஹக்கை, யாதொரு பிரதி பலனுக்காக, டிரான்ஸ்பர் செய்து எழுதிக்கொடுக்கும் தஸ்தாவேஜுக்கு, குத்தகைபத்திரம் என்று பெயர். பிரதி பலன், பல வகைப்பட்டதாய் இருக்கும்:—

(a) ஒரே தடவையாய் செலுத்தப்பட்ட, அல்லது, செலுத்துவதாய் கரார் செய்துக் கொள்ளப்பட்ட, தொகையாய் இருக்கலாம்; அல்லது, வாய்தாபடிக்காவது, அல்லது, குறித்த விசேஷ காலங்களிலாவது, செலுத்தப்படத்தக்க,

(b) ரொக்கத் தொகையாகவாவது,

(c) மாசூல் வாரமாகவாவது,

(d) பிரிமியம், அல்லது, வேறே விலையுள்ள எதுவாகவாவது, இருக்கலாம்.

ஸொத்துக்காரனுக்கு, குத்தகைதாரன், குத்தகை கொடுப்பதாய் ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுக்கும் தஸ்தாவேஜு, எதிரிடை என்று சொல்லப்படும்.

குத்தகைப்பத்திரங்களும், அவைகளின் எதிரிடைப் பத்திரங்களும், இருவகைப்படும்:—

(1) விவஸாய ஸம்மந்தம் உள்ளவைகள்;

(2) விவஸாய ஸம்மந்தம் இல்லாதவைகள்;

விவஸாய ஸம்மந்தம் உள்ளவைகள் என்றால்:—

ஜமீன்தார்கள், மோகாஸாதார்கள், இனாம்தார்கள், முதலான பூமியுள்ளவர்களும், விவஸாயம் செய்யும் குடிகளும், ஒருவருக்கு ஒருவர் எழுதிகொடுக்கும் பட்டா, முச்சிலிககாக்கள்.

விவஸாய ஸம்மந்தம் இல்லாதவைகள் என்றால்:—

பங்களாக்கள், மெத்தைகள், மண்டிகள், பாக்டொரிகள், (Factories), வீடுகள், மனைகள், முதலானவைகளை, வாடகைக்கு விடும்போது, வாடகைக்கு கொடுப்பவர்களும், வாங்கிக்கொள்ளுகிறவர்களும், ஒருவருக் கொருவர், எழுதிக்கொடுக்கும் வாடகைச் சீட்டுகளும், எதிரிடைச் சீட்டுகளும் ஆகும்.

6. வாரபத்திரம்:—

மாசூலில் ஒருபாகம், நிலக்காரனுக்கு, குடியானவன் கொடுக்கும்படியாய் ஒப்புக்கொண்டு, எழுதிக்கொடுக்கும் கவுல்.

7. பாரீகத்து அல்லது விபாக பத்திரம் :—

அதாவது பங்கிட்டுக்கொள்ள உடன்படிக்கை.

8. (ரீகன்வேயன்ஸ் தஸ்தாவேஜு) ஸ்வாதீன அடமான விடுதலைப்பத்திரம் :—

கடன் வாங்கிக்கொண்டு, அதற்கு ஈடாய், யாதொருசொத்தை ஸ்வாதீனப்படுத்தி இருந்தால், கடன் தீர்த்தபிறகு, கடன் கொடுத்தவன், அடமான சொத்தை, மறுபடி ஸ்வாதீனஞ் செய்து, எழுதிக்கொடுக்கும் தஸ்தாவேஜு.

9. செடில்மெண்டு தஸ்தாவேஜு :—

ஆஸ்தி உண்டாக்கி வைக்கவேணு மென்று, தான் கோருகிற தன் குடும்பத்தார்களுக்காவது, இதாருக்காவது, ஒருவன், தன் ஆஸ்தியை பாகஞ்செய்து, எழுதிக்கொடுக்கும் ஏற்பாடு பத்திரம். விவாஹம் நிமித்தமாயாவது, மதஸம்மந்த விஷயமாயாவது, தர்மவிஷயமாயாவது, சொத்தைக் கொடுத்து, எழுதிக்கொடுக்கும் தஸ்தாவேஜுகூட, செடில்மெண்டு (Settlement) பத்திரமாகும். (புதுஸ்டாம்பு ஆக்டு ஸெக்ஷன் 2, கிளாஸ். 24.)

10. வகாலத்து நாமா :—

ஒருவா, தன்தரபில் நடவடிக்கை நடத்த, மற்றொருவருக்கு அதிகாரம கொடுத்து எழுதிக்கொடுக்கும் தஸ்தாவேஜு. வகாலத்து நாமாக்கள் இருவகைப்படும.

(a) ஜனரல் வகாலத்து நாமா :—

அனேக வியவஹாரங்களை, நடத்துகிறதற்காக கொடுக்கும், அதிகாரபத்திரம். இதற்கு, முக்தியார் நாமா என்றும் (ஏஜெண்டுபவர் எனறும) சொல்வதுண்டு.

(b) ஸ்பெஷல் வகாலத்து நாமா.

ஏதோ ஒரு வியவஹாரம் நிமித்தம், எழுதிக்கொடுக்கும் அதிகாரபத்திரம்.

11. ஜீவனும்ஸ பத்திரம் :—

ஒரு மனிதனுக்கு, அவன் ஜீவகாலம் வரையிலாவது, இவ்வளவென்று நிர்ணயம் இல்லாதகாலம் வரையிலாவது, வருஷாவருஷம் (இவ்வளவு) தொகை கொடுக்கிறதென்று ஒப்புக்கொண்டு, எழுதிக்கொடுக்கும் தஸ்தாவேஜு. இதற்கு அன்னியூயிடி தஸ்தாவேஜு (Annuity-bond) என்றும் பெயர்.

12. பரிவர்த்தனை தஸ்தாவேஜு :—

ஒருவன், தன சொத்தை, மற்றொருவனுக்கு கொடுத்து, அவன சொத்தை, தான் பெற்றுக்கொண்டு, பரஸ்பரம், ஒருவர்க்கொருவர் அல்லது உபயோகித்து, எழுதிக்கொள்ளும் தஸ்தாவேஜு.



# STANDING ORDERS OF THE BOARD OF REVENUE.

# போர்ட்டு ஸ்டாண்டிங் ஆர்டர்கள்.

## DARKHAST RULES

## தற்காஸ்து ரூல்கள்.

நெ. 30:—ஸர்வே செய்து, தீர்வை ஏற்பட்டு, எவரிட அனுபவத்திலும் இராத, ஸர்க்கார் தரிசு (பஞ்சர்) பூமிகளை, வேண்டுபவர்களுக்கு கொடுப்பது.

I. தீர்வை ஏற்பட்ட, ஸர்க்கார் தரிசு (பஞ்சர்) பூமிகளை, சாகுபடி செய்ய, தற்காஸ்து செய்துகொள்பவர்கள், தங்களுக்கு வேண்டிய பூமி, இன்ன தென்று, விவரம் கண்டு, கொடுத்துக் கொள்ளவேண்டும்.

II. அப்படி செய்துக் கொள்ளும் விண்ணப்பங்களை, வெற்று காகிதத்தில் எழுதி, வருஷத்தில், எந்த காலத்தில் ஆவது கொடுக்கலாம். ஆனால், அப்படி செய்துக் கொள்ளும் தற்காஸ்தில் கண்ட பூமி, யாரிட கைப்பற்றிலும் (அனுபவத்திலும்) இல்லாததாயும், அல்லது அந்த காலத்தில் சோடி ராஜீநாமாகொடுத்து கைவிடப்பட்டதாயும், இருக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட பூமிகளுக்கு மாத்திரம் தான், மனுக்களை பெற்றுக்கொள்ளப்படும்.

III. ஆயினும், உத்திரவுஸிவாய், அனுபவிக்கப்பட்ட நிலங்களுக்காக செய்துக் கொள்ளும் மனுக்களையும், வாங்கிக் கொள்ளலாம்.

IV. தீர்வை ஏற்பட்ட பூமிக்காக, முதலில், கிராம மணியகாருக்காவது, தாசில்தாருக்காவது தற்காஸ்து மனு கொடுத்துக் கொள்ளலாம். அப்பேர்க்கொற்ற தற்காஸ்துகளை, தாசில்தாரே பைஸல் செய்யவேண்டும். தாசில்தார் தீர்ப்பின்பேரில், டிவிஷனல் ஆபிஸரிடத்தில், அப்பில் செய்துக் கொள்ளலாம்.

V. முதலில், தாசில்தார் இடத்தில் கொடுத்துக்கொள்ளும் தற்காஸ்துகளை, ரிப்போர்ட்டு செய்யும்படி, கிராம உத்தியோகஸ்தர்களுக்கு, அனுப்பவேண்டும்.

VI. கிராம உத்தியோகஸ்தர்கள் ஆவது, அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆவது, அனுபவிக்கப்பட்ட நிலங்களுக்காக செய்துக்கொள்ளும் தற்காஸ்து மனுக்களை, தாசில்தாருக்காகிலும், டிப்டி தாசில்தாருக்காகிலும், செய்துக்கொள்ள வேண்டும்.

VII. கிராம உத்தியோகஸ்தர் இடத்தில், நேராக ஆவது, தாசில்தார் மூலமாக ஆவது, தற்காஸ்து தாகல் ஆனால், அதை, C குறிப்புள்ள ரெஜிஸ்தரில் பதிவுசெய்து, உடனே, அந்த சங்கதியை, கிராமத்தில் தண்டோரா மூலமாய் பிரசித்தப்படுத்தி, அதைப்பற்றி கிராம சாவடியிலும், தற்காஸ்து பூமியின்பேரிலும்,

15 நாள்வரையில், நோடீஸ் ஒட்டிவைக்கவேண்டும். அந்த வாய்தாவின்படி, 15 நாள் ஆனஉடன், ஏ நமூனா பாரத்தில், மிமோராண்டம் இரண்டாக தயார்செய்து, அவைகளையும், (நமூனா எ.1) நோடீஸையும், ஆலஸியம் செய்யாமல், தாசில்தாருக்கு, அல்லது, டிப்டி. தாசில்தாருக்கு, அனுப்பவேண்டும்.

VIII. அந்த நோடீஸில், மணியகார், கர்ணம், இவர்கள் கையெழுத்து செய்யவேண்டியதும் அல்லாமல், மேலே கண்டபடி, நோடீஸை, கிராமத்தில் பிரசித்தஞ் செய்ததற்கு சாக்ஷியமாக (அடையாளமாக), பக்க நிலக்காரர்கள் இடத்திலாவது, அல்லது படிப்பு இல்லாதவர்களாய் இருந்தாலும், அந்த கிராமத்திய கௌரவமான குடித்தனக்காரர்கள் இரண்டுபேர் இடத்தில் ஆவது, அல்லது, முக்திய பாத்தியதையுடைய வேறே நபர்கள் இடத்தில் ஆவது, கையெழுத்துபெற்று, ஆலஸியம் இல்லாமல், தாசில்தாரிடம் அனுப்பவேண்டும்.

IX. அக்கம் பக்கத்தில் உள்ள பூமிக்கு உடையவர்கள், மூதலானவர்கள், சாக்ஷி கையெழுத்து செய்யாததற்கு உண்டான காரணத்தை, A நமூனா நோடீஸின் அடியில், தெளிவாய் எழுத வேண்டும்.

X. அக்கம் பக்கத்தில் உள்ள பூமிக்கு உடையவர்கள், இன்னார் என்பதைக்காட்டும் A. 2 உள்ள ஒரு ஜாபிதாவை, தயார் செய்து, அதை, அந்த மிமோராண்டத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

XI. எப்போதும், தர்காஸ்து மிமோராண்டங்களை, தர்காஸ்துதாரன் மூலமாக, தாசில்தாரிடம் கொடுக்கும்படிச்சொல்லி அனுப்பவேண்டும்.

XII. தர்காஸ்துதார் கோறிக்கைபடி, பூமியை அடமானம் செய்வதாய் இருந்தால், கலெக்டரிடம் வேறே விதமான உத்திரவை பெற்று இருந்தால் ஒழிய, தான், எந்த பஸலியில் பூமியை பெற்றுக்கொள்ளுகிறானே அந்த பஸலியில், அந்தபூமிக்கு உள்ள தீர்வையைச் செலுத்தவேண்டும்.

XIII. தீர்வை ஏற்பட்ட பூமியை, கிரமமாய் தர்காஸ்து செய்துக்கொள்ளாமலே, (உத்திரவுசிவாய்) சாகுபடிசெய்து அநுபவிக்கிற விஷயத்தில், A பாரப் பிரகாரம், பிரத்தியேகமாய், ஒரு மிமோராண்டத்தை 2-பிரதியாக தயார்செய்து, மாதத்துக்கு ஒரு தடவை, தாசில்தாருக்காவது, அல்லது, டிப்டி. தாசில்தாருக்காவது, அனுப்பிவரவேண்டும்.

XIV. கிரமமாய், தர்காஸ்து கொடுத்ததின்பேரில், அதைப் பற்றி, எவ்விதமாய் பிரசித்தஞ் செய்யவேண்டுமோ, அப்படியே, தர்காஸ்து கொடாமல் ஸாகுபடி செய்ததைப்பற்றி, கிராமத்தில், முன்னடி, நோடீஸ் பிரஸித்தஞ் செய்யவேண்டும். அந்தப்படி, பூமியை அநுபவிப்பதற்கு, பட்டா வேண்டியதும், இல்லாததும் A மிமோராண்டத்தின் தாராகாலத்தில் தாரா கண்டு எழுதவேண்டும்.





XV. எந்த மாதத்தில், உத்திரவுசிவாய் பூமியை எவரும் அநுபவியாமல் இருக்கிறபக்ஷத்தில், அப்போர்க்கொற்ற ஒவ்வொரு மாதத்திற்கும், பூஜ்ஜியம் ஸ்டேட்மெண்டை அனுப்பவேண்டும்.

XVI. தீர்வை ஏற்பட்ட நிலமாய் இருந்தாலும், ஸர்க்கார் காரியத்துக்காக ஆவது, கிராம பொது நன்மைக்காக ஆவது, அல்லது, வேறே விசேஷமான எந்த காரியத்துக்காக ஆவது, நிறுத்திக்கொள்ளப்பட்டிருக்கிற நிலத்துக்கு, தர்காஸ்து கொடுத்துக்கொண்டால், A மிமோராண்டத்தின் 15-வது கலத்தில் கண்ட, (12) பனிரெண்டுவகை ஆக்ஷேபங்களில், எவையாகினும் இருக்கும்பக்ஷத்தில், நிலம், சாகுபடிக்கு அடமானம் செய்யக்கூடாது.

XVII. கிராம உத்தியோகஸ்தர்கள், B நமூனா பிரகாரம், ஒரு பிரத்தியேக மிமோராண்டத்தை, இரண்டு பிரதியாக தயார் செய்து, தாசில்தாருக்கு மாதம் மாதம் அனுப்பவேண்டும்.

XVIII. எந்த மாதத்தில் ஆவது, அப்பேர்ப்பட்ட ஆக்கிரமணம் (உத்திரவுசிவாய் பிரவேசிப்பு) இல்லாதபக்ஷத்தில், அப்போர்க்கொற்ற ஒவ்வொரு மாதத்திற்கும், பூஜ்ஜியம் ஸ்டேட்மெண்டை, அனுப்பவேண்டும்.

XIX. அப்போர்க்கொற்ற பூமிகளுக்கு, செய்துக்கொள்ளப்படும் மனுக்களை, டிவிஷன் ஆபீஸருக்காவது, தாசில்தாருக்காவது, கொடுத்துக்கொள்ளவேண்டும் என்றும், கிராம உத்தியோகஸ்தர்கள், தங்களுக்கு அதிகாரம் இல்லை என்றும், தெரிந்துகொள்ளவேண்டும்.

XX. கிராம உத்தியோகஸ்தர்கள், தங்கள் சொந்த கிராமத்திலாவது, இதரகிராமத்திலாவது, தீர்வை உள்ளதும், தீர்வை இல்லாததுமான, பூமிகளில், பிரவேசிக்கவோ, அல்லது சாகுபடி செய்யவோ, கூடாது. ஆனால், தகுந்த அதிகாரியானவர், தர்காஸ்து ருல்ஸை அனுஸரித்து, அவர்களுக்கு, அப்படிப்பட்ட பூமிகளை அடமானம் செய்து இருந்தபக்ஷத்தில், ஷை கிராம உத்தியோகஸ்தர்கள், அந்த பூமியில் பிரவேசிக்கலாம், அல்லது, சாகுபடி செய்யலாம்.

XXI. தர்காஸ்து செய்துக்கொள்ளாமலே அநுபவிக்கும் விஷயத்தில், பூமியின் பூரா தீர்வை மொத்தத்தை, தகுந்த அதிகாரியினால் ஏற்படுத்தப்பட்டு, மேற்படி தர்காஸ்துதாருக்கு தெரிவிக்கப்பட்ட பிறகு, 30 தினங்களுக்குள், அந்த பூமியின் பூரா தீர்வை மொத்தத்தை, அவர் செலுத்த சித்தமாயிருக்கவேண்டும்.

கிராம உத்தியோகஸ்தர்கள், A மிமோராண்டத்தையும், B மிமோராண்டத்தையும், தயார் செய்வதில், எல்லா கலங்களையும் சரியாய் எழுதவேண்டும்.

## A மிமோராண்டத்தின்,

5-வது கலத்தில், பூமி, நஞ்சையா, புஞ்சையா; தீர்வை ஏற்படாததா, புறம்போக்கா; என்று விவரமாய் எழுதவேண்டும்.

7-வது கலத்தில், (தாக்கின்) முழுநிலத்தின் பூரா விஸ்தீரணத்தை ஒவ்வொன்றுக்கு நேராக தாக்கல், செய்யவேண்டும்.

8-வது கலத்தில், தற்காஸ்து நிலம் தீர்வை ஏற்படாததாய் இருந்தால், அந்த தற்காஸ்தை பைஸல் செய்யும் உத்தியோகஸ்தர், எழுதவேண்டிய அம்சங்களை எழுதும்பொருட்டு, கிராம உத்தியோகஸ்தர்கள், அந்த கலத்தில், ஒன்றும் எழுதாமல், காலியாய் விட்டுவைக்கவேண்டும்.

ஷை 8-வது கலத்தை, தீர்வை ஏற்பட்டிராத கேசு, தற்காஸ்து பைஸல் செய்யும் ஆபிஸர், பூர்த்திசெய்யும்பொருட்டு, பக்க நிலங்களின், நம்பர், விஸ்தீர்ணம், தீர்வை, இவைகளை கிராம உத்தியோகஸ்தர்கள், 20-வது கலமாகிய, ரிமார்க்கு என்னும் ஷரா கலத்தில், கண்டு எழுதவேண்டும்.

தற்காஸ்து கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு (தாக்குகளுக்கு), மேலே சொன்ன, அக்கம்பக்கத்தில் உள்ள பூமிகளுக்கு, ஏற்பட்ட ரேட்டுபடி, தீர்வை விதிக்கக்கூடாதென்று, கிராம உத்தியோகஸ்தர்கள் அபிப்பிராயப்பட்டால், அதற்குள்ள காரணங்களையும்கண்டு எழுதவேண்டும்.

9,10-வது கலங்களில், எவ்வளவு பூமிக்கு தற்காஸ்து கொடுக்கப் படுகிறதோ அவ்வளவு பூமியின் விஸ்தீர்ணத்தையும், தீர்வையையும், கண்டு எழுதவேண்டியது.

12-வது கலத்தில், தற்காஸ்து நிலத்தின் மூலமாய், பொது (சமுதாய) ஜனங்களுக்கு வழிவிடவேண்டியது அவஸியம் இருந்தால், அந்தவழி சாதுபடிசெய்ய லாயக்காயும், ஆனால், தற்காலம் காம்பாயும், இருக்கப்பட்ட நிலத்திற்கும், போகவேண்டியதற்காகவோ, அல்லது, வேறே எந்த காரணத்துக்காகவோ, என்னும் விவரத்தை தெளிவாய் எழுதவேண்டும்.

ஜலாதாரத்தின் கரை (நீர்ப்பாய்ச்சலின் கால்வாய், அல்லது, அந்த நீர்ப்பாய்ச்சலுக்கு சம்பந்தித்தகட்டுவேலை, அணை) நிலத்தின் குறுக்கே போகாமல், அதன் சமீபத்தில், அல்லது, பக்கமாய் போய்க்கொண்டு இருக்குமானால், அந்த நிலத்தில் இருந்து அந்த கரைக்கு உள்ள தூரம், இவ்வளவு என்று, கண்டு எழுதவேண்டும்.

13-வது கலத்தில், நிலத்துக்காக தற்காஸ்து செய்த நபரின் பெயரையாவது, தற்காஸ்துதாருக்கோ, அல்லது, அனுபோகதாருக்கோ, நிலத்தை அடமானம் செய்யக்கூடாதென்று, ஆக்ஷேபணை செய்த நபரினுடைய பெயரும், ஆக்ஷேபணையின் விவரமும், தாகல் செய்யவேண்டும்.



# A COLLECTION OF IMPORTANT ORDERS RELATING TO VILLAGE OFFICERS BY COLLECTORS, IN TAMIL DISTRICTS.

## தமிழ் ஜில்லா கலெக்டர்களின் கிராம நவுகர்களைப்பற்றிய முக்கிய உத்தரவு கோர்வை.

### 1. *Regarding Village Officers' Special Tests.*

#### கிராம உத்தியோகஸ்தர் ஸ்பெஷல் டெஸ்டைப்பற்றி.

தகவல்:—1898௵ நவம்பர்௴ 29௳யின் 327—R. L. நெ. உள்ள போர்டு புரொஸீடிங்ஸ்.

5-வது ஸ்டாண்டர்டு பரீக்ஷையும், ஸ்பெஷல் பிரைமெரி பரீக்ஷையும், பிரைமெரி ஸ்கூல் பரீக்ஷைக்கு சமமென்று சொல்லப்பட்டு இருக்கின்றன; மேற்படி பரீக்ஷைகளில் ஏதாவது ஒன்றில் தேறியிருக்கிறவர்கள், கிராம உத்தியோகஸ்தர்களின் ஸ்பெஷல் டெஸ்டு பரீக்ஷைக்கு மனு செய்து அதுகளுக்கு ஆஜராகத் தக்கவர்களாய் இருக்கிறார்கள்.

சேலம் ஜில்லா, வில்லேஜ்ஷீட்டு நெ. 3. 1-3-99.

திருச்சிறுப்பள்ளி ஜில்லா, ஷை 3. 1-3-99.

(நிலையான உத்திரவு நெ. 12.)

### 2. *Conferring power on all Village Headman instead of applying to the Taluq for issuing Distraint Notice No. 1 under Madras Act II of 1864, Recovery of Arrear of Revenue.*

#### ரிவினியூ வசூலைப்பற்றிய,

1864௵த்திய 11-வது மதராஸ் ஆக்டுபடி, நெ. 1. டிமாண்டு நோடீஸுகளை, பிறப்பிக்கும்படி, தாலூகாவுக்கு தெரிவித்துக்கொள்வதற்கு பதிலாக, கிராமாதிகாரிகளே பிறப்பிக்கலாமென்று அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதைப்பற்றி 1899௵த்திய பிப்ரவரி௴ 2௳ யுள்ள, ஆர்-லி 140 கவரன்மெண்டு-போர்டு.

தகவல்:—1898௵த்திய நவம்பர்௴ 14௳ யின் கவரன்மெண்டு ஆர்டர், ரெவினியூ நெம்பர் 680 தை தெரிவிக்கும், 1398௵ டிஸம்பர்௴ 20௳ யுள்ள (லாண்டு ரெவினியூ) போர்டார் புரொஸீடிங்ஸ்.

1864௵த்திய 11-வது மதராஸ் ஆக்டுபடி, நெம்பர் 1 டிமாண்டு நோடீஸுகளை, பிறப்பிக்கும் அதிகாரம், பரீக்ஷார்த்தமாய், ஜில்லாவில் எல்லா கிராமாதிகாரிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. டிமாண்டு நோடீஸுகளை பிறப்பிக்கும்படி, தாலூகாவுக்கு தெரிவித்துக்கொள்வதற்கு பதிலாக, கிராமாதிகாரிகள், தாங்களே அவைகளை பிறப்பிக்கலாம். வசூலைப்பற்றின இதர நடவடிக்கைகள், முன்போலவே அனுசரிக்க வேண்டியது.

2. இஸ்திபாஜி விழும் தேதிக்குமுன், எந்த காரணத்தைக்கொண்டும் நோடீஸ்களை விடக்கூடாது. சார்வையாளானாலும் (கைக்கு சேர்ந்தாலும்) சரியே ஆகாவிட்டாலும் சரியே. பிறப்பிக்கப்பட்ட எல்லா நோடீஸ்களும் தாலூகா கச்சேரிக்கு வழக்கப்படி அனுப்பி வரவேண்டும்.

3. இப்போது, அமுலில் (அனுஷ்டானத்தில்) இருக்கும், 1. நெம்பர் நோடீஸ் நமூனா, கிராமாதிகாரிகள் உபயோகிக்கவேண்டியது. அந்த பாகத்தில், ஸ்டேட்டுமெண்டு முதல், மேல்பாகத்தில் இருக்கும் நான்கு வரிகளை அடித்து விடவேண்டும். நமூனாவின் அடியில் "தாசீல்தார்" என்ற வார்த்தைக்கு பதிலாக (பர்த்தியாய்) "கிராமாதிகாரி" என்பதாய் எழுதிக் கொள்ளவேண்டும்.

தஞ்சாவூர் ஜில்லா கெஜட்டு, வில்லேஜ் ஷீட் நெ. 4, (ஸர்கியுலர் நெ 5.) 1-3-99.

---

**3.** *Regarding Applications for Transfer of Revenue Registry.*

பட்டா மாறுதல் விண்ணப்பத்தைப்பற்றி.

தகவல்:—ரெவினியூ போர்டார் (லாண்டு ரெவினியூ இலாகா) 1899ஞு பிப்ருவரியீ 14உ யுள்ள 44-ம் புரொஸீடிங்ஸ்.

ரெவினியூ ஆபீஸர்களிடம் தாக்கல் செய்யவேண்டிய பட்டா மாறுதல் விண்ணப்பங்களை நமூனாக்களுக்கு இனிமேல்பட்டு யாதொரு கட்டணமும் வாங்கப்படாது.

2. போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் என்னும் நிலையான உத்தரவுகளின் புதுபதிப்பில், 20-ம் உத்தரவின் 9-வது பாராவின் அநுபந்தமாக அச்சிட்டிருக்கும் நமூனாவில் "உள் நமபர்" என்கிற கலந்துக்கும் "நஞ்சையா, புஞ்சையா" என்கிற கலந்துக்கும் மத்தியில் "கவரன்மெண்டா, இனாமா" என்று ஒரு கலத்தைச்சேர்த்து திருத்தலாகும்.

கோயம்புத்தூர் ஜில்லா கெஜட்டு, ஒட்டு உத்தரவு, நெ. 10. 8-4-99.

---

**4.** *Interpretation of, Part 4. of S. O. No-30, as to the expression, "Members of their Families."*

ஸ்டாண்டிங்கு ஆர்டர் நெ 30-ல், 4-வது பாராவில் குறித்திருக்கும் "அவர்கள் குடும்பங்களில் சேர்ந்தவர்கள்" என்பதின் கருத்து.

தகவல்:—1898ஞு டிஸம்பர்மீ 6உயின் 3452 மிஸ். நெ. உள்ள, ரெவினியூ போர்டார் புரொஸீடிங்ஸ்.

மேலே கண்டிருக்கும், "அவர்கள குடும்பங்களில் சேர்ந்தவர்கள்" என்னும் சொற்கள், பசுவனா (மைத்துனா) மார்கள், ரத்த சம்பந்தத்தினாலாவது, அல்லது, இதர உறவினாலாவது கலந்திருக்கும் பந்துக்கள் என அன்வயமாகின்றன. ஸ்டாண்டிங்கு ஆர்டர் நெ 30 ன, 5 வது பாரா பிரகாரம், தாசில்தாருக்கு அனுப்பிவரும் ரிப்போர்ட்டுகளில அப்போர்க்கொற்ற பந்துத்துவத்தை கிராம உத்தியோகஸ்தர்கள கண்டு எழுதவேண்டியது.

தென் ஆற்காடு ஜில்லா கெஜட்டு, வில்லேஜ்ஷீட்டு, நெ. 3. (ஸ்டாண்டிங்கு ஆர்டர் நெ. 13) 1-3-99.

---



**5.** *Regarding Maintenance of a Register of Children who have not been Vaccinated, by Headman of the Village.*

அம்மை குத்தாத பிள்ளைகளைப்பற்றிய, ரெஜிஸ்தர் ஒன்றை, கிராமாதிகாரி வைக்கவேண்டியதைப்பற்றி.

தகவல்:—1898ஞு டிஸம்பர்மீ 8உ யுள்ள, 448 நெ. ரெவினியூ போர்ட்டு (ஸெடில் மெண்டு) புரொஸீடிங்ஸ்.

அம்மை வைக்கப்படாத பிள்ளைகளைப்பற்றிய ஒரு ரெஜிஸ்தரை அடியில் கண்ட நமூனாபிரகாரம் நாளது காலெண்டர் வருஷத்திய ஆரம்பம் முதல் ஒவ்வொரு கிராம அதிகாரியும் வைக்கவேண்டும்.

1. அம்மை குத்தாத பிள்ளைகளின் பெயர்கள்.
2. அம்மை வைத்த தேதி.
3. வாக்ஸிநேட்டருடைய கையெழுத்து.
4. வாக்ஸினேஷன் டிப்டி இன்ஸ்பெக்டருடைய ஷெரு.

திருச்சினாப்பள்ளி ஜில்லா கெஜட்டு, வில்லேஜ் ஷீட்டு (ஸர்கியுலர் நெ 13.) 1-3-99.

---

**6.** *Regarding Repayment of Loan, granted for purchase of Manure for Agricultural purposes, under Loans Act.*

விவசாயத்துக்காக எருவுவாங்க, ஆக்ட்டுபடி கொடுக்கப்பட்ட கடனை, வாபஸ் செய்வதைப்பற்றி.

தகவல்:—1898ஞு டிஸம்பர்மீ 26உ யுள்ள 469-ம் நெ. ரெவினியூ போர்ட்டு (ஸெடில்மெண்டு) புரொஸீடிங்ஸ்.

விவஸாயக் காரர்களைக் குறித்த கடன்களைப்பற்றிய ஆக்டின்படி, எருவு வாங்குவதற்காக கடன் கொடுக்கப்பட்டு அப்படிப்பட்ட எருவு போடுவதனால் உடனே பலன் கிடைப்பதாக இருந்தால் அந்த கடனை வாபஸ் கொடுப்பதற்கு கிஷ்கர்த்தை செய்யப்படும் காலமானது சாதாரணமாக இரண்டு வருஷங்களுக்கு மேல் படக்கூடாது.

திருச்சினாப்பள்ளி ஜில்லா கெஜட்டு, வில்லேஜ் ஷீட்டு, நெ 3. ஸர்கியுலர் நெ 12) 1-3-99.

---

**7.** *Regarding Transfer of Registry and other Sundry Works relating to the Disease and Deaths of Cattle in the Village, to the Headman and Monegar.*

கிராமங்களில், கால்நடைகளின் நோயையும், மரணத்தையும், ரெஜிஸ்தர்செய்யவேண்டிய வேலையும், அதைச்சேர்ந்த மற்ற எல்லா சில்லரைவேலைகளும், கிராமாதிகாரிகளுக்கும், மணியக்காரர்களுக்கும், மாற்றப்பட்டதை பற்றி.

தகவல்:—1899ஞு ஜனவரிமீ 7உயில், 7 வது நெம்பர் உள்ள ரெவினியூ போர்டார் (ஸெடில்மெண்டு இலாகா) புரொஸீடிங்ஸ்.

இனிமேல் கிராமங்களில் கால்நடைகளின் நோயையும், மரணத்தையும், ரெஜிஸ்தர் செய்யவேண்டிய வேலையும், அதைச்சேர்ந்த மற்ற எல்லா சில்லரை வேலைகளும், கிராம கரணங்களிடத்திலிருந்து, கிராமாதிகாரிகளுக்கும், மணியகாரர்களுக்கும், மாற்றப்பட்டு இருக்கின்றன. ஆனால் ஐந்து வருஷத்துக்கு ஒருதரம், தயார் செய்யவேண்டிய கணக்குமட்டும், கிராம முன்சீபுகள் உதவியின்பேரில், கரணங்களே, எப்போதும்போல் செய்து வரவேண்டும்.

மதுரை ஜில்லா கெஜட்டு, வில்லேஜ் ஷீட்டு. 1-3-99.

**8.** *Regarding the crediting of the collection of Tax on Trees to items of Land Revenue and Forest Revenue.*

மரங்களின்பேரில் வசூல்செய்யப்படும் தீர்வையை லாண்டு ரெவினியூ, பாரெஸ்டு ரெவினியூ பாபுதுகளுக்கு, வரவுவைக்க (ஜமை கட்ட) வேண்டியதைப்பற்றி

*தகவல் :—1898வு நவம்பர்மீ 15உயின் 502ம் நெம்பர் உள்ள (லாண்டு ரெவினியூ) பாரெஸ்டு, ரிவினியூ போர்ட்டு புரொஸீடிங்ஸ்.*

*ரிஸர்வு செய்யப்படாத (அதாவது—ஏரி, ஆறு, கால்வாய், கைவிட்ட நஸ்தா அல்லது வழி) நிலங்களில் இருக்கும், மரப்பட்டா தீர்வையையும், கிராம புறம்போக்கு (அதாவது—கிராம நத்தம், களமேடு, மந்தைவெளி) களில் உள்ள மரப்பட்டா தீர்வையையும், லாண்டு-ரெவினியூவுக்கும், மேற்படி கிராம புறம்போக்கில், பட்டுப்போன, அல்லது, காற்றினால் சாய்ந்த, அல்லது, வெட்டுப்பட்ட, மரங்களின் விற்கிரய மொத்தத்தை, பாரெஸ்டு-ரிவினியூவுக்கும், ஜமை கட்ட (வரவுவைக்க) வேண்டும்.*

திருச்சிநாப்பள்ளி ஜில்லா கெஜட்டு, வில்லேஜிஷீட்டு நெ. 3. (ஸர்கியுலர். நெ. 11) 1-3-99.

**9.** *Prohibiting the practice of issuing Manuscript Chits to ryots for the removal of Manure, Leaves and other Forest produce from patta lands.*

பட்டா நிலங்களில் இருந்து, எரு, தழை, இன்னும் இதர காட்டு உற்பத்தியைக் கொண்டுபோகும்படி, கிராம உத்தியோகஸ்தர்கள், கையினால் எழுதிக்கொடுக்கும், துண்டு சீட்டு ஆசாரத்தை, நிறுத்தல்.

*பட்டா நிலங்களிலிருந்து, எரு, தழை, இன்னும் இதரகாட்டு உற்பத்தியைக்கொண்டு போவதை, பாரஸ்டு உத்தியோகஸ்தர்கள், மறியல் செய்து விசாரிக்க ஒட்டாதவிதமாக, அந்தப் பிரகாரம் கொண்டுபோகும்படி, குடிகளுக்கு கையினால் எழுதப்பட்ட சீட்டுகளை கிராம உத்தியோகஸ்தர்கள் கொடுப்பது வழக்கமாய் இருக்கிறதாக, கோர்ட்டுக்கு வரப்பட்டு இருக்கிறது. இது மோசத்துக்கு இடம் உண்டாகும்போல் இருக்கிறதனால், அப்பேர்க்கொற்ற சீட்டுகள், அநாவசியமாகவும், ஆக்ஷேபகரமாகவும் இருக்கின்றன. எவ்விடத்தில் இந்த ஆசாரம் அனுஷ்டானத்தில் இருக்கிறதோ, அதை உடனே நிறுத்திப்போட வேண்டும்.*

தென் ஆற்காடு ஜில்லா கெஜட்டு வில்லேஜ் ஷீட் நெ. 7, ஸர்கியுலர் நெ. 3-2-1-99.



# VILLAGE SANITATION.

## கிராமசுத்தம்.

### *COMMONEST CAUSES OF DISEASES IN VILLAGES AND THEIR REMEDY.*

### கிராமங்களில் வியாதி உண்டாவதற்கான சாதாரண காரணங்களும் அதற்கு பரிகாரமும்.

1. *கிராமத்தில், குடியிருப்பவர்களுக்கு, ஆறு, ஏரி, குளம், முதலியவைகளே, பெருத்த ஜல ஆதாரமான இடங்கள். இவைகளின் ஜலத்தை, கிராமத்தார், அசுத்தம் செய்து வருகிறார்கள். இவர்கள், வாந்திபேதி, அம்மை, முதலிய தொத்து வியாதிகண்ட நபர்களுடைய வஸ்திரங்களைக் கொண்டுபோய், அந்நீர் நிலைகளில் தோய்ப்பதும், அவைகளுக்கு சமீபமான இடங்களிலும், கரைகளிலும், பிரேதங்களை தகனஞ் செய்கிறார்கள். பிரேதங்களின், தகனமான, எலும்பு, சாம்பல், முதலிய எல்லாவற்றையும், அந்த ஆறு, ஏரி, குளம், முதலிய நீர் நிலைகளுக்கு, மழைத்தண்ணீர் அடித்துக்கொண்டுபோகிறது. கிராம வண்ணார், பலபல அசுசியான வஸ்திரங்களைக் கொண்டுவந்து, அப்பேர்க்கொற்ற ஜலாதாரமான நீர் நிலைகளில், தோய்த்து வருகிறார்கள். ஜனங்கள் உபயோகிக்கும் அந்த குளங்களையே, ஆடு, மாடு, எருமை, முதலிய பிராணிகள், தண்ணீர் குடிப்பதற்கும், அவற்றை கழுவுவதற்கும், சில மூட ஜனங்கள் உபயோகிக்கிறார்கள். மேலும், பெரும் மரங்கள், கட்டைகள், மூங்கில்கள், பலபல நாருகள், முதலானவை, கொஞ்ச நாள்வரையில் ஜலத்தில்ஊறவேண்டியதாய் நேரிட்டு, அவைகளை, அக்குளங்களில் கொண்டுபோய் போட்டுவைக்கிறார்கள். அதை மூட ஜனங்கள், க்ஷீராப்தியாக பாவித்து, அதை தாகத்துக்கு உபயோகித்து வருகிறார்கள். இந்தப்படி செய்வதால், பெருவாரி நோய்கள் ஸம்பவித்து, ஒரு நொடியில், கிராமம் கிராமமாய், வாயில் போட்டுக்கொள்ளுகின்றன. இப்படி நேரிட்டும், தங்கள் கிராமத்திய குளங்களையும், ஏரிகளையும், ஆறுகளையும், நல்ல ஸ்திதியில் வைக்கவேண்டு மென்பதாய், எண்ணுவதும் இல்லை, தகுந்த ஏற்பாடு செய்வதும் இல்லை. இதற்கெல்லாம் காரணம், கிராம குடிகளுக்கு கல்வியில்லாமையே.*

2. மலஜலம் கழிக்கும் மறைவிடங்களுக்கு (புறக்கடைகளுக்கு) சமீபமாய், கிணறுகளை வெட்டியிருப்பதும், ஜலதாரை ஜலம், வெளியேபோய் விழுவதற்கு இல்லாமல் இருப்பதும், பிரதி நித்தியம், அசுசி உள்ள ஜலம், தளவரிசை கூடயில்லாத புழுதிநிலத்தில், ஊறிக்கொண்டேவருவதனால், அதன் சமீபத்தில் உள்ள கிணற்று சுத்தஜலத்தை முழுமையும், அசுத்தப்படுத்தி விடுகிறது. அப்போதைக்கு அப்போது, அதில் விழுந்து அழுகிக் கிடக்கும், பலபல வஸ்துக்களினாலும், தீரா வியாதியால் அல்லது வேறுகாரணத்தினால், கிணத்தில் விழுந்து, இறப்பவர்களுடைய மலம் முதலிய அசுத்தங்களினாலும், கிணறுகளைச் சுற்றி உயரமாய் சுவர்கட்டாமல் இருக்கும் இடங்களில், அவற்றில் விழும் கழுநீர் முதலிய நாற்றம் உள்ள ஜலங்களினாலும், அந்த தண்ணீரே, ஜனங்களின் உயிரை வாங்குவதாய் இருக்கின்றது.

3. ஆகையால், கிணறுகள் இருக்கும் இடங்களுக்கு சமீபமாக, அசுத்த ஜலம் ஊறவொட்டாதபடி, அவற்றில் விழும் மரங்கள், இலைகள், தீர்க்ககாலம் அதிலேயே அழுகிப் போகாதபடிக்கு, கிணறுகளை காப்பாற்றிக்கொண்டு வருவது, ஸர்வ உத்தமம். ஊற்றுப்பாங்கான இடங்களில், உண்டான ஜலம், கூடிய வரையில் சுத்தமானதென்றே கொள்ளவேண்டும். நம்மிட தேக ஆரோக்கியத்துக்கு இடமான இந்த காரியங்களில், தங்களுக்கு உபயோகமாகும் ஜலத்தையும், நீர் நிலைகளையும், நல்ல ஸ்திதியில் வைத்துக்கொண்டு இருக்கவேண்டியது, கிராமஸ்தர் கடமை அல்லவோ?

4. கிராமத்தில், வீட்டுப்புறக்கடைகளில், கண்ட இடத்திலும், சாணி, குப்பை, முதலியவற்றை போடாமல் ஒதுப்புறமான ஓர் இடத்தில் கொட்டி வைத்து, சேர்ந்தவுடன் எருவுக்காகவாவது, வேறே எந்த வேலைக்காகவாவது, அப்போதைக்கப்போது அப்புறப்படுத்தவேண்டும். வீட்டில் பிரதிதினமும் ஊற்றப்படும் ஜலமும், மழைக்காலத்தில் சேரும் வெள்ளநீரும், எளிதில் போகும்படிக்கு, ஜலதாரைகள்கட்டி, அவற்றில் அழுக்கு முதலானவை தங்காதபடி, அடிக்கடி சுத்தப்படுத்தி வரவேண்டும். அப்படி செய்யாத பக்ஷத்தில், அழுக்கு ஜலம், குட்டை குட்டையாகத் தேங்கி, அதில் கிருமிகள் ஜனித்து, விஷபேதி முதலிய தொத்து வியாதிகள் உண்டாவதற்கு காரணமாகும்.

5. பின்னும், பசுமாடுகளையும், சில சமயங்களில், முக்கியமாய் மழைக் காலங்களில், எருமை மாடுகளையும், தாங்கள் குடியிருக்கும் வீடுகளின் தாழ்வாரங்களிலும், நடைகளிலும், தெருத்திண்ணைகளிலும், கட்டிக்கொள்ளுகிறார்கள். அவ்விடங்களில், மேற்படி ஜந்துக்கள் சாணமிட்டு, கோமயம், முதலியவற்றால் அசுத்தமாக்கி, சஹிப்பதற்குகூடாத துர்க்கந்த நாற்றத்தை உண்டுபண்ணி, பலவித கொள்ளை நோய்களுக்கு, அஸ்திவாரம் போடுகிறதுபோல் ஆகிறது. வீட்டில் அதிகமான பாகம், முழங்கால் அளவு சேறும், உட்காரவாவது, படுக்க





வாவது, கொஞ்சமும் உலர்ந்த தரை இல்லாமல், ஓதமாயும், அந்த சொல்ப இடமும், மாடு முதலியவை மிதித்து சொள சொள என்று சேடையாயும், இருக்க, வீட்டைச் சுற்றிலும், குட்டைகுட்டையாய் ஜலம்தேங்கி, அவைகளுக்கு மத்தியில், புழுநெளிந்து, துர்கந்த நாற்றத்தை, நான்கு பக்கங்களிலும் வீசிக்கொண்டு இருக்கிற சாணிக் குப்பல்கள், சிறுசிறு திட்டுகள்போல தலை எடுத்துக் காட்ட பார்த்திருக்கும், ஒவ்வொரு கிராமகுடிகளும், அவர்கள் பெண்டு குழந்தைகளும், மழைகாலத்தில் படுகிற ஹிம்ஸை, இப்படிப்பட்டதென்று ஒருவாறு ஊஹிக்கலாம். இதனால், மாடுகளுக்குள்ளும், கோமாரி, வக்கை, தொம்மை, முதலான வியாதி உண்டாகி, கிராம குடிக்கு அதிக நஷ்டம் விளைவிக்கின்றன. ஆதலால், மாடுகளுக்காகப் பிரத்தியேகமாய் சிறு (தொழுவங்கள்) கொட்டாய்கள் கட்டி, அவைகளை காலமே, சாயந்திரம், இரண்டு வேளைகளிலும், குப்பை முதலியவை தங்காதபடிக்கு பெருக்கிவைக்க வேண்டும்.

6. அநேககிராமங்களில், ஒரே குளத்தில், மாடு முதலியவைகளைக்கழுவுவதும், கால் அலம்புவதும், துணி தோய்த்து ஸ்நானபானம் செய்வதும், வழக்கமாய் இருக்கிறது. இதனால் உண்டாகும் கெடுதி, ஜலம் மிகுதியாய் உள்ள மழைக்காலத்தில், அதிகமாய் தெரியாதிருந்தாலும், மழையில்லாமல் குளம் வற்றி, ஜலக்குறைவு உண்டாயிருக்குங்காலத்தில், நன்றாய் தெரியவரும். காற்று நமக்கு எப்படி ஜீவாதாரமோ, அப்படியே ஜலமும் ஜீவாதாரம். கெட்ட காற்றை, ஸ்வாஸத்தோடு உள்கொண்டால் எப்படி வியாதி உண்டாகுமோ, அப்படியே, அசுத்த ஜலத்தை பானம் செய்வதால், தேகத்துக்கு அசௌக்கியம் உண்டாகும்.

7. ஒருவேளை, சில வியாதிகள் கண்டிருந்தாலும், அவை இன்ன காரணத்தால் உண்டானவை என்று தெரிந்துகொள்ள ஞானம் இல்லாதவர்களாகி, அம்மை, பிடாரி, முதலியவற்றின் கோபத்தால் உண்டாயினவென்று பயந்து உபயோகமில்லாத சடங்குகள் செய்து, ஆடுவெட்டி, கோழி முறித்து, கிராமத்தை இன்னும் அதிக அசுத்தமாக்கி விடுவது வழக்கம்.

8. இப்பால், நாகரீகம் வளர்ந்துவருகிற இக்காலத்தில், மாடுகள் தண்ணீர் குடிக்க, கைகால் கழுவ, இவற்றிற்கு ஒரு குட்டையும், ஸ்நானபானத்துக்கு ஒரு தெண்ணீர் குளமும் உண்டாக்கி, ஒன்றை, மற்றொன்றுக்கு கையாடாதபடி, ஜாக்கிரதையாய் பார்த்துவரவேண்டும்.

9. கிராமத்தில் உள்ள புத்திமான்களும், செல்வாக்குள்ள ஜமீன்தார்களும். சுசியினால் உண்டாகும் பிரயோஜனம் இப்படிப்பட்டதென்றும், அசுசியினால் சம்பவிக்கும் கெடுதி இப்படிப்பட்டதென்றும், தங்கள் நாட்டு ஜனங்களுக்கு தெரியப்பட எடுத்துக்காட்டி, போதித்து, கிராமத்தில் அந்தந்த இடங்களில் உள்ள, நாகதாளி, முள் புதர்களைக்களைந்து, செருக்களை சமப்படுத்தி,

தண்ணீர்க்கால்கள் வெட்டி, வழிகளை சீர்படுத்தி, குளங்களிலும், கிணறுகளிலும், தூர்வாரி, சுகாதாரமான ஏற்பாடுகளை செய்வித்து, சுகமும், ஆனந்தமும், அடைவது, மிகவும் நலமாக இருக்கும்.

10. கிராமத்தில், அழுக்கு முதலிய அசுசிகள், வியாதிக்கு இடம் என்றும், இது பற்றியே, சுசியாய் இருந்தால் ஒழிய, கடவுளுக்கு செய்யவேண்டிய பூஜை முதலான கடமைகளை செய்யக்கூடாது என்றும், சுசியாயிருந்தால் உயர்குலத்தாருக்கு தகுதியான தென்றும், அப்படி தப்பி நடப்பது பாவமென்றும், புராணமுதலிய நூல்களால் வெளியிட்டிருக்கின்றன.

11. காலையில் தந்த சுத்தி செய்தல், ஆறு முதலிய ஊற்று ஜலத்தில் ஸ்நானஞ்செய்தல், ஒருவர் சாப்பிட மிகுதி அல்லது எச்சிலை வேறே ஒருவர் புசிக்கப்படாது எனல், உபவாசம் இருத்தல், இவைபோலொத்த ஒவ்வொருமத ஸம்பந்தமான காரியத்தையும் ஆராயுந்தோறும், இவைகளில் ஒவ்வொன்றும் நமது தேக சுத்தத்தை நோக்கியே பெரியோர் ஏற்படுத்தியதாக பாவிக்கவேண்டும். "ஆசாரத்துக்கு ஆசாரம், சுகத்துக்குச்சுகம்" என்று பழமொழி சொல்லவில்லையா.

12. இப்படியிருக்க, அனேகர் முன்னோருடையகருத்தை தெரிந்து கொள்ளாமல், மேலே சொல்லிய சுகானுகூலமான நடக்கைகளைமறந்து, வீடுகளிலும், புறக்கடைகளிலும், தெருக்களிலும், பலவிதகுப்பைகள் சேர்த்து, அழுகி நாற்றம் எடுக்கும்படி செய்கிறார்கள். இவைகள் எல்லாம் ஜனங்களின் ஆரோக்கியத்திற்கு குறைவானதே அல்லவா? "ஜெகத்தைக்கொடுத்து சுகத்தை வாங்கு" என்பதாய் பழமொழி யிருக்கிறதே. ஆதலால் இதை கவனித்து நடக்கவேணும்.

# NEWS AND NOTES.

# வர்த்தமான குறிப்புகள்.

## வடஆற்காடுஜில்லா—சித்தூர்.

நமது கலெக்டர்துரை.—ம-ா-ா-ஸ்ரீ, ஆர். எச். காம்பெல் துரை அவர்கள், இந்த ஜில்லாவுக்கு வந்து சொற்ப நாளைக்குள்ளாக, துரைத்தன காரியங்களில், சுவேச்சையாய் பக்ஷபாதமின்றி நடப்பதாய், நல்ல கியாதி சம்பாதித்தது, வியக்கத்தக்கதே

* * *

சைவஸித்தாந்த பிரஸங்கம்.—கஸ்பா சித்தூரில், வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தரநாயகர், இவ்விடத்திய ஹுஜூர் சிரஸ்தேதார், ம-ா-ா-ஸ்ரீ, குருசாமி நாயுடு அவர்கள், ஹெட் கிளார்க், இராமலிங்கமுதலியார், பிளீடர், அருணாசலமுதலியார் பி. எ, இவர்களின் பேர் உதவியைக்கொண்டு, சைவ ஸித்தாந்தத்தைப்பற்றி, கேட்போர் மெய்மறக்கும்படியாக, தேன்மாரியாய் பிரஸங்கித்து, எவர்க்கும் சர்ஹானந்தமாகப் புகட்டினர்.

* * *

பங்காரி ஜமீந்தார்.—ம-ா-ா-ஸ்ரீ, சேஷம நாயனிவாரு, ஏழை ஜனங்களின் தௌர்ப்பாக்கிய நிலைமையைக்குறித்து, "எண்ணும், எழுத்தும், கண் எனத்தகும்," என்னும் ஔவை வாக்கியத்தையும், "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு, மாடல்ல மற்றயவை" என்னும் நாயனார் வாக்கியத்தையும், "மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்" என்னும் வாக்கியத்தையும், மனதில்கொண்டு, கிடைப்பதற்கு அருமையான ஞானக்கண் செல்வத்தை, தானம் கொடுப்பது, தனக்கு என்றும், புகழும், கீர்த்தியும், இம்மண்ணுலகில் நீடித்து இருக்குமென்று எண்ணி, தனது ஜமீந்தாரியைச் சார்ந்த கஸ்பாசித்தூரில், இங்கிலீஷ் ஆந்திரபாடசாலை ஒன்றை, 1898-ம் ௵ ஜனவரி௴ 9௳ ஸ்தாபித்து, அதற்குவேண்டிய கட்டடமும், சாஸ்திர போதனைக்கு வேண்டிய கருவிகளும், பூகோளபடம் முதலியவைகளும், திரேகாப்பியாசத்திற்கு வேண்டிய உபகரணங்களும், சுமார் 5000 ரூபாய் வரையில் செலவழித்திருப்பதாய் கேள்விப்பட, இந்தஜமீந்தாருடைய கொடை உதாரகுணத்தைப் பற்றி மெச்சி நாங்கள் ஜமீந்தாருக்கு சபம் கொண்டாடுகிறோம்.

2. இப்பாடசாலையின், கல்வி போதனாதி நன்மையால் கல்விச்சாலை, நாளுக்குநாள் விருத்தியாகி, சென்ற 1897ம் ஆண்டில், ஒரு லோயர் ஸெகண்டரி வகுப்பும், ஏற்படுத்தி, தேகப்பயிற்சிக்கேற்ற சாதனங்களும் ஏற்படுத்தி, பாடசாலை கட்டடத்தையும், விசாலமாக்கி, அதிக சீர்திருத்தத்துடன், ஷை பாடசாலையில், சுமார் 130 பிள்ளைகளுக்கு அதிகமாகவே இருப்பதாக, தெரியவர, சந்தோஷிக்கிறோம்.

3. இப்பாடசாலையை, சென்ற வருஷத்தில், கவரன்மெண்டார், அங்கீகாரஞ் செய்தபடியாலும், அதற்கு அனுகுணமான சட்டம் தேறிய உபாத்தியாயர்களை, அமைத்தபடியாலும், ஷை பாடசாலை, இப்போதைய சீர்திருத்தத்துக்கு வர, ஹேதுவாயிற்று.

4. இப்பாடசாலை, இன்னும் வரவர, தனது அங்கங்களில் விருத்தியாகி, கூடிய சீக்கிரம் நல்லஸ்திதிக்கு வந்து முற்றிலும் காப்பாற்றி அருள்புரியும்படி எம்பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

5. கஸ்பா சிற்றூரில் வசிக்கும், வாசிப்புள்ளவர்களாயும், ஸஜ்ஜனர்களாயும் உள்ள பலர், பொருள் வரவு இல்லாமையால், இத்தேச வர்த்தமான பத்திரிகைகளை வாசித்து, காலம்போக்க இவ்விடத்தில் ஏற்பட்டிருக்கும் ரீடிங்ரூம்களைச்சேர்ந்து, சந்தா கொடுக்க சக்தி இல்லாதவர்களாய், தங்கள் வாழ்நாளை வீணாளாக்கி, காலத்தைப் போக்குகிறார்கள். இது, ரொம்பவும் பரிதாபமான காரியம்! இப்பெருங்குறையை நிவர்த்திக்க, இதுவரையில் எவரும் மேல்போட்டுக் கொள்ளவில்லை. மேலேகண்ட பாடசாலைக்கு, இதுவரையிலே உதவிசெய்தும் இனி செய்யவும் இருக்கிற, பரோபகார சிந்தையுள்ள, நமது ஜமீந்தார் சேஷமநாயனிவாரு அவர்கள், தீர்க்கமாய் யோசித்து, ஷை பாடசாலை கட்டடத்திலேயே, ரீடிங்ரூம் ஒன்றை, ஷை பாடசாலை ஸம்பந்தமாய் ஸ்தாபித்து, தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபிமானம் பெருகச்செய்து, தன்பெயரை நிலைநாட்டி, மாயாப்புகழ்பெற்று, பல்லாண்டுவாழ, பரந்தாமனைப் போற்றி, நம் இறகை தளர விட்டனம்.

நம் சுபம்! ஓம் மங்களம்! ஓம் மங்களம்.

# கிராமவியவஹாரிணி.

## விசேஷ விளம்பரம்.

நெ. 1. இந்த பத்திரிகைக்கு நூறு சந்தாதார்களை சேகரித்து அனுப்புவோர்க்கு பிரதி நூறு சந்தாதாருக்கு, பத்து ரூபா கம்மிஷன் கொடுக்கப்படும்.

2.—இப்பத்திரிகைக்கு, 2,500 சந்தாதாரர்களுக்கு குறைவு இல்லாமல் சேர்ந்து முன்பணம் அனுப்பி அபிமானிக்கும் பக்ஷத்தில், சந்தா வசூல் தொகையில், 1,000 ரூபாய் வருஷப் பிரதி பிரத்தியேகமாக எடுத்து வைத்து, இது முதல் நாளது வருஷம் ஜுன்மீ 30உக்குள் சேர்ந்த சந்தாதாரர்களில், கிராமஸ்தர்களாய் இருந்து மீ 1-க்கு 15 ரூபாயிக்கு மேல்படாத வருமானம் இல்லாதவர்களாயும், வேறே ஆதரவு இல்லாதவர்களாயும், இருந்து, அது உண்மை என்பதாக, கிராமமணியகார், பிர்க்கா ரெவினியூ இன்ஸ்பெக்டர், தாசில்தார் அல்லது ஸப்மேஜிஸ்திரேட்டு, இவர்களின் ஸெர்டிபிகேட்டை அடைந்து, தாக்கல் செய்தபக்ஷத்தில்; வருகிற 1900வரு ஜுலைமீ தொடங்கி தெய்வீகமாகும் மேலே கண்ட சந்தாதாரர்களின் நோவார்சுதாரர்களுக்கு மாத்திரம். அந்தந்த வருஷமுடிவில் பரோபகாரமாய் மேற்படி 1,000 ரூபாயை சரிபங்காக பங்கிட்டுக்கொடுத்து ஆதரிக்கப்படும். ஆனால் நாளது ஜுன்மீ 30உக்குப் பின் சேரும் சந்தாதாரர்களுக்கோ, மேற்படி பரோபகார உதவிப் பொருள் கிடைக்க மாட்டாது; என்பது ஸ்பஷ்டம். ஆகையால், முக்கியமாய் கிராமஸ்தர், மணியகார், கணக்கப்பிள்ளை, இவர்கள் இத்தருணத்தை அசிரத்தையாய் போக்கடித்துக் கொள்ளாது கண்டிப்பாய் கவனிக்க வேண்டும்.

திரு. விஜயராகவ பிள்ளை,
காரியத்தலைவர்,
கிராம வியவஹாரிணி ஆபீசு.

நார்த் ஆர்க்காடு ஜில்லா,
சித்தூர், 1899வரு ஜுன்மீ 12உ.

| | | இராகுகாலம் (கெட்டவேளை) | | | | குளிகை காலம் (நல்லவேளை) | | | | வாரசூலை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ...நாமம் | காலம் | ஏது முதல் | | ஏது வரை | | காலம் | ஏது முதல் | | ஏது வரை | | வாரம் | காலம் | நாழிகை | திக்கு |
| | | ம. | வி. | ம. | வி. | | ம. | வி. | ம. | வி. | | | | |
| ...யிறு | மாலை | 4 | 30 | 6 | 0 | மாலை | [illegible] | 0 | 4 | 30 | ஞாயி, வெ | காலை | 10 48 | மேற்கு |
| ...கள், | காலை | 7 | 30 | 9 | 0 | மாலை | 1 | 30 | 3 | 0 | | | | |
| ...வ் | மாலை | 3 | 0 | 4 | 30 | பகல் | 12 | 0 | 1 | 30 | திங், சனி | ஷை | 9 12 | கிழக்கு |
| ...ன் | பகல் | 12 | 0 | 1 | 30 | காலை | 10 | 30 | 12 | 0 | | | | |
| ...ாழ.. | மாலை | 1 | 30 | 3 | 0 | காலை | 9 | 0 | 10 | 30 | செவ், புதன் | பகல் | 12 24 | வடக்கு |
| ...ள் | காலை | 10 | 30 | 12 | 0 | காலை | 7 | 30 | 9 | 0 | | | | |
| ...ி | காலை | 9 | 0 | 10 | 30 | காலை | 6 | 0 | 7 | 30 | வியாழ | ஷை | 2 0 | தெற்கு |

| பஸ்லி வருஷங்கள் 1308-ம் 1309. ...ல் முதல் ஜூன்வரையில். | அமாவாசை, கிருத்திகை, ஏகாதசி, பௌர்ணமி, கரிநாள், கிரஹணங்கள் முதலியவை. | அபிஷியல் வருஷங்கள் 1898-99-ம் 1899-1900 ஏப்பிரல்முதல், மார்ச்சுவரையில், |
|---|---|---|

| அமாவாசை. | கிருத்திகை. | ஏகாதசி. | பௌர்ணமி. | * கரிநாள். | தொ. | கிரஹணங்கள் + | தேதி. | பரிச காலம். | மோக்ஷ காலம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | ம. வி. | ம. வி. |
| 11 | 21 | 8, 22 | 26 | 13,14,15,23,29 | | | | | |
| 10 | 17 | 6, 7, 21 | 25 | 25, 26, 27 | | | | | |
| 11 | 16 | 8, 22, 23 | 26 | 18, 27, 31 | 1 | சூரி | 12 1 99 | ... | ... |
| 9 | 12 | 6, 21 | 25 | 17, 26 | | | | | |
| 9 | 10 | 5, 6, 21 | 24 | 19, 28, 29 | 2 | சூரி | 8 6 99 | ... | ... |
| 7 | 6 | 4, 19, 20 | 23 | 14, 19 | | | | | |
| 7 | 3-30 | 3, 19 | 22 | 16, 24 | 3 | சந் | 23 6 99 | மா 5-54 | மா.9-24 |
| 6 | 27 | 2, 17, 31 | 20 | 3, 16, 23 | | | | | |
| 4 | 23 | 15, 16, 30 | 19 | 11, 30 | 4 | சூரி | 3 12 99 | ... | ... |
| 4 | 21 | 15, 3 | 18 | 13, 21 | | | | | |
| 3 | 17 | 13, 29 | 16 | 4, 15, 20, 24 | 5 | சந் | 17 12 99 | கா 5-6 | கா-8.28 |
| 2 | 14 | 13, 28 | 16 | 1, 19, 22, 24 | | | | | |

* இந்நாள்களும், இவைகளுக்கு முந்திய ராத்திரிகாலங்களும், நல்லகாரியங்கள் செய்ய ...பிக்கப்படாது.

+ கிரஹணங்கள் வகரா.—1. அசம்பூர்ணம், ஆனால் இந்தியாவில் தெரியாது.

2. அசம்பூரணம், ஆனால் இந்தியாவில் தெரியாது.

3. சம்பூரணம், இந்தியாவில் தெரியும்—விரதநாள்.

4. சர்க்கண கிரஹணம், ஆனால் இந்தியாவில் தெரியாது.

5. அசம்பூர்ணம், இந்தியாவில் தெரியும்—விரதநாள்.

67649

# கிராம வியவஹாரிணி.

இந்த சஞ்சிகை, மூன்று மாதத்துக்கு ஒரு விசை, பிரசுரஞ் செய்யப்படும்.

இதற்கு வருஷசந்தா, தபால் செலவுடன், ரூ. 2-2-0, முந்தி அனுப்பவேண்டும்.

இதற்கு போஷக சந்தா, ரூ. 10-0-0.

இந்த சந்தாவை, முந்தி அனுப்பி போஷிப்பவர்களுக்கு, சஞ்சிகையின் ஒர் பிரதி, பிரசுரந்தோறும், பத்திரிகையின் ஆபீசிலிருந்து, வேறே சந்தா இல்லாமல், அனுப்புவதும் அல்லாமல், அவர்களின் பெயரை, இப்பத்திரிகை போஷகர்களாக, பிரசுரித்துக்கொண்டு வரப்படும்.

I. இந்த சஞ்சிகை இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படும்.

முதலாம் பிரிவில், எச்சமையத்தாரும், புருஷர்களும், ஸ்திரீகளும், சிறுவர்களும், சிறுமிகளும், படித்து, உல்லாசிக்கத்தக்கதாயும், சத்தியம், சன்மார்க்கம், ஜீவகாருண்யம், முதலிய நீதிமார்க்கத்துக்குத்தக்க (1) தெய்வவணக்கம், (2) இராஜபக்தி, (3) சைவ, வைஷ்ணவ புராணங்கள், (4) புண்ணிய சரித்திரச் சுருக்கங்கள், (5) கல்வி, கனம், கீர்த்தி, இவைகளில் பிரசித்திபெற்ற பிரமுகர்கள், பத்திராதிபர்கள், கவிராஜர்கள், வித்வசிகாமணிகள், இவர்களின் ஜீவிய சரித்திரங்கள், உபந்நியாசங்கள், (6) பழமொழிக்கோர்வைகள், (7 வைத்திய குறிப்புகள், (8) கால்நடை வியாதி சிகிச்சைகுறிப்புகள், (9) சாஸ்திரியமும், விநோதமும், அற்புதமான கதைகள், (10) நகைப்பு உண்டாகும் விகட விநோதங்கள், விடுகதைகள், முதலியவைகள், வசனமாயும், கேள்வி, விடை ரூபமாயும், விவேகமும் விநோதமுமான சம்பாஷணையாயும், சந்தி, சிக்குகள், இல்லாமலும், செப்பமாய் கேட்போர் காதுக்கு இனிப்பாகவும், வாசிப்போருக்கு தெவிட்டாத அமிர்தமாகவும், பிரசுரஞ் செய்யப்படும்.

இரண்டாம் பிரிவில், கிராம உத்தியோகஸ்தர்களும், கிராம குடிகளும், கிராம வியவஹாரங்களைப்பற்றிய, (1) சட்டதிட்டங்கள், (2) ஹைக்கோர்ட்டு, ரிவினியூ போர்டு, கலெக்டர்கள் உத்தரவுகள், (3) கிராம சுகாதாரம் முதலியவைகளின் முக்கிய லௌகிக வியவஹார நுட்பங்களை, மனதைக் கலவரப்படுத்தும் சட்டபாஷையாய், சந்தி, சிக்கு, முதலானவைகளாய் இல்லாமல், எளிதில், கிரஹிக்கும்படி, சுருக்கமாயும், சுலபமாயும், தெளிவாயும், வழக்கச்சொற்களால் மனோரஞ்சிதமாயும், (4) வர்த்தமான குறிப்புகளும், பிரசுரஞ் செய்யப்படும்.

II. கணக்கர்களுக்கு, உபயோகமாக, ஸர்வே என்னும் வழக்கும், நில அளவைச்சார்ந்த விதிகள், தெளிவான நடையில், பிரசுரஞ் செய்யப்படும்.

III. இதைப்பற்றி, பின்னும் விசேஷமாய் தெரிந்துகொள்ள வேண்டியவர்கள், அரை அணா தபால் முத்திரை அனுப்பி, விசேஷ விளம்பரத்தை யுபெற்று வாசித்துத் தெரிந்துகொள்ளலாம்.

திரு. விஜயராகவ பிள்ளை,
காரியதரிசி,
கிராம வியவஹாரிணி ஆபீசு.

நார்த் ஆர்க்காடு ஜில்லா,
சித்தூர், 1899வது ஜுன்மீ 12உ